Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாணிதாசன்

இலக்கியத் திறன்

டாக்டர்
மு.பி.பாலசுப்பிரமணியன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
D-7723

DONATION

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாணிதாசன் இலக்கியத்திறன்

7723

DONATION

டாக்டர் மு.பி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்ப்பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.

முத்து நிலையம்
124/3, பாரதி குடியிருப்பு
அண்ணாநகர்-சென்னை-40.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற்பதிப்பு : டிசம்பர், 1989
உரிமை ஆசிரியருக்கு

காணிக்கை

புரட்சிப் பாவேந்தர்
பாரதிதாசன்
அவர்களுக்கு.

விலை : ரூ. 20-00

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் சாலை,
சென்னை-6000 014.

நூல் அமைப்பு :
பா. கலையரசி, [பி.ஏ.]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009
நாள் : 22-12-1989

DONATION

அணிந்துரை

புதுவை தந்த பூங்குயில் கவியரசர் வாணிதாசன் கவிதைகளில் தோய்ந்த பேராசிரியர் மு.பி. பால சுப்பிரமணியம் எழுதிய 'வாணிதாசன் இலக்கியத் திறன்' என்னும் இந்நூல் ஆய்வுப் போக்கையும் கவிதை அழகையும் கலையோவியமாகக் காட்டு கிறது.

புதுவை மண்ணுக்குப் புரட்சிக் கருத்துக்களைப் பொழியும் பாங்கு இயல்பானது. பாவேந்தரைத் தந்த புதுவை மாநிலம் கவிஞர் வாணிதாசனை யும் நமக்கு வழங்கியது. கொள்கைப் பிடிப்பும் கனிந்த நெஞ்சப் பிணைப்பும் கொண்டிருந்த கவியரசர் வாணிதாசன் பாடல்களும் கருத்துக் களும் வருங்காலத் தலைமுறைக்குப் பயனாகும் வண்ணம் பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியம் தம் ஆய்வுப்படைப்பை வடிவாக்கியுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாவேந்தர் பாசறையின் படைவீரராகத் திகழ்ந்த வாணிதாசர் "வழிகாட்டும் எங்கள் வளமார் கலைஞர் விழிநாட்டிற்கென்றே விளம்பு" என்று என்னை வாழ்த்தியவாறே பாடிப் பறந்து விட்டார். கவியரசர் வாணிதாசனின் அன்பும் பண்பும் இன்றும் என் நினைவில் நிழலாடுகின்றன.

நண்பர் டாக்டர் மு.பி. பாலசுப்பிரமணியம் வழங்கும் இவ் விருந்து நூலை வரவேற்று மகிழ்கிறேன்.



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்த்துரை

மாண்புமிகு. பேராசிரியர்
டாக்டர் க. அன்பழகன்

"இளைஞராக இருக்கின்ற மு.பி. பாலசுப்பிரமணியன் ஒரு பேராசிரியராகப் பணிபுரிகின்றார், ஒரு கொள்கையோடு, நெறியோடு வாழ்கிறார் என்பதைப் பார்க்கின்றபோது நான் பெருமகிழ்வு அடைகிறேன்.

"இனிய கவிதைகளை, செந்தமிழ் வளர்க்கிற உணர்வுடைய கவிதைகளை, பல்வேறு நடைகளில் பாங்குற இயற்றியவர் மு.பி. பாலசுப்பிரமணியன்.

"கவிஞர் வாணிதாசன் கவிதைகளைப் பற்றி அவர் ஆய்வு நடத்த முற்பட்டது மிகப் பொருத்தமான கடமை என்று நான் உணர்கிறேன். கவிஞர் வாணிதாசன் அவர்கள் பாவேந்தருடைய மாணவராக, அவர் தம் தோழராக, சிறந்த கவிஞராக விளங்கியவர், கவிஞரோடு சேர்ந்து வாழ்கிறவர் களெல்லாம் கவிஞராவதில்லை. ஆனால் கவிஞர் வாணிதாசன் பாவேந்தரிடமிருந்து தலைசிறந்து விளங்கி யவர்.

"கவிஞர் வாணிதாசன் முற்போக்குச் சிந்தனைகளை உடையவர்...அவர் ஒரு மரபுக் கவிஞராக, அதேநேரத்தில் புதுமை உணர்வை வரவேற்கிற கவிஞராக, நல்ல சிந்தனை யாளராக விளங்கியது சிறப்பிற்குரியது. எனவே, வாணிதாசனைப் பற்றி ஆய்வு நடத்தியது மூலமாக, பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரையில் ஒரு தலைசிறந்த கவிஞரை, நம் மு.பி. பாலசுப்பிரமணியம் அனைத்துக் கோணத்திலும் ஆய்வு செய்திருக்கிறார்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞர் வாணிதாசன் ஒரு புதுமையான தமிழகத்தைக் கனவு கண்டார். 'தமிழை இகழ்ந்தால் குழவிக்கும் மன்னிப்பில்லை' என்றவர் அவர். தமிழை இகழ்ந்தவர்கள் எத்தகைய மேலான நிலைக்குப் போனாலும் அவர்கள் கீழே தான் வருவார்கள் என அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழுக்குப் பகையாய் இருப்பவர்கள் தமிழகத்தில் தலைகாட்ட முடியாதென்றும் அவர் பாடியுள்ளார்.

ஆண்டான் அடிமை வேண்டாம். ஒவ்வொரு தமிழன் வீட்டிலும்—தாய்மொழிக்கு ஆக்கம் தேவை. சோற்றைப் பகிர்ந்தால் வேற்றுமை இல்லை. துடியிடையாரை அடிமையாக்காதே, இப்படி ஒரு புரட்சிச் சிந்தனைகளின் பெட்டகமாக—புதுமைச் சிந்தனைகளின் களஞ்சியமாக—அவர் கவிதைகள் விளங்கின.

இவ்வாறு, இருபதாம் நூற்றாண்டு இளைஞர் உள்ளத்தில், தன்னுடைய இனத்தை உயர்த்தி எப்படி வாழ வேண்டும் என்பதை, ஓர் உயர்ந்த எண்ணமாக உருவாக்கியிருக்கிறார் அவர்.

கரு, உரு, திரு மூன்றும் வாய்ந்ததாக இருப்பதுதான் கவிதை. இந்த அடிப்படையில் அமைந்ததுதான் வாணிதாசன் கவிதைகள் என்பதை இந்த ஆய்வு நூலில், மு.பி.பா. குறிப்பிடுகிறார்.

இவ்வாய்வு நூலைப் படைத்துத் தந்த இளவல் மு. பி. பா.வைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

*[28-3-87 அன்று அண்ணாநகரில் நடைபெற்ற "வாணிதாசன் கவிதைகள் - ஓர் ஆய்வு" நூல் வெளியீட்டு விழாவில் **பேராசிரியர்** ஆற்றிய உரையிலிருந்து தொகுக்கப் பெற்றது.]*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திறனாய்வுரை

மாண்புமிகு முனைவர்
மு. தமிழ்க்குடிமகன்

நண்பர் மு. பி. பாலசுப்பிரமணியம் ஒரு தமிழ்ப் பேராசிரியர்; தமிழ் அறிஞர். முனைவர் பட்டம் பெற்றவர். முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்கட்கு வழிகாட்டியாக விளங்குபவர்.

எனவே மற்றவர்கள் எழுதுவதுபோன்று 'பொத்தாம் பொது'வாக அவரால் எழுத முடியாது. நூற் கருத்துகளை அலசி ஆராய்ந்து, வகை தொகைப்படுத்தி உரிய தலைப்பு களின் கீழ் அவற்றைக் கொணர்ந்து அழகுபட அமைத்துத் தருகிறார் ஆசிரியர்.

வாணிதாசன் ஒரு காலகட்டத்தின் சிறப்புக் கவிஞ ராவார். பாரதிதாசன் வழித்தோன்றல்களாக ஒரு கட்டத் தில் விளங்கிய கண்ணதாசன், பட்டுக்கோட்டை, முடியரசன், வாணிதாசன் ஆகியோர் தமிழ்க்கவிதையைச் சுவைப்போர் நெஞ்சில் மாறாத இடம் பெற்றனர். நால்வரும் திராவிட இயக்கக் கவிஞர்களாக விளங்கியதால் அவற்றின் தாக்கம் அவர்களது கவிதைகளில் மிளிர்வது இயல்பு. கண்ணதாசன் பின்னாளில் தேசியச் சிந்தனையும் தத்துவமுமாக வளர்ந்து விட்டார். பட்டுக்கோட்டை பொதுவுடைமைக் கோட்பாடு களில் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக் கொண்டார். முடியரசன், வாணிதாசன் ஆகிய இருவரும் கடைசிவரை ஒரே நிலையில் வாழும் கவிஞர்களாகவே திகழ்ந்தனர்.

அதிலும் வாணிதாசன் பாரதிதாசனின் பக்கத்தில் வாழ்ந்தது போலவே, பாவேந்தரின் கவிதைத் தாக்கத்தால் பாதிப்புக்கும் உள்ளானார்.

குறிப்பாக பாவேந்தர் அழகின் சிரிப்பைக் காட்டினால் வாணிதாசன் எழிலோவியத்தையும் எழில் விருத்தத்தையும் காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கையைப் பற்றிப் பாடுவதில் மேனாட்டுக் கவிஞன் வோர்ட்ஸ்வொர்த்துக்கு என்ன பெயருண்டோ, அதே சிறப்புப் பெயர் பாரதிதாசனுக்கும் உண்டு. அந்தச் சாயலி லும் அந்த வரிசையிலும் வாணிதாசன் இடம் பெறும் அளவுக்கு இயற்கை ஈடுபாடு இணையற்றதாகவே விளங்குகின்றது.

இந்தப் பகுதியை நூலாசிரியர் தக்க எடுத்துக்காட்டு களுடன் நிறுவியுள்ளார்.

உவமைகளைக் கையாள்வது எந்த இலக்கியவாதிக்கும் பொதுவான செய்தியே ஆகும். ஆனால் அதில் அனைவரும் வியந்து நோக்கும் வகையில் கையாள்பவர்கள்தான் வெகுவாக நம் நெஞ்சில் இடம் பிடிக்கின்றனர். எளிய உவமைகளைச் சரமாரியாகக் கையாள்வதில் அறிஞர் அண்ணாவுக்குச் சிறப்பிடம் இருப்பதை அறிவோம்.

கலைஞர் தன் கதைகட்டுரைகளுக்கிடையே அருமை யான உவமைகளைக் கையாள்வதால்தான் அவரது எழுத்துக்கள் நம்மை ஈர்க்கின்றன என்பதை அறிவோம்.

'ஆடும் மாடும்' நூல் தி. கே. சீனிவாசன் கையாளும் உவமைகள் இன்றும் நினைவில் நிற்கின்றன.

அந்த வகையில் வாணிதாசன் உவமைகள் சிறப்பாக அமைந்துள்ளன.

மகளிர் இடைக்குக் குற்றியலுகரத்தின் வரியை உவமை யாகக் கூறும்போது கவிஞரின் தனியாற்றல் பளிச்சிடுகின்றது. இதுகுறித்து நூலாசிரியர் தரும் விளக்கம் சிறப்பாக உள்ளது.

"குற்றியலுகரத்தின் ஒலியை உவமையாக எடுத்தாண்ட முதற் கவிஞர் வாணிதாசரே என்றால், அது மிகையாகாது என்பர். இது போல் உகரம் அரிவாளுக்கும், எழுத்துப் புணர்ச்சி காதலர் உளம் ஒன்றுவதற்கும், ஆய்தப்புள்ளி அடுப்புக்கும் உவமைப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் புதிய உவமைகளைப் படைக்கும் கவிஞரின் தனித்திறன் புலப்படு கிறது எனலாம்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உவமையோடு நகைச்சுவையும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா? பாரதி, பாரதிதாசன் ஆகிய அனைவரும் நகைச்சுவைபட எழுத வல்லவர்களே. அந்த வரிசையில் வாணிதாசன் வருகிறார்.

"உப்பிய வயிற்றைத் தூக்கி
ஒருபையன் ஓடி வந்தான்;
சப்பிய பனங்கொட் டையோ?
தலையோ?என் றையங் கொண்டேன்!

என்னும் பாடலில் நகைச்சுவை உவமையின் நயத்தினை நன்கு உணரலாம்."

ஒரே பாடலில் அடுக்கடுக்காகப் பல உருவகங்கள் திகழ்வதைக் கண்டு மகிழ முடிகிறது.

"வானிடை ஒளிப்பிழம்பின்
வட்டமோ? வெள்ளித் தட்டோ
பானைமோர் மிதக்கும் வெண்ணெய்ப்
பற்றலோ? சிறுவர் பந்தோ?
மானமே உயிராய் வாழ்ந்த
வீரர்கைப் பரிசை தானோ?
தேனிடை நிலவே!......"

என்று ஒரே பாடலில் அடுக்காகப் பல உருவகங்கள் அமைந்து நிலவுக்கு நயமூட்டுகின்றன.

கவிஞருடைய சொல்லாட்சித் திறனையும் (Poetic Diction) கவிநயத்தையும் நூலாசிரியர் நன்கு புலப் படுத்துகிறார்.

"'வாய்ச் சிரிப்பை முல்லை மலர் பாய்விரித்துக் காட்டும்' என்றும், '...பல்லில்லை வாயில், மாதுளையின் வித்தென்று சொல்லுவாறென்றா நீ வாய்திறவாதிருக் கின்றாய்?' என்றும், 'கதவின் இடுக்கில் கண்ணொளி பாய்ச்சி இதயத்துள்ளே ஏற்றினான் அன்பை!' என்றும் 'சிட்டுச் சிறுவனின் செங்கைக் கரும்புகள் தொட்டுப் பிசைந்தன பொங்கல்!' என்றும் அவர் பாடியுள்ள பகுதிகளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லாட்சித் திறனும் கவிநயமும் பின்னிப்பிணைந்து சிறந்தோங்குவதைக் காணலாம்.''

இரட்டுற மொழியும் திறன் கவிஞர்களுக்கு இயல்பாகவே இருக்கும். அதிலும் பாட்டரங்கேறும் அனைவர்க்கும் இன்றும் அதிகமாகவே இருக்கும். பல பாட்டரங்குகளைப் பார்த்து விட்ட வாணிதாசனுக்கு எத்தகைய திறன் உண்டு என்பதை நூலாசிரியர் நன்கு படம்பிடித்துக் காட்டுகிறார்.

"'......கட்டில் மீது
வம்பளந் திருப்பார் காதல்
மணமக்கள்; அவர்கள் பேச்சைக்
கம்மலாய் எரிந்து கேட்டுக்
காதோடே வைத்தி ருப்பாய்!'

என்னுமிடத்தில் 'கம்மலாய்' எனுஞ்சொல் 'மங்கலாக' எனும் பொருளிலும் 'கம்மல் எனும் காதணியாக' எனும் மற்றொரு பொருளிலும் இயற்கையாய் அமைந்து சிறப்பதைக் காணலாம்.

இச் சிலேடை நயம் வாணிதாசனின் பாட்டரங்கப் பாடல்களில்தான் பெருகிய வழக்காக இடம் பெற்றுள்ளது. அதற்குக் காரணம் கேட்போருக்கு உடனடிச் சுவையூட்டும் பாட்டரங்கப் பாணியாகக் கவிஞர் அதனைக் கருதியிருக்கலாம்.''

'செந்தமிழ்க்கே சொந்தம் எது?
சிந்துப்பாட்டு'

எனும் உடுமலையாரின் கவிதை ஒரு திட்டவட்டமான தமிழ் உடைமையின் சிறப்பைப் பேசிவிடுகிறது. தற்போது நாட்டுப்புறப் பாடல்கள், அதிலும் சந்தமுள்ள சிந்துப் பாடல்கள் ஆகியவை தமிழர்களிடையே புதிய செல்வாக்கைப் பெற்றுள்ளன. பாரதி பெயர் பெற்றதில் அவனது சிந்துப் பாடல்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

'அவனொரு செந்தமிழ்த் தேனீ!
சிந்துக்குத் தந்தை

எனும் பாவேந்தர் வரிகளை நினைத்துப் பார்ப்போம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் போக்கில் வாணிதாசனும் சிறந்து விளங்குகிறார் என்பதை நூலாசிரியர் நன்கு எடுத்துக் காட்டுகிறார்.

" 'ஆட்டுக் குட்டி முன்கால் தூக்கி
அங்கும் இங்கும் துள்ளும்!—அதன்
அழகு நெஞ்சை அள்ளும்!
ஆட்டுக்குட்டி ஓடி ஓடி
'அம்மா' என்றே கத்தும்!—தாய்
ஆட்டின் மடியை முட்டும்!"

என்னும் பாடல் பின்னடி மடக்கி அளவடியானும் சிந்தடியானும் வந்த நாமுச்சீர் இரட்டை ஆகும். சிந்து மெட்டில் அமைந்த இப்பாடல் குழந்தைகளின் நெஞ்சங்களை எல்லாம் அள்ளும் வகையில் அமைந்துள்ளது எனலாம். அங்கும் இங்கும் துள்ளும் ஆட்டுக்குட்டியோடு குழந்தைகளின் மனமும் மகிழ்ச்சியால் துள்ளும் வகையில் பாடலில் சந்த அமைப்பு, சிந்து பாடுவதைக் காணலாம்."

இப்படிப் பல கோணத்திலும் வாணிதாசனை நுணுகி ஆராய்ந்து அருமையானதோர் ஆராய்ச்சி நூலைப் படைத்திருக்கும் மு. பி. பாலசுப்பிரமணியம் பாராட்டுக்குரியவராகிறார்.

ஒரு படைப்பை எடுத்துக்கொண்டு அக்கு வேறு ஆணி வேறாக அலசிவிடுவது என்று முடிவு செய்தால் அதில் கிடைக்கும் நயமும் சுவையும் மிகுந்த பகுதிகள் எப்படியிருக்கும் என்பதற்கு இந்த நூல் சான்றாகும்.

தமிழ் அன்பர்கள் விலை கொடுத்து வாங்கிப் பயின்று பாதுகாத்து வைக்கும் அளவுக்குத் தகுதியும் சிறப்பும் வாய்ந்த நூல் இது!

சென்னை-
28-11-89

மு. தமிழ்க்குடிமகன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெஞ்சில் நிறுத்துங்கள்!

"எல்லாரும் நல்லாரென் றெண்ணுவார் இன்றமிழ்
வல்ல கவிவாணி தாசனார்—அல்லும்
பகலும் தமிழர்தம் பண்பாடு பற்றிப்
புகலும்பாட் டொவ்வொன்றும் பொன்"

—பாவேந்தர் பாரதிதாசன்

"தமிழர் நாட்டைத் தமிழர் ஆளத்
தக்க காலம்] வந்தது!
தைரி யங்கொண் டேவிரைந்து
தலைநி மிர்ந்து நில்லடா!"

—கவிஞரேறு வாணிதாசன்

"மனித சமுதாயத்திற்குப் புதிய புதிய கவிதை களை படைத்துத் தொடர்ந்து நடந்தோரில் வெற்றிகர மாக முன்னேறியவர் தோழர் வாணிதாசன். அவரது கவிதைகளைப் படிக்கும்போது சில சமயங்களில் பாரதி தாசனுக்கு முன்னாலே போகிறார் என்ற எண்ணந் தட்டும். சொல்வளம், கற்பனை ஊற்று என்ற இரண்டும் வளமாகப் பெற்றவர் கவிஞர் வாணிதாசன். 'கவிஞர்கள் பிறக்கிறார்கள். செய்யப்படுவதில்லை' என்பது இவர் வரையில் உண்மை. இவரது பாடல் களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் 'நோபல் பரிசு' பெறக்கூடும்."

—கவியரசர் கண்ணதாசன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னுரை

பாரதிதாசன் பரம்பரையைச் சேர்ந்த பகுத்தறிவுக் கவிஞர் வாணிதாசனாரின் கவிதைகளை 'முனைவர்' பட்டத்திற்கு ஆய்வு செய்த போழ்து நான் சேகரித்து வைத்த குறிப்புகள் ஏராளம்.

அவற்றுள், ஆய்வுக்குப் பயன்பட்டவை போக, எஞ்சியவற்றை மீண்டும் பார்வையிட நேர்ந்தபோது வாணிதாசனாரின் உவமை நயம், உருவக நலன், சொல்லாட்சித்திறன்பற்றி மேலும் விரிவாக எழுதவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அதன் விளைவே, இந்நூல் எனலாம்.

பல்வேறு பணிகளுக்கிடையிலும், என்பால் கொண்ட பாசத்தின் காரணமாக அழகியதோர் அணிந்துரையினை அளித்துப் பெருமைப்படுத்திய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்,

இரண்டு ஆண்டுகளுக்குமுன்பே எனது அன்பான அழைப்பினை ஏற்று, வாணிதாசனாரைப் பற்றிய எனது முதல் ஆய்வு நூலை வெளியிட்டு, மனமார வாழ்த்தியருளிய மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் பேராசிரியர்,

தேனினும் இனிய தீந்தமிழ் நடையால் ஆய்வுக்கோர் ஆய்வுரை வழங்கிச் சிறப்பித்துள்ள என் இனிய நண்பர் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகனார்,

—இந் நன்னெஞ்சங்களை நன்றியுணர்வோடு நினைந்து என்றென்றும் போற்றக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறித்த காலத்தில் நூலை அச்சிட்டுக் கொடுத்த மாருதி அச்சகத்தார், என்றும் என் நெஞ்சில் நிறைந்துள்ள பாரிநிலையத்தார், ஓவியக்கவிஞர் அமுதபாரதி ஆகியோருக்கு எனது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

சென்னை-40,
25-12-1989

மு.பி. பாலசுப்பிரமணியன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

வா.க. 1	—	வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி
வா.க. 2	—	வாணிதாசன் கவிதைகள், 2-ஆம் தொகுதி
தமி.	—	தமிழச்சி
கொ. மு.	—	கொடி முல்லை
பா. பா.	—	பாட்டரங்கப் பாடல்கள்
பா. பி.	—	பாட்டுப் பிறக்குமடா
எ. ஓ.	—	எழிலோவியம்
எ. வி.	—	எழில் விருத்தம்
சி. நு.	—	சிரித்த நுணா
இ. வ.	—	இரவு வரவில்லை
இ. இ.	—	இன்ப இலக்கியம்
இ. பா.	—	இனிக்கும் பாட்டு
கு. இ.	—	குழந்தை இலக்கியம்
தீ. யா.	—	தீர்த்த யாத்திரை
தொ. வ.	—	தொடு வானம்
பொ. ப.	—	பொங்கற் பரிசு
ப.	—	பக்கம்
பக்	—	பக்கங்கள்
வ	—	வரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

பக்கங்களுடன்

1. இயற்கைப் புனைவு

இயற்கையும் கவிஞர்களும் - 17; இயற்கையும் மனித வாழ்வும் - 18; உயிரும் உணர்வும் உடையது இயற்கை - 19; இயற்கை உணர்த்தும் நீதிகள் - 21; இயற்கைப் பொருள்கள் - 22; இயற்கை உவமைகள்- 25; தொகுப்புரை - 26; குறிப்புகள் - 27.

2. உவமைகள்

உவமையே அடிப்படை - 31; மரபு நிலை உவமைகள் - 32; பல்பொருள் உவமைகள் - 37; தமிழ் பற்றிய உவமைகள் - 39; இயற்கை பற்றிய உவமைகள் -40; பெண்டிரைப் பற்றிய உவமைகள் - 47; புத்தாக்க உவமைகள் - 52; வழக்காற்று உவமைகள் - 56; குறிப்புகள் - 59.

3. உருவகங்கள்

உருவகமே தலையாயது - 75; தனிநிலை உருவகம் - 76; இணை நிலை உருவகம் - 77; ஒருதலை உருவகம் - 78; அடுக்கு நிலை உருவகம் - 79; முழுநிலை உருவகம் - 82; ஏனைய உருவகங்கள் - 84; குறிப்புகள் - 86.

4. சொல்லாட்சி

சொற்களே, கவிதைக்கு உயிர்நாடி 90; வந்த சொல்லே திரும்ப வருதல் - 91; ஒரு சொல், இருபொருள் - 92; சில சொற்களால் படம் பிடித்தல் - 93; எதிர்மறைச் சொற்கள் - 93; சொல்லாட்சியால் கவிநயம் சிறத்தல் - 93; இரட்டுற மொழிதல் - 94; தொடுவானம் என்னும் சொல்லாட்சி - 96; பேச்சு வழக்குச் சொற்கள் - 97; அயல்மொழிச் சொற்கள் - 98; முடிவுரை - 99; குறிப்புகள் - 99.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. குழந்தை இலக்கியக் கூறுகள்

ஓசைநயத்திற்கு முதலிடம் - 104; எளிய நடைக்குச் சிறப்பிடம் - 106; சொற்களும் சொற்றொடர்களும் திரும்பத் திரும்ப வருதல் - 107; எளிய முறையில் இயைபுத் தொடை - 109; வா! வா! என விளித்துப் பாடுதல் - 110; சிந்தையைக் கவரும் சிந்து மெட்டு - 110; எளிய உவமைகளும் இனிய காட்சிப் படிமங்களும் - 111; ஒலிக்குறிப்புச் சொற்கள் - 113; குறிப்புகள் - 114.

6. வாணிதாசன் கவிதைகள் - ஒரு கண்ணோட்டம்

சமுதாயச் சிந்தனைகள் - 116; பொருளியல் சிந்தனைகள் - 118; தமிழ் உணர்வு 118; இயற்கை ஈடுபாடு - 119; உவமை நயங்கள் - 120; கற்பனை ஓவியங்கள் - 121; பாரதிதாசன் செல்வாக்கு - 124; இலட்சியக் கவிஞர் -125: குறிப்புகள் 126.

7. பின்னிணைப்பு - I

வாணிதாசன் வாழ்க்கைக் குறிப்புகள் - 127; கையாண்டுள்ள பாவும் பாவினங்களும் - 133; அரசுப் பரிசும் பாவேந்தர் விருதும் - 135; கவிஞரின் கையெழுத்து - 136; இதழ்களின் மடியில் - 137; கலைஞர் நாற்பத்தாறு - 140; கவிஞர் வாணிதாசன் அகப்பொருட் காரிகை - 148; கண்ணுறங்கும் கல்லறை - 155; கண்ணீர் அஞ்சலி -156.

பின்னிணைப்பு - II

ஆய்வுக்குப் பயன்பட்ட முதன்மை நூல்கள் - 157; துணை நூல்கள் - 159.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and
with the Compliments of the
Dept. of Education, Govt. of India,
New Delhi.

1. இயற்கைப் புனைவு*

இயற்கையும் கவிஞர்களும்

இயற்கை வருணனைகளைக் கவிஞர்கள் காட்டும் விதம் பல வகைப்படும். உள்ளதை உள்ளவாறும் உணர்ந்தவாறும் பாடும் பாடல்களில் இயற்கை மனித உணர்வுகளுக்குப் பின்புலமாக அமைதல் உண்டு. மக்களுக்கு வாழ்வின் நுட்பங்களை உணர்த்த இயற்கை வருணனைகளைப் பயன்படுத்தும் கவிஞர்கள், அவற்றைக் குறிப்பாகக் காட்டுவதும் உண்டு; வெளிப்படையாக விளக்குவதும் உண்டு. இயற்கையோடு ஒன்றி நின்று பாடல்கள் புனைந்த கவிஞர்கள் பலர் உண்டு.

'மனிதன் இயற்கைச் சூழலுக்கு இடையிலேயே வாழப் பிறந்தவன். இயற்கையோடு இயற்கையாக அமையும் இன்ப வாழ்வே அவனுடையது. இயற்கையில் கலந்த பல பொருள்களே அவனை வாழ்விக்கின்றன'[1] என்பர். இயற்கைப் பொருள்களான நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் ஆகியவைதாம் மக்களின் வாழ்வுக்கு உறுதுணையாய் இருப்பன, அவ்வியற்கைப் பொருள்களைக் கூர்ந்து நோக்கிப் பாடல்களாக வடித்துத்தரும் இயல்பு கொண்டவர்கள் அன்றும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர்.

---

* 'நித்திலக் குவியல்'—வெள்ளிவிழா மலரில் வெளிவந்தது. (7-1-89)

வ.—2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞர் இயற்கையைப்பாடும் மரபில் பல நிலைகளைக் கையாளலாம். கவிஞர் இயற்கை வயத்தவராய் ஆகி இயற்கைக் காட்சிகளை அவர் கண்டவாறே நுகர்ந்து பாடுவதும் அதனை வியந்து களிப்பில் பாடுவதும் உண்டு, மேற்கண்ட நிலைகளில் இயங்குதிணை எனப்படும் உயிரினங்களையும், நிலைத்திணை எனப்படும் உயிரற்றவைகளையும் கவிஞர்கள் பாடியிருப்பதைக் காணலாம்.

தொல்காப்பியத்தில் முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பற்றிய நூற்பாக்கள் உள்ளன.[2] இதனை ஒட்டியே சங்க இலக்கியங்களில் முதற்பொருளும் கருப்பொருளும் இயற்கைப் பின்புலன்களாகக் காட்டப் பெறுகின்றன. உரிப்பொருளாகிய உணர்ச்சியின் செயல்கள் அவ்வியற்கையைப் பின்புலமாகக் கொண்டு நிகழ்கின்றன. மானிட உணர்வுகளோடு இயற்கையின் எழிலை இயைபுறச் செய்தது பண்டைத் தமிழிலக்கிய மரபு என்பார் டாக்டர் மு. வரதராசனார்.[3] சங்க இலக்கியங்களில் இயற்கை என்ற தலைப்பில் எந்தப் புலவரும் பாடல்கள் புனையவில்லை. ஆயின் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் பலர் இயற்கையைத் தனிக் கண்ணோட்டத்தோடு கண்டு களித்துக் கவிதைகள் பல வடித்துத் தந்துள்ளனர். அத்தகையோரில் வாணிதாசனும் ஒருவராவார்.

இயற்கையும் மனித வாழ்வும்

'மனித வாழ்க்கையை, இயற்கை வாயிலாகவும் இயற்கையை மனித வாழ்க்கை வாயிலாகவும் கலையுலகில் வளம்பெறச் செய்கின்றான்; மனித வாழ்வின் பல அமைப்புகளையும் நுட்பங்களையும் இயற்கையோடு இணையவைத்துக் காட்டுகின்றான் (கவிஞன்)'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பார்.[4] இயற்கையை மனித வாழ்க்கையோடு இணைத்துப் பல நிலைகளில் வாணிதாசன் பாடியுள்ளார். புன்செய் நிலத்தில் நாளெல்லாம் போராடும் உழவனின் செயல்[5] வாணிதாசனால் சித்திரிக்கப்படுகிறது. முதுவேனில் வெப்பம் சிற்றூரையும் பேரூரையும் தீய்த்து ஒழிக்கிறது; ஆனால் மக்கள் துயரம்தான் அற்று ஒழியவில்லை[6] எனக் கூறும்போது கவிஞரின் மக்கள் நலக் கோட்பாடு புலப்படுகிறது. ஒளியற்று மக்கள் ஒடுங்கிக் கிடந்திடும் தன்மையும் கவிஞரால்[7] சுட்டிக்காட்டப் படுகிறது. காவல் கட்டுப்பாடு இல்லாத—காசைப் பறிப்பார் இல்லாத—சிற்றூர் வாழ்க்கையும்[8] சித்தரிக்கப்படுகிறது. மண் குடத்தோடு ஊர்வம்பு பேசிக்கொண்டு தண்ணீர் எடுத்துச் செல்லும் பெண்களின் நிலை படம் பிடித்துக் காட்டப்படுகிறது.[9] குளத்தில் மாட்டைத் தேய்த்துக் குளிப்பாட்டுவதோடு தாமும் குளித்துக் கும்மாளம் போடும் மாடு மேய்க்கும் சிறுவர்தம் இயல்பு காட்டப் படுகிறது.[10] இங்ஙனம் இயற்கையைப் பாடும்போதே மனித வாழ்க்கையின் கூறுகளையும் சுட்டிக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் உடையவராக வாணிதாசன் காணப்படுகிறார்.

உயிரும் உணர்வும் உடையது இயற்கை

இயற்கையை உயிருள்ள பொருளாகவே மதித்துப் பாடியவர் வோட்ஸ் ஒர்த் என்பர். அது வாழ்வும் மனமும் உடையது என்றும் அதற்கு எண்ணமும் உணர்வும் விருப்பமும் உண்டு என்றும் அவர் பாடியிருப்பதாகக் கூறுவர்.[11] அதே உணர்வோடு இயற்கைப் பொருட்களைக் கூர்ந்து நோக்கியவராக வாணிதாசன் காணப்படுகிறார். உலகில் உள்ளவற்றையெல்லாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆட்டிப்படைக்கும் ஆற்றல் உடைய பொருளாகப் பரிதியைப்[12] பாடியுள்ளார் அவர்.

"ஊனில் உடலில் உயிர்ப்பில் ஒளிவீசி
வானும் எழுச்சியினைச் செய்ததடி"[13]

என்று பாடும்போது எழுச்சியூட்டும் பரிதியின் இயல்பு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கோதி உடல் கழுவிக் குருவி குளிக்கும் காட்சியால் அழகின் போதை தலைக் கேறியதாகவும், உடலுக்குள் புதியதோர் உணர்வு புகுந்த தாகவும்[14] வாணிதாசன் பாடும்போது அவர்தம் இயற்கை ஈடுபாட்டை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இயற்கைப் பொருளால் ஞானம் பிறப்பதாகவும், நான் என்னும் நிலை மனதில் அற்றுப்போய் இயற்கை யோடு இதயம் இரண்டறக் கலந்துவிடும் நிலை ஏற்படுவ தாகவும்[15] வாணிதாசன் பாடியுள்ளார். நலிவை யெல்லாம் நொடியில் மாற்றும் மாயக்காரியாகவும்[19] இயற்கை அழகைக் காணுகின்றார் கவிஞர். காட்டுப் பூவின் புலம்பல் மூலம் மக்கள் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டும் பகுதி ஆழ்ந்த சிந்தனைக்குரியது. நாலுபேர் கூடிச் சொன்னால் கெட்டதை நல்லது என்னும் இயல்பு உடையவர்களாக மக்கள் இருக்கிறார் களே எனச் சாலையில் பூத்த காட்டுப்பூ ஒன்று முணறிய தாகக் கவிஞர்[17] கூறியிருப்பதிலிருந்து இயற்கைப் பொருட்களுக்கும் உணர்வுண்டு என்பது புலப்படுத்தப் படுகிறது. இயற்கையை அறிவு புகட்டும் ஆசானாகக் கருதும் வோட்ஸ்ஒர்த்போல[18] வாணிதாசனும் ஈண்டுக் கருதுகிறார் எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கை உணர்த்தும் நீதிகள்

இயற்கையின் மூலம் பல்வேறு நீதிகளைப் புகட்டுவது கவிஞர்களுக்கு உள்ள பொது இயல்பாகும்' மக்களைத் திருத்தும் ஆசானாக இயற்கையை மதிக்கும் கவிஞர் தம் மனப்போக்கே அதற்குக் காரணமாகும். வாணிதாசனும் அம் மனப்போக்கு உடையவர் என்று தெரிகிறது. படிப்போர் உளங்கொள்ளும் வண்ணம் பல்வேறு நீதிக் கருத்துகளை இயற்கையின் வாயிலாக அவர் வழங்கி யுள்ளார்.

7723

"ஏரிபூத்த கொட்டி ஆம்பல் போலே—நித்தம்
இணைந்திருக்க வேண்டும் இமை போலே!
ஏரி காய்ந்து போனால் எட்டிப்பார்க்காக்—கெட்ட
நீர்ப்பறவை போலிருக்க வேண்டாம்!"[19]

என்னும் பாடலில் ஏரியோடு ஒட்டி உறையும் கொட்டி ஆம்பலின் உயர்வும், நீர் காய்ந்தவுடன் எட்டிப்பார்க்காத நீர்ப்பறவையின் இழிவும் உணர்த்தப்படுவதின் மூலம் நீதி வலியுறுத்தப்படுவதைக் காணலாம். இதே போன்று, தன்னை வளர்த்தோர்க்குத் தலையால் பயன் கொடுக்கும் தென்னையைப் போலக் குழந்தைகள் வளர வேண்டும் எனப் பாடும் போதும்,[20] முத்தும்பவளமும் தன்னகத்தே கொண்டுள்ள கடலுக்குப் பொருள்களைப் பதுக்கிவைக்கும் கஞ்சனை உவமையாகக் காட்டி, கொடுத்து உதவும் வள்ளல் குணத்தின் தேவையைக் குழந்தைகளுக்குக் குறிப்பாக உணர்த்தும் போதும்,[21] கொடுத்தே உதவி வாழ்வதில்தான் குளிர்மை உண்டெனக் கண்டாயோ? என்று கொடுத்து உதவும் ஆற்றின் குளிர்மையைப் போற்றும் போதும்[22]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கையைப் பின்புலமாகக் கொண்டு, குழந்தைகள் மட்டுமன்றி அனைவருமே பின்பற்ற வேண்டிய நீதிக் கருத்துகள் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

இயற்கைப் பொருள்கள்

நீர், நிலம், காற்று, வானம் ஆகிய நிலைத்த பொருளையெல்லாம் கவிதை மூலம் படம் பிடித்துக் காட்டியுள்ளார் வாணிதாசன். ஆறு[23] பற்றிப் பாடும் போதும், இன்னிசை ஒலிக்கும் ஓடையின் சலசலப்பு,[24] முழவார்க்கும் ஓடை[25] ஆகியவற்றைக் காட்டும்போதும் கவிஞரின் இயற்கை ஈடுபாடு நன்கு புலப்படுகிறது.

சோலைகள் மரங்கள் பற்றிய பாடல்கள் இயற்கையின் வெளிப்பாடுகளாக இலங்குகின்றன.

'சோலை கலகலப்பில்—அழகு
சொரியுது உள்ளத்திலே'[26]

என்று சோலையின் அழகு படம் பிடித்துக் காட்டப்படுகிறது. மூண்டெழுந்த காற்றுடனே நிலைகால் தெரியாமல் ஆடி முறிந்து ஒடியும் நீண்ட பனையும் தென்னையும்[27] காட்டப்படுகின்றன. காயினில் குளிர்மை, தோய் சுவைக்கனி, ஏழை வேய்ந்திடு கூரை, புழுக்கம் நீங்க விசிறி, பாய், தடுக்கு, பலவித கூடை, கயிறு, தின்றிடக் கிழங்கு, ஊர்ந்திடும் மடல் ஆகியவை பனை பற்றிய பாடலில்[28] வரும் பயன் தருபொருட்களாகப் படம் பிடித்துக் காட்டப்படுபவை. காய்களைக் குலைகுலையாகக் கொண்டு குனிந்து மற்றவர்களுக்குக் கொடுக்கும் குணங்கொண்ட மாமரத்தின்[29] இயல்பு சுட்டப்படுகிறது. சாய்ந்த முடப்புன்னையும்[30] மேட்டுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதரிடையில் நீண்டு உயர்ந்து சாய்ந்த வெள்வேல மரக்கிளையும்[31] காட்டுப்பட்டுள்ளன.

வாணிதாசன் கவிதைகளில் சில மலர்கள் குறிக்கப் படுகின்றன. நீர் மட்டத்தின்மேல் வந்து மலர்பூக்க எத்தனிக்கும் குளிர் அல்லித்தாமரை,[32] அழகு தங்கிக் கிடக்கும் தாமரை மொட்டு,[33] வெறியூட்டும் செந்தாமரைப் பூ[34] ஆகியவை காட்டப் பெறுகின்றன. செம்மையில் சிறிது நீலம் கலந்து, கண்கவரும் வண்ணம் காணப்படும் காட்டுப் பூ[35] கவிஞரால் அழகுறச் சித்தரிக்கப்படுகிறது.

> "இழிமலர் சூடும் பெண்கள்[36]
> ஏனெனை வெறுக்கின் றார்கள்?"

என அக்காட்டுப்பூவின் புலம்பலும் காட்டப்படுகிறது. வண்டுக்குத் தேனை ஈந்த வண்ணமலர் ஒன்று, வாடிய மலராக[37] மாறும்நிலை காட்டப்படுகிறது.

வானம் பற்றிய கவிஞரின் ஈடுபாடு குறிப்பிடத்தக்க தாகும். வானம் முளைத்துவரும் பரிதி,[38] வானும் எழுச்சியினைச் செய்ததடி[39] வானம் அனல் சொரியும்,[40] வானம் குமுறும்,[41] வானம் இடிக்கும்[42] செந்நிறம் கீழ்வான் பூசி,[43] தொடுவானம் தீதீ,[44] விண்மீன் வானில் இறைந்துயிர்,[45] வான முகட்டிலெல்லாம்,[46] ஆகிய இடங் களில் கவிஞரின் வாணியல் கண்ணோட்டம் புலப்படு கிறது.

> "வானத்தைக் காண எண்ணி
> வயற்புறம் சென்றேன்"[47]

என்று வானத்தைக் காண்பதில் கவிஞருக்கு உள்ள ஆர்வம் புலப்படுத்தப்படுகிறது. தங்கம், பொன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவற்றோடு தொடர்பு படுத்திக் கதிரவனைக்காட்டி யுள்ளார் கவிஞர். தங்கப்பரிதி தலைநிமிர்ந்தான்,[48] போன ஒளி அடடா பொன்வெள்ளம்,[49] பொன்மழை அடடா![50] பொன்னிறப் பரிதியுண்டை[51] பொன்னே முளைத்தகதிர்,[52] ஆகிய இடங்கள் அதற்குச் சான்று பகர்கின்றன.

நிலவு பற்றிக் கவிஞர் பாடியுள்ள பாடல் குறிப்பிடத்தக்கதாகும். 'அலைகடல் நீந்தும் முழுமதி'[53] என்ற அடைமொழி சிறப்புடையதாகும். கண்ணைப் பறிக்கும் மின்னல்[54] அழகுறக் காட்டப்படுகிறது.

இயங்குதிணைகளான பறவை, விலங்கு, வண்டு ஆகியவை பற்றிய வாணிதாசன் பாடல்களும் குறிப்பிடத்தக்கவையாகும். நுணாக்கிளைகளில் தாவிப் பறந்து 'குக்குக்'கென்று பாடும் குயில்,[55] மக்கள் சேக்கையைவிட்டு எழுந்திடக் கூவும் சேவல்,[56] தென்னந்தோப்பில் கரைந்திடும் காக்கைகள்,[57] வாழைமேல் தாவும் கிள்ளை,[58] சேல்மீனுக்காக மடையினில் காத்துநிற்கும் நாரை,[59] பெருநடம் புரியும் தோகைமயில்,[60] கோதி உடல் கழுவிக் குளிக்கும் குருவி[61] ஆகிய பறவைகள் குறிப்பிடப் படுகின்றன. வண்டுகள் பற்றியும் கவிஞர் பாடியுள்ளார். 'விரிமலர் தேடி என்றன் மேல் உராய்ந்து ஓடும் வண்டு'[62] 'நாவல் நிறத்துக் கருவண்டு நல்லிசை எழுப்பும் மதுவுண்டு'[63] 'பூத்த மலர்ப்பாடும் தேன்வண்டு'[64] என வண்டுகள் குறிக்கப்படுகின்றன. கொட்டகையில் மாடுகன்றும், கூண்டில் பறவை இனமும்[65] காட்டப் படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கை உவமைகள்

வாணிதாசன் கவிதைகளில் இயற்கைப் பொருட்கள் உவமைநயத்தோடு கூறப்பட்டுள்ளன. வானில் அங்கு மிங்கும் ஓடி அதிரும் மேகங்கள் வளர்ந்த மலைக்கூட்டத் திற்கும், ஏனம் வெறிகொண்டு எழுதலுக்கும் யானை தலைதெறிக்க ஓடுதலுக்கும்[66] உவமையாகக் கூறப் பட்டுள்ளன. தூக்கம் கலைந்து எழுகின்ற சோம்பேறிக்குக் கீழ்வானில் புரண்டெழும் கருமேகம்[67] உவமையாகக் கூறப்பட்டுள்ளது. வானில் எழும் இடிமுழக்கம் சிங்கத் தமிழர் செருக்களத்து ஓசைக்கும், மின்னல், தங்க உருக்குபாய்த் தாரைகளுக்கும்[68] உவமிக்கப் பட்டுள்ளன.

வயல், நெல், நெல்லரிசி ஆகியவற்றுக்குக் கவிஞர் கையாண்டுள்ள உவமைகள் சிறப்புடையன. வயல்வெளி, பச்சைக்கடலின் பரப்புக்கும் கிளைத்துவளரும் பசுநெல் பசும்பாம்பிற்கும்[69] உவமிக்கப்பட்டுள்ளன. வளரும் நெற்பயிர் வாளுக்கு[70] உவமையாகக் கூறப்பட்டிருக்கும் இடமும் உண்டு. குறுவைநெல் அறுத்திட்ட நஞ்செய் நிலம், கைம்மைக் கோலம் சேர் முகத்தை[71] ஒத்திருப் பதாகக் கூறப்பட்டுள்ளது. வேளையோடு வயல்களுக்கு உரமிட்டு நீர் பாய்ச்சுதலுக்கு விருந்தினருக்கு வேளையோடு உண்ண அழைத்து விருந்தோம்பும் பண்பு[72] உவமையாகக் கூறப்படுகிறது. வயல்களிலிருந்து பிய்த்து எறியும் களைகளுக்குப் 'பெண்தலை கோதி எடுத்திடு பேன்'[73] உவமிக்கப்படுவது குறிப்பிடத்தக்க தாகும். நெல்லரிசி, நீள்தாழை முள்ளுக்கு[74] உவமை யாகக் கூறப்பட்டுள்ளது.

தக்க உவமைகளின் மூலமாக அறிமுகம் செய்யப் படும் மலர்கள் பலவாகும். பூசணிப்பூ, செம்பொன் சிறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிண்ணம்போல் தோன்றுவதாகவும்[75] கார்முல்லை அரும்பு காட்டுப்பூனைப் பல்லைப்போல் காணப்படுவதாகவும்[76] கூறப்பட்டுள்ளன. சாலையில் போற்றுவாரற்றுப் புலம்பும் காட்டுப்பூ, தூக்கிவிடாக் கவிஞனுக்கு[77] உவமையாகக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வண்ண மாமலர். பருவ மகளின் முகத்திற்கும்[78] வாடியமலர், ஒவ்வொருநாளும் உருக்குலைந்து நைவாருக்கும்[79] உவமையாகக் கூறப்பட்டுள்ளன. குளத்தினில் உள்ள தாமரைகள், குறும்புப்பெண் கூட்டத்திற்கும்,[80] வழியெங்கும் காணப்படும் புத்தம்புது மலர்கள், மணம்வேட்கும் பெண்களுக்கும்[81] உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

மரங்களுக்குத்தரும் உவமைகளும் குறிப்பிடத்தக்கனவாம். குளிர் நிழல் கொடுக்கும் மாமரம் குடையெனவும்[82] கலைநிறை உள்ளம் போலவும்[83] விரிந்து காணப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. வாய்க்காலின் இருகரை மருங்கும் நிற்கும் பனைகள், படைவீரர் வரிசைக்கு[84] உவமிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் ஊற்றி அறியாத பனைமரத்திற்கு உவமையாகப் பாலில்லாமல் யாருமற்ற அநாதைக் குழந்தை[85] கூறப்பட்டிருப்பது எண்ணத்தக்கதாகும்.

பறங்கிக்காய், ஆமைத்தலைக்கும்,[86] தோட்டத்து வேலியில் தொங்கும் சுரைக்காய்கள், மீட்டாது மாட்டிவைத்த மெல்யாழுக்கும்[87] உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

தொகுப்புரை

இங்ஙனம் வாணிதாசன் கவிதைகளில் இயற்கை பலவாறாக இடம்பெற்றுள்ளது எனலாம். வாணிதாசன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கையை மனிதவாழ்க்கையோடு இணைத்துப் பாடியவர் என்பதையும், வோட்ஸ் ஓர்த்தைப்போல இயற்கையை உயிரும் உணர்வும் உள்ள பொருளாக மதித்தவர் என்பதையும் நிலைத்திணைப் பொருட்களான நிலம், வானம், மரம், செடி ஆகியவை பற்றியும், இயங்கு திணைகளான பறவை, விலங்கு, வண்டு ஆகியவை பற்றியும் நுணுகியும் கூர்ந்தும் நோக்கிப் பாடியவர் என்பதையும், உவமை நயத்தோடு இயற்கைப் பொருட் களைப் படம் பிடித்துக் காட்டுவதில் வல்லவர் என்பதை யும் இதுகாறும் அவரது கவிதையின் துணைகொண்டு நிறுவியுள்ளோம். இயற்கை அன்னையே வோட்ஸ் ஓர்த்தின் கையிலிருந்து பேனாவை எடுத்துக்கொண்டு தனது வெளிப்படையான நுண்ணறிவு மிக்க ஆற்றலால், அவருக்காக எழுதுவாள்[88] என்கிறார் மேத்தியூ ஆர்னாடு. அதே ஆற்றலுடன் இயற்கை அன்னை வாணிதாசனுக் காக எழுதியிருப்பதை அவர்தம் இயற்கை பற்றிய பாடல்களில் காணலாம். வாணிதாசன் படைத்துள்ள இயற்கைப் பாடல்கள், பல நிலைகளில் படிப்போர் நெஞ்சத்தை ஈர்க்கும் பாங்குடன் அமைந்துள்ளன எனலாம்.

குறிப்புகள் :

1. அ. மு. பரமசிவானந்தம், 'சமுதாயமும் பண் பாடும்' (சென்னை, 1962), ப. 336

2. தொல். பொருள். 4; தொல். பொருள்: 18; தொல். பொருள். 14

3. ம. ரா. போ. குருசாமி, சுப. அண்ணாமலை, கதிர். மகாதேவன் (மொழி பெயர்ப்பாளர்), பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (சென்னை, 1964) ப. 17

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. டாக்டர் சு. பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு (சென்னை, 1976) ப. 132

5. வாணிதாசன் கவிதைகள் (சென்னை, ப. 21-22.)

6. மே. கா. நூல் ப. 28-29

7. ,, ப. 43

8. ,, ப. 8

9. ,, ப. 8

10. ,, ப. 9

11. "Nature, according to Wordsworth, is a living entity. It is endowed with life and conscousness and has the capacity of thinking, feeling and willing."

—B. C. Chakravorty, William Wordsworth'
(Allahabad, 1972) P.30

12. வாணிதாசன் கவிதைகள், ப. 1

13. மே. கா. நூல். ப. 1

14. ,, ப. 30

15. ,, ப. 30

16. ,, ப. 33

17. ,, ப. 20

18. "......Wordsworth thinks that a single moment of inspiration from the heart of nature can impart more wisdom to man than the teachings of all the sages combined together."

—B. C. Chakravorty 'William wordsworth' P. 32

19. வாணிதாசன், குழந்தை இலக்கியம், ப, 20

20. வாணிதாசன், இனிக்கும் பாட்டு, ப. 11

21. வாணிதாசன், குழந்தை இலக்கியம், ப. 14

22. வாணிதாசன், குழந்தை இலக்கியம், ப. 17

23. வாணிதாசன் கவிதைகள், ப. 12

24. ,, ப. 30

25. ,, ப. 32

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

26.	வாணிதாசன் கவிதைகள்,	ப.	5
27.	”	ப.	38-39
28.	”	ப.	16-17
29.	”	ப.	18
30.	”	ப.	1
31.	”	ப.	25
32.	”	ப.	3
33.	மே. கா. நூல்	ப.	5.
34.	”	ப.	8
35.	”	ப.	21
36.	”	ப.	21
37.	”	ப.	21, 22
38.	”	ப.	1
39.	”	ப.	1
40.	”	ப.	1
41.	”	ப.	2
42.	”	ப.	2
43.	”	ப.	6
44.	”	ப.	6
45.	”	ப.	23
46.	”	ப.	30
47.	”	ப,	6
48.	”	ப.	1
49.	”	ப.	1
50.	”	ப.	7
51.	”	ப.	7
52.	”	ப.	1
53.	”	ப.	23
54.	”	ப.	2
55.	”	ப.	6
56.	”	ப.	6
57.	”	ப.	6
58.	”	ப.	6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

59. ” ப. 10
60. ” ப. 25
61. ” ப. 30
62. ” ப. 6
63. ” ப. 8
64. ” ப. 25
65. ” ப. 2
66. வாணிதாசன் கவிதைகள், ப. 2
67. ” ப. 6
68. ” ப. 2
69. ” ப. 2
70. ” ப. 14
71. ” ப. 14
72. ” ப. 14
73. ” ப. 15
74. ” ப. 3
75. ” ப. 3
76. ” ப. 3
77. ” ப. 20
78. ” ப. 21
79. ” ப. 22
80. ” ப. 25
81. ” ப. 26
82. ” ப. 10
83. ” ப. 18
84. ” ப. 10
85. ” ப. 17
86. ” ப. 3
87. ” ப. 3

88. "Nature herself seems, I say, to take the peu out his hand and to write for him (Wordsworth) with her own bare, sheer penetrating power"
—Mathew Arnold, 'Discussions of William Wordsworth' (Boston, 1965) P. 42

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. உவமைகள்

உவமையே அடிப்படை

ஒரு பொருளை மற்றொரு பொருளுடன் ஒப்பிட்டுக் காட்டுவது உவமையாகும். அஃது இரு பொருள்களின் ஒப்புமைத் தன்மையைப் புலப்படுத்துகிறது எனலாம். இவ்வுவமைகள் வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு வகையாக அமையும் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார்.[1] அவற்றையே பண்பு, தொழில், பயன் என மூன்றாக வகைப்படுத்திக் காட்டுகிறார் தண்டியாசிரியர்.[2] அம் மூன்று வகையானும் 'ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை' என்பார் அவர். 'அழகுள்ள ஒரு பொருளை மற்றொன்றன் அழகோடு ஒப்பிட்டுக் காணும் இந்த உவமையே கலைகள் பலவற்றிற்கும் அடிப்படை'[3] என்பது டாக்டர் மு.வ.வின் கருத்தாகும்.

வாணிதாசன் உவமைத்திறன்

மக்கள் உணர்ந்த பொருள்களை, எளிய நிலையினால் உவமைகளாகச் சொல்லி விளக்கம் செய்கிறபோது பொருள் தெளிவாகிறது. இத்தகைய உவமையின் சிறப்பினை நன்குணர்ந்து உரிய முறையில் அதனைப் பயன்படுத்தி உயர்ந்த கவிஞர்களுள் வாணிதாசனும் ஒருவராவார். "கவிஞரின் (வாணிதாசன்) பாடல்களில் பொருளையே உவமஞ் செய்கின்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்மையே நிறைந்துள்ளது. உவமானத்திற்கும், உவமேயத்திற்கும் உள்ள ஒப்புமையைக் கூர்ந்தறியும் நுண்ணாற்றலை இவர்பால் காணலாம்"[4] என வாணிதாசனின் உவமைத் திறனை ஓர் ஆய்வாளர் மதிப்பிடுகிறார். வாணிதாசன் கவிதைகளில் பல்வேறு வகையான உவமைகளைக் காணமுடிகிறது. அவற்றின் மூலம் அவரது பரந்துபட்ட அறிவையும், கூர்ந்து நோக்கும் திறனையும் அறிந்து கொள்ள வாய்ப்பேற்படு கிறது. அவரது கவிதைகளில் மரபுநிலை உவமைகளும் உண்டு; தனித்தன்மை மிக்க புத்தாக்க உவமைகளும் உண்டு. அவர் கையாண்டுள்ள உவமைகளைக் கீழ்க் காணும் முறையில் வகைப்படுத்திக் கொண்டு ஆராய லாம்.

1. மரபுநிலை உவமைகள்
2. பல்பொருள் உவமைகள்
3. தமிழ் பற்றிய உவமைகள்
4. இயற்கை பற்றிய உவமைகள்
5. பெண்டிர் பற்றிய உவமைகள்
6. புத்தாக்க உவமைகள்
7. வழக்காற்று உவமைகள்

மரபுநிலை உவமைகள் : மரபுநிலையாக வழங்கிவரும் பல்வேறு உவமைகளை, வாணிதாசன், தமது கவிதை களில் சிறப்பாகக் கையாண்டுள்ளார். இல்பொருள் உவமை, எடுத்துக் காட்டு உவமை, நிரல் நிறை உவமை, முரண் உவமை, ஐய உவமை, தற்குறிப்பேற்ற உவமை, மயக்க உவமை, உள்ளுறை உவமை, ஆகியவற்றை அவர் எங்ஙனம் கையாண்டுள்ளார் என்பதை ஈண்டுக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்பொருள் உவமை : இல்லாத பொருளை உவமையாகக் காட்டுவது இவ்வகை உவமையாகும். இலவங்காய் வால்முளைத்துப் பறப்பது என்பது நடவாத ஒன்று. நெட்டாகக் கல்வீட்டுப் புறச்சுவரைத் தாவி கிளி பறப்பது இலவங்காய் வால்முளைத்துப் பறப்பதுபோல் உள்ளதாகக் கூறப்படுகிறது.[5] குன்றுக்கல் ஒன்று குளம் நீந்திக் குளிப்பது என்பது நடக்க முடியாத செயலாகும். ஆனால், அச்செயல், 'கன்றீன்ற நாகு தலைமூழ்கிக்' குளத்தில் குளிப்பதற்கு உவமையாகக் கூறப்படுகிறது.[6] இங்ஙனம் இல்பொருள் உவமைகளைச் சிறப்பாக அமைத்துப் பாடுகிறார் வாணிதாசன் எனலாம்.

எடுத்துக்காட்டு உவமை : ஓர் எடுத்துக்காட்டுடனோ, பல எடுத்துக்காட்டுகளுடனோ அமையும் இவ்வகை உவமைகளும் வாணிதாசன் கவிதைகளில் காணப்படுகின்றன. தலைவனைப் பிரிந்து தலைவியால் உயிர்வாழ இயலாது என்னும் கருத்தைக் கூறவந்த கவிஞர்.

"திரியை விலக்க எரியுமோ—சின்ன
குத்து விளக்குதான் தோழியே!"[7]

என்று அதற்குப் பொருத்தமான ஓர் எடுத்துக் காட்டை உவமையாக அமைத்துப் பாடுவதைக் காணலாம். அடுத்து, எங்குச் சென்றாலும் தலைவன், தலைவியிடம் வந்து சேருவது உறுதி என்னும் கருத்தை வலியுறுத்திக் கூற நினைத்த கவிஞர், 'தேர்சுற்றி வந்தாலும் நிலைக்கு வந்து சேரும்' 'நாடளக்கும் ஆறென்றும் கடல்வந்தே சேரும்!' 'புட்கள், காடெல்லாம் திரிந்தாலும் கூடுவந்தே சேரும்'[8] என்னும் மூன்று எடுத்துக்காட்டுகளை அடுக்கிக் கூறுகிறார். எடுத்துக்காட்டு உவமையின் இயல்பறிந்து அதனைப் பயன்படுத்துகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிரல் நிறை உவமை : உவமைகளும் பொருள்களும் நிரல்நிறையாக அமையும் இவ்வகை உவமையையும் வாணிதாசன் கையாண்டுள்ளார். மின்னலும் நிலவும் மூங்கிலும் தேனும் முறையே பெண்டிரின் இடைக்கும் முகத்திற்கும் கைக்கும் சொல்லுக்கும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.[9] வானப்பிறையும் மீனும் போலத் தாழை மடலும் பித்தளைப் பொடியும் விளங்கின எனக் காட்டப்படுகிறது.[10] உடலும் உயிரும் போலத் தமிழ் நாடும் தமிழ்மொழியும் பேணப்பட வேண்டும் என்பதும் இரு இடங்களில் கூறப்பட்டுள்ளது.[11] 'உடல் உயிர், தமிழும் நான்' என்றுணர்ந்து நடந்தோனாகப் பாரதிதாசன் காட்டப்படுகிறார்.[12]

முரண் உவமை : முரண்பட்டு நிற்கும் பொருள்களை ஒருங்கிணைத்துக் கூறும் முரண் உவமைகளும் வாணிதாசன் கவிதைகளில் காணப்படுகின்றன. பிறர் நலம் பேணுவதில் மழைக் காற்றாக இருக்கும் தமிழன், ஏய்ப்பவர்க்குச் சுழற்காற்றாக இருப்பான் என்றும், பகைவர்களுக்கு அனற்காற்றாக இருக்கும் தமிழன், ஏனையோர்க்குக் குளிர்காற்றாக இருப்பான் என்றும் முரண்நிலைகள் காட்டப்படுகின்றன.[13] மேலும், 'வீட்டினிலே இருப்பதென்றால் வேப்பங்காய்; சிற்றூர் வீணர்களின் நச்சரிப்போ விளக்கெண்ணெய்; பூத்த காட்டினிலே திரிவதென்றால் கற்கண்டாம்'[14] என்று முரண் உவமை சிறப்பாக அமையுமாறு வாணிதாசன் பாடுகிறார். 'கரும்பாம் தமிழ்த்தம்பி, கருத்துரையைக் கேட்க இரும்பாம் இளைத்த உடல்'[15] என்றும் முரண் உவமை அமைவதைக் காணலாம்.

ஐய உவமை : ஐயத்தை எழுப்பும் நிலையில் வியப் புணர்ச்சி தோன்ற அமைவது இவ்வகை உவமையாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேனடையைக் கண்ட வேடன் ஒருவன், 'வான் தவழ் மதியோ? சொந்த மனையாளின் முகமோ?[16] என்று திகைத்து நிற்பதாக வாணிதாசன் பாடும்போதும், 'நெய்தல் நாட்டின் அரணோ சுவரோ நீண்ட கடலோரம்?'[17] என்று பாடும் போதும் இவ் ஐய உவமையின் அழகு புலப்படுவதைக் காணலாம்.

தற்குறிப்பேற்ற உவமை : இயற்கையாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியின் மேல் கவிஞன் தனது குறிப்பை ஏற்றிக் கூறும்போது இவ்வகை உவமை பிறக்கிறது. காக்கை 'கா, கா' எனக் கத்துவது அதன் இயல்பாகும். வீட்டிற்கு வந்த பிள்ளையை உணவருந்த அழைப்பது போல்'[18] அக்காக்கை மகிழ்வோடு தனது இனத்தைக் கூவி அழைப்பதாக வாணிதாசன் பாடுகிறார். ஈண்டு, கவிஞர் கற்பித்துக் கூறும் காரணமே, இவ்வகை உவமை பிறப்பதற்கு அடிப்படை என்பது புலனாகிறது.

மயக்க உவமை : உவமையைப் பொருள் என்றே எண்ணி மயங்குவதாக அமையும் உவமை இதுவாகும். அகப் பாடல்களில் இடம்பெறும் திணை மயக்கம் போல, கவிதைகளில் அமையும் உவமை மயக்கமாக நாம் இதனைக் கொள்ளலாம். இத்தகைய உவமை மயக்கம் வாணிதாசன் கவிதைகளிலும் இடம்பெற்றுள்ளது. தென்னம்பாளையை வெண்குருகு என்று எண்ணிச் சேல்கள் மயங்குதல்[19] கிளியின் மூக்கை மிளங்காய் எனக் கருதி அணில் உண்ணப் பாய்தல்[20] ஆகியவை மயக்க உவமையின் வெளிப்பாடு எனலாம். பெண்களின் விழியை மலர் என வண்டினம் மொய்த்து ஏமாறும் உவமை மயக்கம் நான்கு இடங்களில் காணப்படுகிறது.[21]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளுறை உவமை: உள்ளுறை என்பது கருப் பொருளின் துணைகொண்டு பெறப்படும் குறிப்பு உவமையாகும். தொல்காப்பியர் காலத்திலேயே போற்றப்பட்ட உவமைப் பொருள்நய உற்பத்தியாக இதனைக் கொள்வர்.[22]

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்."[23]

என்பர் தொல்காப்பியர். வாணிதாசன் இவ் உள்ளுறை உவமத்தையும் போற்றியுள்ளார் என்பது தெரிகிறது.

".........தாழ்கிளை தாவித் தலைகீழ் ஆடும்
குட்டிக் குரங்கைக் கிட்டும் மந்தியைத்
தழுவிக் கடுவன் தலைபார்த் திருக்கும்."[24]

என்னும் வாணிதாசன் பாடல் சங்க இலக்கியத்தின் சாயலைப் பெற்றுத் திகழ்வதைக் காணலாம். இது தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி கூற்றாக வருகிறது. கடுவனானது, தனது மந்தியையும் குட்டியையும் அன்போடு ஆரத் தழுவி மகிழும் என்பதிலிருந்து, பிரிவு தவிர்ந்து வந்து தலைவியைத் தழுவி மகிழ்வான். தலைவன் என்னும் உள்ளுறைக் கருத்தினை உவமை வாயிலாக வெளிப்படுத்தியுள்ள நயம் புலப்படுகிறது. இங்ஙனம், உள்ளுறை உவமமும் வாணிதாசன் கவிதைகளில் அருகிய நிலையில் இடம் பெற்றுள்ளது எனலாம்.

மற்றும் விழியை ஒத்திருக்கும் கழுநீர்ப்பூ[25] என்று பொருளையே உவமையாகக் காட்டும் தன்மையும்; 'கருமான் உலைத் தீக்கொழுந்து போல் இல்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவன்'[26] என்று எதிர்மறைப்போக்கில் உவமையை அமைத்துக் காட்டும் இயல்பும், 'கடலும் கரையும் கழியும் நீலமும் போல்'[27] என உவமையை இணைப்பு முறையில் அமைத்துச் செல்லும் போக்கும் வாணிதாசனிடம் குறைந்த அளவில் காணப்படுகின்றன.

பல்பொருள் உவமைகள்

ஒரு பொருளுக்கு உவமை யாகப் பல பொருள் களை அடுக்கிக் கூறும் பாங்கும் வாணிதாசன் கவிதைகளில் பரவலாகக் காணப்படுகிறது. "ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களையும் உவமையாகக் கூறும் பொழுது அவை அக் கவிஞனின் வியப்புணர்ச்சியையும் உவமைகளை மிகுதிப்படுத்திக் கூறும் திறனையும் காட்டுகின்றன." என்பர்.[28]

விண்மீனுக்கு உவமைகளாகக் குளம் பூத்த பூ, சின்னக்காசு, முல்லைப்பூ, பட்டாடையில் தைத்திட்ட முத்து, ஒளிக்கல், சரிகைச் சேலையில் உள்ள பொடிப் பூ, தொலைவூரில் தோன்றும் மின்விளக்கு ஆகியவை அடுக்கிக் கூறப்பட்டுள்ளன.[29]

காதலை வெளியிடத் தயங்கும் காதலன் நிலைக்குப் பல்வேறு உவமைகள் சொல்லப்படுகின்றன. புதிதாய் ஒரு வரிடம் பொருள் கேட்க நாணும் புதியன் போல், இதற்கு முன் வந்தறியாப் பட்டணத்தில் உறவினர் வீட்டை தேடுவான்போல், ஒன்றிரண்டு கெண்டை ஓடி வருமளவும் நின்றிருக்கும் கொக்கே போல், செல்வர் வழி பார்க்கும் கள்வன் போல், வினையாயும் ஒற்றன் போல், கற்றார் வாய்ப்பொருள் கேட்கும் பிள்ளையைப்போல், கூர்ந்தாயும் வேடன்போல், செய்வதறியாது நிலை குலைந்து நிற்பான்போல் காதல் நெஞ்சத்தைக் காட்டத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தயங்கும் காதலனின் நிலை உள்ளதாகக் காட்டப் படுகிறது.[30]

அவன் இல்லாத வாழ்க்கை, அவளுக்கு எப்படி இருக்கிறது என்பதற்கு நீரற்றுக் காய்ந்த ஆற்றின் நிலை முதலாகப் பதின்மூன்று உவமைகள் அடுக்கிக் கூறப் படுகின்றன[31] அதேபோல் அவள் இல்லாத வாழ்க்கை அவனுக்கு எப்படி இருக்கிறது என்பதற்கு மழை பொய்த்துப் போன பின் நீருக்கு ஏங்கும் உழவன்நிலை முதலாக ஆறு உவமைகள் கூறப்படுகின்றன.[32] காதலி இல்லாத சில நாட்கள் காதலனுக்கும், காதலன் இல்லாத சில நாட்கள் காதலிக்கும் எப்படி இருக்கும் என்பதற்குப் பொருந்துமாறு வீயில்லாச் சோலை முதலாக, காற்றில்லாக் கொடுங்கோடைக்காலம் ஈறாக இருபத்தாறு உவமைகள் தொடர்ந்து ஒரே பாடலில் அமைந்துள்ளன[33] கட்டாயக் கல்வி கட்டாயம் தேவை என்பதை மக்களுக்கு நன்கு உணர்த்த விரும்பிய கவிஞர், 'பொட்டல் வெளிக்கு நிழல்' முதலாகக் 'கதைக்கு மூலக்கரு' ஈறாக முப்பத்தெட்டு உவமைகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி ஒரே பாடலில் கூறியுள்ள திறன் எண்ணத்தக்கதாகும்.[34]

கார்மேகம் வானில் அங்குமிங்கும் ஓடி அதிரும் நிலை, வளர்ந்த மலைக்கூட்டம் போலவும், ஏனம் வெறி கொண்டு எழுதல் போலவும், யானை தலைதெறிக்க ஓடும் தகைமை போலவும் காணப்படுவதாகக் கவிஞர் கூறுகிறார்.[35] அம் முகிலின் ஆர்ப்பாட்ட முழக்கத்திற்குப் பாலத்தின் மீது போகும் தொடர் வண்டி எழுப்பும் இரைச்சல், பல மாடிக்கட்டிடம் இடிந்து விழும்போது ஏற்படும் பெருஞ்சத்தம், மலையினைப் பிளக்க வைத்த வெடிகளின் பேரோசை ஆகியவை உவமைகளாகக் கூறப் பட்டுள்ளன.[36]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு பெண் படுத்துக்கிடப்பதைப் புலப்படுத்துதற்குக் கூட பல உவமைகளை அடுக்கிக் கூறக் காணுகிறோம். யாழ் கிடப்பதைப்போலவும், தமிழ் நூல் தனியே படிப்பாரின்றிக் கிடப்பதைப்போலவும், நறுஞ்சாந்துக் கிண்ணம் கிடப்பதைப்போலவும் அவள் படுத்துக்கிடப்பதாகக் கவிஞர் கூறும்போது அடுக்கு உவமைகளால் ஏற்படும் நயத்தை நம்மால் உணர முடிகிறது.

தமிழ் பற்றிய உவமைகள்

வாணிதாசனுக்குத் தனித் தமிழ் ஈடுபாடும் தமிழார்வமும் மிக்கிருந்த நிலையினை அவரது உவமைகளைக் கொண்டே அறிய முடிகிறது. தமிழ் பற்றிய இவரது உவமைகள் அனைத்தும் தமிழை மிக உயர்த்திச் சிறப்பிக்கின்றன எனலாம்.

தமிழை இளநீராகவும்,[37] தீட்டாத ஓவியமாகவும்,[38] தேனடையாகவும்,[39] வான்தவழ் பேரொளியாகவும்[40] உவமைப்படுத்திக் காட்டுகிறார் கவிஞர். மேலும் வாழை,[41] மா ஆகியன தமிழ்போல இனிப்பவை என்று தமிழுக்கு ஏற்றங்கொடுத்து உவமையை அமைக்கிறார். காதலன் நல்கிய இன்பம், செந்தமிழ்போல இனித்ததாக ஒருத்தி கூறுகிறாள்.[42]

"தலைகாலே தெரியாது காத லர்கள்
தனித்தமிழின் இன்பத்தைத் துய்ப்பார் போல
நிலையற்றுக் கிடந்தார்கள் தோட்டத்துள்ளே!"[43]

என்று காதலர்கள் பெறும் இன்பம், தனித்தமிழ் இன்பத்தோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகவே அத்தகைய இனிமை வாய்ந்த தமிழை, தாய் சேயைக் காப்பதுபோல் காத்திட விழைகிறார்.[44] தமிழ் காக்கும் கருத்தில்லாதவரை, வேப்பிலைபோல் கசப்பானவர் என்றும் 'துப்பில்லாப் புதுப்பெண்போல் பயனில்லாதவர் என்றும் கருதுகிறார்.[45]

செழுந்தமிழ் இலக்கியத்தைப் பிழிந்த அடைத் தேனாகவும்,[46] பிணி போக்க வாழைப்பழத்தில் மருந்தை மறைத்துத் தாய்தரு பழமாகவும்[47] உயர்வாக எண்ணிப் போற்றுகிறார். காதலி தனது உடல்மேல் சாய்ந்து தோய்ந்தது, சங்கத் தமிழ்ப்பாட்டில் தோய்ந்த சுவை போல இருந்ததாக ஒரு காதலன் கருதுவதாகப் பாடுகிறார்.[48]

இங்ஙனம் தமிழ் பற்றிய உவமைகளின் மூலம் தமிழின் சிறப்பையும், தமிழ் இலக்கியங்களின் உயர்வையும் புலப்படுத்துகிறார் கவிஞர் எனலாம்.

இயற்கை பற்றிய உவமைகள்

வாணிதாசன் இயற்கையின்பால் மிக்க ஈடுபாடு கொண்டவர். அதன் ஒவ்வொரு அசைவிலும் நிலையி லும் தன்னைப் பறிகொடுத்தவர். இயற்கைப் பொருள் களை ஆய்ந்து நோக்கும் ஆற்றலைப் பெற்றவர். இயற்கை பற்றியஅவரது உவமைகள், இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றன எனலாம்.

பல்வேறு இயற்கைப் பொருள்கள் அவரது உவமை களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பல வகையான அசையாப் பொருள்களும் அசையும் பொருள்களும் அடங்கியுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வானம், பரிதி, நிலவு, விண்மீன்கள், மேகம், மின்னல், இடி, மழை ஆகியன அவரது உவமைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பரிதியே பேரிடம் வகிக்கிறது எனலாம்.

செக்கர்வானம், உலையடங்கும் கருமானின் கொட்டகை போலவும்,[49] செம்மண் மேட்டு நிலத்தைப் போலவும்,[50] பகை வெட்டிச் சாய்த்த படுகளம் போலவும்[51] காணப்படுகிறது.

எழுஞாயிற்றின் எழில் தோற்றம் தக்க உவமைகளோடு காட்டப்படுகிறது. கொல்லன் தீ உலைபழுக்கும் செப்புக்குடம் போலவும்,[52] குங்குமப் பொட்டுப் போலவும்[53] காலைக் கதிரவன் தோன்றுகிறது. விரிவானில் மேலெழுந்த பின்னர் வெண்டாமரைபோல்[54] அது விளங்குகிறது. ஓர் ஓவியனைப்போல்[55] அது உலகப் பொருள்கள்மீது பொன்னிறம் தடவுகிறது.

கீழ்வானில் தோன்றும் கதிரவன் எழுச்சிக்குப் புதுவையில் தோன்றிய பாரதிதாசன்,[56] மூட நம்பிக்கை இருளைக் கிழித்த பெரியார்,[57] மாற்றார்க்கும் ஒளியைத் தந்த அண்ணா[58] ஆகியோர் உவமைப் பொருளாகியுள்ளனர். எழுகின்ற சூரியன் தங்கத் தட்டுக்கும்[59] மறைகின்ற சூரியன் தாமிரத் தட்டுக்கும்[60] உடைந்த தட்டுக்கும்[61] மலைமீது நெருப்புக்கும்[62] உவமையாகிறது. தங்கச் சேற்றில் குருதியாற்றில் சுழல்கின்ற திகிரிபோல மாலை நேரத்தில் மறையும் சூரியன் தோன்றுவதாகக் கவிஞர் கூறுகிறார்.[63]

பிறைமதிக்கு ஒடிந்த யானைத் தந்தம், உள் புதைந்த தட்டு, அவிழ்த்து எடுத்து வைத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒட்டியாணம், அரிந்த பரங்கிக்கீற்று, அழகுப் பெண்ணின் நெற்றி முன் மறைத்து மூடியிட்ட மின்விளக்கு ஆகியன வும்,[64] யானைத் தந்தமும்,[65] பொன்னரிவாளும்[66] உவமை யாயின. முழு நிலவுக்கு முதிர்ந்தோர் யாத்த காவியமும், முற்றிய தேன் இறாலும்[67] பெரிய வெள்ளித் தட்டும்[68] தேனடையும்[69] உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

நிலவொளியைச் சீனத்து வெண்பட்டாகவும்,[70] அல்லெழுந்து வருகின்ற நிலவைக் கவிஞர் கூட்டமாக வும்,[71] இருளைப் போக்கும் தெருவிளக்குகளை, எழுநிலவின் பெருங்கூட்டமாகவும்[72] காண்கிறார் கவிஞர். இங்ஙனம் பிறைமதி, முழுமதி என்னும் நிலையில் அவரது உவமைகள் அமைந்து சிறக்கின்றன.

நிலாவையும் விண்மீன்களையும் இணைத்தும் சில உவமைகளைப் படைத்துள்ளார். பேரரசர் பின் செல்லும் கூட்டம்போல நிலவுக்குப் பின்னால் ஒளி மங்கிக் கிடக்கும் விண்மீன்களைக் காட்டுகிறார்[73] பல குழந்தை கள் பெறுவதைவிட ஒரு குழந்தையே போதும் என்னும் கருத்தை வலியுறுத்த நினைத்த கவிஞர், 'விண் குலத்தில் உடுக்கூட்டம் பலவிருந்தும் என்னாம்? வெண்ணிலவுக் கீடுண்டோ?'[74] என்று நிலாவையும் விண் மீன்களையும் இணைத்துக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விண்மீன்கள் பலவகைப் பொருள்களுக்கு ஒளியா லும் உருவத்தாலும் உவமையாகியுள்ளன. அவற்றுள் உதிர்ந்த முல்லை மலர்கள்,[75] அள்ளித்தெளித்த மணி கள்[76] அட்டிகைப் பொன்மணி,[77] சிந்திய பொன்மலர்,[78] பூத்துத் தொங்கும் பூக்கள்,[79] சிதறிய சிறுசிறு செம்பொன் துண்டுகள்[80] ஆகியவை குறிப்பிடத்தக்கனவாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேகம், மின்னல், இடி, மழை ஆகியவற்றுக்கும் பல உவமைகள் கூறப்பட்டுள்ளன. மேகமானது களைந்த கூந்தல்,[81] தீயின் பெரும் புகை,[82] எருமை,[83] பாறை[84] முதலிய உவமைகளால் காட்டப்படுகிறது.

தூக்கம் கலைந்து எழுகின்ற சோம்பனைப்போலக் கருநிற மேகம் புரண்டெழுவதாகக் கூறப்படுகிறது.[85] உருக்கிய பொன் ஒடிப்பாய்வதைப் போலவும்[86] தங்க உருக்குபாய் தாரைகளைப் போலவும்[87] கருக்கலில் நடப் போரின் கையில் உள்ள மின்விளக்கொளி போலவும்[88] மின்னல் தோன்றுவதாகக் கவிஞர் கூறுகிறார். இடியோசைக்கு உவமையாகச் செருக்களத்து ஓசை காட்டப்படுகிறது.[89] அம்பைப் போல மழை பெய்வதாகக் கூறப்படுகிறது.[90]

குன்று போர் மறவர்க்கும்[91] டாங்கி என்னும் போர்க் கருவிக்கும்[92] யானைக்கும்[93] உவமையாகியது. குறுங்கற் கள் கூரான உளிக்கும்,[94] பெருங்கற்கள் தார்க்குச்சிக்கும்[95] உவமையாயின. அருவி, தோற்றத்தால் கூன்பிறை மதியையும், தொடர்ந்து வீழும் தன்மையால் சொல்லில் வல்லவர் பேருரை நயத்தையும் ஒத்திருப்பதாகக் கூறப் படுகிறது.[96] அருவியின் பேரோசை தயிர் கடையும் ஓசையோடு ஓர் இடத்திலும்[97] முழவு ஆர்த்தலோடு மூன்று இடங்களிலும்[98] உவமையாகியுள்ளது. இங்ஙனம் அருவியின் தோற்றம் அது எழுப்பும் ஓசை, தொடர்ந்து நீர் விழுந்துகொண்டேயிருக்கும் இயல்பு ஆகியவை கவிஞரைப் பெரிதும் கவர்ந்துள்ளன எனலாம்.

ஆறு, வாய்க்கால், ஓடை, வெள்ளம், ஏரி, கடல் ஆகியவற்றுக்குத் தக்க உவமைகள் அமைத்தும், அவற்றுள் சிலவற்றை உவமைகளாகக் கையாண்டும் நயஞ்சேர்க்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறார் கவிஞர். ஆற்றின் பல்வேறு நிலைகளுக்கும் உவமைகள் அமைந்துள்ள பாங்கு எண்ணத் தக்கது. அது பிறக்கும்போது மலைமகள் மார்பு மாலையைப் போலவும், வழியில் உள்ள மண் வளம் யாவையும் ஈட்டி வரும்போது வணிகனைப் போலவும், பொன் கொழிக்கச் செய்யும்போது வள்ளலைப்போலவும், கழிவு நீரை மாற்றி நன்னீராக்கும்போது அறியாமையை நீக்கும் அறிஞரைப் போலவும், உலக உயிர்களுக்கு உணவாக நீருட்டும்போது பெற்றவள் போலவும் தோன்றுவதாகக் கூறப்படும்போது உவமை நயம் சிறப்பதைக் காணலாம்.[99] மேலும் கடலை நோக்கி விரைதலுக்கு, வெறிகொண்ட யானையின் வேகமும்,[100] நீளச் செல்லுதலுக்கு மலைப் பாம்பின் தோற்றமும்,[101] அது ஆரவாரித்தலுக்கு முழ வொலியும்[102] உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன. காவிரி யாறு உவமையாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.[103]

வாய்க்கால், ஏரிக்குத் தாயாகவும், மக்களின் வாழ்வுக்கு ஊன்றுகோலாகவும் உவமையாகின்றது.[104] நீரோடை புதுப்பெண்ணின் புன்முறுவல் போலப் பூத்திருப்பதாகவும்.[105] அதன் ஒலி மத்தளம்போல் முழங்குவதாகவும்[106] கூறப்படுகிறது. ஊற்றுநீர் கரையாத நுரையோடு ஓடுதற்கு, ஓடும் குதிரையின் வாய்நுரை உவமையாக்கப்பட்டுள்ளது.[107] ஏரிக்குப் புதுநீர் விரைந்து பாய்வதும்,[108] ஏரியின் மடை உடைந்து பாய்ந்துவரும் புனலும்[109] முறையே ஓர் ஊரில் ஒரு செய்தி பரவுவதற்கும் ஓர் இடம் நோக்கி விரைவதற்கும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன. காதலிமேல் வெறிகொண்டோன் விருப்பத்திற்குக் கார்காலத்து வெள்ளம் உவமையா கிறது.[110] முத்தையும் பவழத்தையும்[111] கொண்டுள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடலுக்குப் பதுக்கிவைக்கும் கஞ்சனையும் அக்கடலின் அலை புரள்வதற்குத் சிறுவர்கள் விளையாட்டாகச் சண்டையிடுதலையும்[112] உவமைகளாக்கிக் காட்டுகிறார் கவிஞர்.

மண்ணுக்கு அடியில் வளர் தீ இருப்பது போலவும்,[113] எரியிட்ட சூளையைப் போலவும்[114] பனிப்புகை காணப் படுகிறதாம். தோப்பு, துரவுகளைக் கட்புலனுக்கெட்டாது காப்புத் திரையிட்டு வைத்திருப்பதுபோல மூடுபனியும்,[115] பின் பொருளைக் காட்டுகின்ற திரைச் சீலைபோல மூடு பனி மூட்டமும்[116] தோன்றுகிறதாம். இங்ஙனம் பனிப் புகையும் மூடுபனி மூட்டமும் சில உவமைகளால் நயந் தோன்ற காட்டப்படுகின்றன.

முழவின் தோற்றம் பலாப்பழத்திற்கும்,[117] முழவின் ஒலியானது மலையருவி,[118] நீரோடை,[119] நீரலை,[120] ஆறு[121] ஆகிய இயற்கைப் பொருள்களுக்கு உவமையாகக் கூறப்படுவது பெருகிய வழக்காகத் தோன்றுகிறது. அதேபோல், பாம்பும் பல விடங்களில் உவமையாக இடம் பெறுகிறது. நன்செய் உச்சிக் கதிரும்[122] நெற்பயிரும்[123] இழந்துவரும் குன்றத்து அருவியும்[124] நீண்டு செல்லும் ஆறும்,[125] நழுவியோடும் ஓடையும்[126] கரை நோக்கிக் குமுறிவரும் கடலும்,[127] அதன் அலையும் [128] பாம்புபோல் தோன்றுவதாகக் கூறப்படுகிறது. இங்ஙனம் பல்வேறு இயற்கைப் பொருள்களுக்கு உவமைகளாக அமைவதில் முழவும் பாம்பும் பெருவழக்குப் பெற்றுத் திகழ்வதாகக் கொள்ளலாம்.

உயிரினங்களுள் யானை,[129] புலி,[130] காளை,[131] எருமை,[132] மான்,[133] நாய்,[134] பூனை,[135] ஈசல்,[136] வண்டு,[137] மீன்,[138] பாம்பு,[139] தவளை,[140] குயில்,[141] மயில்,[142] புறா,[143]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிளி,[144] நாரை,[145] வாத்து,[146] காக்கை,[147] சேவல்,[148] கோழிக்குஞ்சு[149], வானம்பாடி[150], சிறகி[151] நண்டு[152], ஆகிய நிலம்வாழ், நீர்வாழ் விலங்கு பறவையினங்கள் வாணிதாசனின் கவிதைகளில் உவமைகளாகவும் உவமைப் பொருள்களாகவும் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில பெருகிய வழக்காகவும் சில அருகிய வழக்காகவும் கையாளப்பட்டுள்ளன. ஒரு கருத்தை விளக்கு வதற்குப் பல உயிரினங்களை ஒருங்கிணைத்து உவமைப் படுத்தியுள்ள பாங்கும் காணப்படுகிறது. எடுத்துக் காட்டாக, நாயைப் போல், பூனையைப் போல் ஈசலைப் போல் பல குழந்தைகளைப் பெற்றெடுப்பதால் பயனில்லை என்றும், யானையைப் போல் ஒரு குழந்தையைப் பெறுவதே சாலச் சிறந்தது என்றும் பல உயிரினங்களை உவமைப்படுத்திக் குடும்ப நலத்திட்டம் வலியுறுத்தப் படுகிறது.[153] மூடப்பழக்க வழக்கங்களை எதிர்ப்பதில் ஆற்று நீரை எதிர்த்தேறும் மீன்போல உறுதியோடு இருக்க வேண்டும் என்னும் உவமை பலவிடங்களில் கையாளப்பட்டுள்ளது[154]. ஈசல், ஏரிச்சிறகி, வானம்பாடி தவளை முதலானவை மிக அருகிய நிலையில் உவமை களாகியுள்ளன.

மரஞ்செடி கொடிகளுள், மா,[155] தென்னை,[156] பனை,[157] வேம்பு[158] தாழை,[159] இலவு,[160] நெற்பயிர்,[161] மலர் வகைகளுள் தாமரை,[162] அல்லி,[163] முல்லை,[164] முருங்கைப்பூ,[165] செவ்வந்தி,[166] முதலானவை உவமை களாகியும் உவமைப் பொருளாகியும் உள்ளன. அவற்றுள், தீஞ்சுவைக் கவிதைக்குத் தென்னையின் இளநீரையும்[167] தமிழ்க் கதைப் பாட்டுக்குப் பனையிலிருந்து இறக்குகின்ற பதநீரையும்[168] சுவையடிப்படையில் உவமையாக்கியது குறிப்பிடத் தக்கதாகும். மேலும், தவித்திருக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கன்னிப்பெண் ஒருத்திக்கு உவமையாக நடுக்காட்டு முல்லையைக் காட்டியிருப்பது தனிச் சிறப்பு வாய்ந்த தாகும்.[169]

ஒளியாலும் நிறத்தாலும் பொன், மணி ஆகியவை யும் உவமையாகியுள்ளன. பொன், விண்மீனுக்கும்[170] மலைப்பொதி சம்பாவுக்கும்[171] உவமை கூறப்பட்டுள்ளது. தங்கம், மேனிக்கும்,[172] பரிதிக்கும்[173] உவமையாகியது. மணியானது, சங்க இலக்கியத்துக்கும்[174] புகழ்மொழிக் கும்[175] பனித்துளிக்கும்[176] உவமையாகப் பயன்பட்டுள்ளது.

அடுத்துவரும் மகளிர் பற்றிய உவமைகள், புத்தாக்க உவமைகள் ஆகிய பகுதிகளிலும் பல இயற்கைப் பொருள் கள் இடம் பெற்றுள்ளன. அப் பகுதிகளில் அவை உவமை களாக அமைந்துள்ள பாங்கினைக் காணலாம்.

பெண்டிரைப் பற்றிய உவமைகள்

சங்க காலம் முதலாகப் பெண்டிரின் தோற்றப் பொலிவைப் புலப்படுத்திக் காட்டுவதற்குப் பல்வேறு இயற்கைப் பொருள்கள் உவமைகளாக அமைந்து வருகின்றன. தற்காலத் தமிழ்க் கவிதைகளிலும் அந் நிலை நீடிக்கவே செய்கிறது. வாணிதாசனும் பெண்டிரின் தோற்றப் பொலிவைப் பாடும்போது அம் மரபு நிலையையே பெரிதும் பின்பற்றியுள்ளதாகத் தெரிகிறது. அவரது கவிதைகளில் பெண்டிர் தம் தோற்றம் இயற்கைப் பொருள்களால் உவமிக்கப்பட்டிருப்பதைப் 'பாதாதி கேசமாக' ஈண்டுக் காணலாம்.

பெண்டிரின் அடி மென்மையால் மலருக்கும்[177] நடை தன்மையால் அன்னத்திற்கும்[178] உவமிக்கப்பட்டுள்ளன. இடை மின்னலுக்கும் துடிக்கும் கொடிக்கும் நூலுக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈயாக் கஞ்சனின் இல்லை எனுஞ் சொல்லுக்கும் உவமிக்கப்பட்டது.[179] மார்பகம் பேதும்பைப் பருவத்தில் பருத்திக்காய்க்கும், மங்கைப் பருவத்தில் தாமரை மொட்டுக்கும், மடந்தைப் பருவத்தில் பந்துக்கும், அரிவைப் பருவத்தில் மலைநுனிக்கும், தெரிவைப் பருவத்தில் பழந்தூங்கும் வெளவாலுக்கும், பேரிளம் பெண் பருவத்தில் ஒட்டு மாங்கனிக்கும் மற்றும் பொதுவாக நிமிர்ந்த வெண்தாமரை, சிரம்பு, செப்புச் சிமிழ், தெங்கிளநீர் ஆகியவற்றுக்கும் உவமிக்கப்பட்டுள்ளது.[180] ஈண்டு, பல்வேறு பருவங்களுக்கு ஏற்ற வகையில் உவமைகளை அமைத்துள்ள பாங்கு எண்ணத்தக்கதாகும்.

பெண்டிர் தம் தோளுக்கு மூங்கில் உவமையாகியது.[181] அவர்தம் கைகளுக்குப் பொதுவாக வரால் மீன்களும், முன்கைக்குச் சிறப்பாக வாளையும், கைவிரல் அசைவிற்குக் காந்தள் மலரும் உவமையாகியுள்ளன.[182] கழுத்துக்குச் சங்கும் விளைகமுகும் மண்குடத்து வாயும் உவமையாயின.[183] வயது முதிர்ந்த பெண்டிரின் முதுக்குக்குக் கொட்டை முந்திரி உவமையாகியுள்ளது.[184] கன்னத்திற்குப் பொதுவாகச் சந்தனப் புதுப்பலகை' ஓடை மலர், புதுமைக்கவி ஆகியவையும் கன்னச் சுழிக்கு ஆற்றுநீர்ச் சுழிப்பும் உவமையாகியுள்ளன.[185] மற்றும் மடந்தைப் பருவத்துக் கன்னம், கோடை விண் அனல் மாற்றும் தோப்புக்கும், தெரிவைப் பருவத்துக் கன்னம், வாடிய சாந்துக்கும், பேரிளம் பெண்ணின் கன்னம் நீரிலா ஓடைக்கும்; கிழவியின் கன்னம் காய்ந்த மாங்கனிக்கும், பைத்தியக்காரியின் கன்னம், புகையிடப் பட்ட ஆடிக்கும் உவமிக்கப்பட்டிருப்பது[186] கவிஞரின் தனித் திறனைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்டிரின் வாய்மொழிக்குத் தேன், கரும்பு, மெல்யாழ், தேன் கலந்தபழச்சாறு, கிளிமொழி, குயிலின் குரல் ஆகியவையும், பெதும்பைப் பருவத்துச் செஞ்சொல்லுக்குக் கலப்பிலாப் பாலும் உவமையாகி யுள்ளன.[187] பேரிளம் பெண்ணின் வாய்க்கு நிழலில்லாத தோப்பும், கிழவியின் வாய்க்குக் கரும்புச் சொத்தையும் உவமையாயின.[188]

பெண்டிரின் இதழ்களுக்குக் கோவைச் செம்பழம், அல்லிக்காடு, தேன் ஆகியவையும், பெதும்பைப் பருவத்து இதழ்களுக்கு மட்டும் கோவைச் செங்காயும் உவமையாகியுள்ளன.[189] பெண்டிரின் பற்களுக்கு முத்து, முல்லை, புன்னைமொட்டு, முருங்கை மொட்டு, மாதுளைவித்து, நாணல்முளை ஆகியவை உவமையாயின.[190] அவர்களின் சிரிப்புக்குத் தென்னை முகிழ்பாளையும், பூத்த அலரியும் உவமையாகின்றன.[191] அவர்தம் மூக்குக்கு எட்பூ உவமையாகியது அருகிய வழக்காகும்.[192]

பெண்டிரின் விழிகள் கூரிய நோக்கு கருதி அம்புக்கும் உளிக்கும் வாளுக்கும் வேலுக்கும், மருண்ட பார்வை கருதி மானின் நோக்குக்கும், பிறழ்தலும் வடிவும் கருதி கெண்டை, கயல், சேல், வண்டு ஆகியவற்றுக்கும், மென்மையும் தன்மையும் கருதி நீலம், தாமரை ஆகிய மலர்களுக்கும், வடிவு கருதி மாவடுவுக்கும் உவமிக்கப் பட்டுள்ளன.[193] பேதைப் பருவத்துக் கண்கள், சிலை செயக் கொல்லன் தேடும் இரும்புக்கும், பெதும்பைப் பருவத்துக் கண்கள் தாயுடன் சேர்ந்து நீந்தும் தடக்கய லுக்கும், அரிவைப் பருவத்துக் கண்ணின் வீச்சு, கூர்வாளின் வீச்சுக்கும், தெரிவைப் பருவத்துக் கண்கள்

வா.—4

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூர்மழுங்கிய வேலுக்கும், பேரிளம் பெண்ணின் கண்கள் போரிட உதவாத வேலுக்கும், கிழவியின் கண்கள் வடிவால் வெதும்பிய மாவடுவுக்கும் நிறத்தால் முற்றிய பிரப்பங் காய்க்கும் உவமிக்கப்பட்டன.[194]

பெண்டிரின் புருவத்திற்கு வில்லும் உழுந்தும் தோற்றத்தாலும் நிறத்தாலும் உவமையாயின.[195] அவர் தம் நெற்றிக்கு பிறைநிலா, கொடுவாட் கத்தி ஆகியவை யும் அந்நெற்றியில் உள்ள சாந்துப் பொட்டுக்கு முழு நிலவும் கிழவியின் நெற்றிச் சுருக்கத்திற்குப் புன்செய் நிலந்தோன்றும் படைச்சாலும் உவமையாகியுள்ளன.[196] பொதுவாகப் பெண்டிரின் முகத்திற்குத் தாமரை, நிலா ஆகியவையும், சேரிப் பெண்ணின் முகத்திற்குச் செல்லுண்ட நிலாவும், கிழவியின் முகத்திற்கு மின்னல் சேர் வெண்மதியும் உவவையாயின.[197]

பெண்டிரின் கூந்தல் நெளியுந்தன்மையால் கடல் அலைக்கும், நிறத்தால் கார்மேகம் இருள் கருமணல் ஆகிய வற்றுக்கும் உவமிக்கப்பட்டது[198] கூந்தலுக்கு உவமை யாவதில் கடல் அலையே பெருவழக்கும் பெற்றுள்ளது எனலாம். பேரிளம் பெண்ணின் கூந்தல் கோடை காலத்து மேகத்திற்கும், கிழவியின் தலைமயிர் முற்றிய கருப்பம் பூவுக்கும், நரைத்த கூந்தல் நாணலின் பூவுக்கும் உவமிக்கப்பட்டுள்ளன.[199] பெண்டிரின் பின்னல் சடை, கரும்பாம்புக்கும் எருமைக் கொம்புக்கும் மேதிவாலுக்கும். அவர்கள் அணியும் கொண்டை மலர் உதிக்கும் நிலவுக்கும் உவமிக்கப்பட்டன.[200]

பெண்டிரின் மேனிக்குச் செந்தளிரும், அதன்மேல் படரும் பசலைக்குச் சிந்திய தாதுவும், அதன் நிறத்திற்கு வெள்ளரியும், அதன் நாற்றத்திற்கு நொச்சிப்பூ மணமும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன் தழுவலுக்குத் தென்றலும், தெரிவைப் பருவத்து மேனிக்குப் பழுப்பேறும் இலையும் உவமையாகி யுள்ளன.[201] பெண்டிரின் சாயலுக்கு அன்னம் அழகுப்பிடி சின்னமயில் ஆகியவையும், அவர்கள் தரும் இனிமைக்குத் தென்றல், சோலைக் குளிர்மை, அன்றலர்ந்தபூ, ஆகியவையும் உவமையாயின.[202]

இங்ஙனம் பெண்டிருக்கு இயற்கைப் பொருள்களை யும் பிறவற்றையும் உவமைகளாகப் படைத்த கவிஞர், அவற்றில் மனநிறைவு கொள்ளாமல் உவமைகளைத் தேடி அலுத்த அனுபவத்தை அழகுபடக் கூறுகிறார்.

"முகிலிடைத் தோன்றி ஒளிவிடும் திங்கள்
முகத்தாள்! பொருந்தாது! மாசுண்டு திங்கட்கு!
நெற்றி பிறையாம்! பிறைவளர்ந்து தேயும்!
இளமூங்கில் கைகள்! மலையா பிறப்பிடம்?
பூவிழி! இல்லை; சுனைவாழும் பூக்கள்!
மயிலியல்; அன்றன்று; கார்கண்டே ஆடும்மயில்!
சொல்கிளி! சொல்ல உரைக்கும் பசுங்கிளி!
ஒவ்வா உவமையைத் தேடி அலுத்தேன்!
அவளுக் கவளே!......................[203]

என்னும் பாடல் கவிஞரின் அவ் அனுபவத்தை நன்கு புலப்படுத்துகிறது எனலாம்.

அம் மகளிர் பெற்றெடுத்த மழலையர் பற்றியும் பல்வேறு உவமைகள் கூறப்பட்டுள்ளன. மழலையரின் அடிக்குத் தோற்றத்தால் வள்ளிக்கிழங்கும், மென்மைத் தன்மையால் மலரும் உவமையாயின.[204] குழந்தைகளின் கால்கைகளுக்கு, 'சித்திரை துளிர்த்த மாவின் சிறு இலை' உவமை கூறப்படுகிறது.[205] நெற்றிக்குத் திங்கட் பிறையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விழிக்குச் சேலும், இதழுக்குச் செவ்வல்லியும் உவமையாகியுள்ளன.[206] அவர்தம் பல்லுக்கு அரும்பு உவமையாகியது.[207] தாழம்பாயில் சுற்றிச் சுழன்று தவழும் குழந்தைக்கு, ஆலை எருது உவமையாகியது.[208] குழந்தையே உவமையாகும் இடங்களும் வாணிதாசன் கவிதைகளில் காணப்படுகின்றன. சட்டி படர்ந்த கொடிப்பூ தலைமேல் அசைவதற்குத் தொட்டிலில் விழித்த குழந்தை தொங்கிச் சிரிக்கும் காட்சியும்.[209] காதலன் மனம் காதலியை நாடும் வேகத்திற்குப் பெற்றவள் சொல்கேளாது மண்ணிற்கேகும் பிள்ளை விரைந்து செல்லுதலும்.[210] இருகால் நக்கி முகத்து நேர் குரைத்து இன்பம் நல்கும் நாயின் நன்றிச் செயலுக்குத் துன்பத்தை மாற்றுகின்ற இன்முகப் பிள்ளையின் இயல்பும்.[211] உவமைகளாகக் காட்டப்படுகின்றன.

புத்தாக்க உவமைகள்

வாணிதாசன் கவிதைகளில் கவிஞரின் தனித் திறமையைப் புலப்படுத்தும் வண்ணம் அமைந்த உவமைகளும் பலவுள. அவற்றுள் சில அவரின் புதிய படைப்பாகவும் திகழ்கின்றன. மகளிர் இடைக்குக் குற்றியலுகரத்தின் ஒலியை உவமையாகக் கூறும்போது[212] கவிஞரின் தனியாற்றல் வெளிப்பட்டுத் தோன்றுவதைக் காணலாம். "குற்றியலுகரத்தின் ஒலியை உவமையாக எடுத்தாண்ட முதற்கவிஞர் வாணிதாசரே என்றால், அது மிகையாகாது" என்பர்[213] இதுபோல் உகரம் அரிவாளுக்கும்,[214] எழுத்துப் புணர்ச்சி காதலர் உளம் ஒன்றுவதற்கும்,[215] உடம்படுமெய் அக் காதலரின் உடல் ஒன்றுவதற்கும்,[216] ஆய்தப் புள்ளி அடுப்புக்கும்[217] உவமப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் புதிய உவமைகளைப் படைக்கும் கவிஞரின் தனித்திறன் புலப்படுகிறது எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னோர் வழியைப் பின்பற்றி இயல்பான உவமைகளை அமைக்கும் போதும், கவிஞரின் போக்கு தனிப் போக்காகவே காணப்படுகிறது. பொருள்களின் இயல்புக் கேற்றவாறு அமையும் உவமைகள் பலவற்றில் கவிஞரின் தனி இயல்பும் வெளிப்படுவதைப் பரக்கக் காணலாம். கள்ளி இலை முயல்காதுக்கும்,[218] தாழைமுள் நெல்லரிசிக்கும்,[219] காட்டுப் பூனைப்பல் முல்லை மொட்டுக்கும்,[220] ஆமைத்தலை பறங்கிக்காய்க்கும்,[221] செம்பொன் சிறுகிண்ணம் பூசணிப்பூவுக்கும்,[222] வெள்ளரிக்காய்த் தோல் வெள்ளைக் கோடுகளை உடைய அணிலின் முதுகுக்கும்,[223] ஈச்சங்கொட்டை சிட்டு இடும் முட்டைக்கும்.[224] கொட்டைப் பாக்கு மஞ்சள் சிட்டுக்கும்,[225] ஈச்சம் பழக்காய்கள் பவழங் களுக்கும்,[226] வாழைத்தண்டு யானையின் நீண்ட கொம்புக்கும்,[227] மாதுளை விதை சம்பா பச்சரிக்கும்,[228] காட்டுக் களாம்பழம் கருவண்டுக்கும்,[229] முனைமடிந்த நீள்வாள் தாழைமடலுக்கும்,[230] இரும்புச் சல்லடை தேன் கூட்டிற்கும்,[231] வேப்பம்பூ நண்டின் கண்ணுக்கும்.[232] முதலையின் உடல் வண்ணம் முதிர் மரப்பட்டைக்கும்,[233] மஞ்சள் கிழங்கு சேவலின் விரலுக்கும்,[234] முதிராத வாழைப் பிஞ்சு, தச்சர்கை உளிக்கும்,[235] பம்பரம் தாமரை மொட்டுக்கும்,[236] கீரையின் காம்பு, கோழிக்குஞ்சு விரலுக்கும்,[237] நொச்சிச்சருகு, நுணலைக் கருவாட் டிற்கும்,[238] திரிகல் கொட்டுபறைக்கும்,[239] முழுவரகரிசி ஆலமரத்தின் அடிமரத்தை அரிக்கும் செல்லுக்கும்,[240] வெண்ணெய்க் குன்று தலைப்பாகைக்கும்.[241] மீன் பிடிப்போர் எறிகின்ற தூண்டில் களிறுவளைத்த இளந்தழை மூங்கிலுக்கும்,[242] வாரல் மீன் குஞ்சு குழந்தையின் முன் காலுக்கும்,[243] மாட்டிவைத்த மெல்யாழ் வேலியிலே தொங்கும் சுரைக்காய்க்கும்,[244] கவிழ்த்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீலச்சட்டி கண்முன் தோன்றும் வானத்திற்கும்.[245] உவமிக்கப்பட்டுள்ள இடங்கள் தக்க, சான்றுகளாக எண்ணத்தக்கன. இங்ஙனம் எப்பொருளையும் கூர்ந்து நோக்கி அதனோடு ஒத்த இயல்புடைய பொருளோடு உவமைப்படுத்திக் காட்டுவதிலும் தனது தனித்தன்மையைக் காட்டுகிறார் வாணிதாசன் எனலாம்.

கவிஞரின் தனித்தன்மை மிக்க உவமைகளின் உருவாக்கத்திற்கு நடைமுறை வாழ்க்கை அனுபவங்களும் காணும் காட்சிகளும் அவருக்குப் பெரிதும் உதவியுள்ளன. சாலையில் போற்றுவாரின்றி முணறிக் கொண்டிருக்கும் காட்டுப்பூவிற்குத் தூக்கிவிடாக் கவிஞனும்,[246] சாலையாய் நிலத்தைப் பிளக்கும் உழவர் செயலுக்குப் பாலிலாத் தாயின் முலையினைப் பற்களால் கடித்திழுக்கும் குழந்தையின் செயலும்,[247] கழனியில் களைகளைப் பிய்த்து எடுப்பதற்குப் பெண் தலையினைக் கோதிப் பேன் எடுக்கும் செயலும்,[248] குறுவை நெல் அறுத்திட்ட நன்செய்க்குக் கைம்மைக் கோல முகமும்,[249] காதலியின் கலக்கத்திற்கு நீர்ப்பானை தீயேற நிலை குலையும் அரிசியும்,[250] காதலியின் கண்ணீர்த் துளிகளுக்குக் குழம்பாக்கும் சட்டியின் மூடி சொட்டும் நீரும்,[251] மணிக் கூண்டுக்குக் கூட்டினில் இருந்து கொண்டே குடியினை ஊக்கி நாளும் ஆட்டிடும் பெரிய மாமியும்,[252] அத்தையின் ஏவலை அக்கறையின்றிச் செய்யும் மருமகளின் செயலுக்குப் புத்தகத்தை அசட்டையாகப் புரட்டிப் பார்க்கும் செயலும்,[253] கணவனுக்காகக் காத்திருக்கும் மனைவி அறைக்கும் வாயிலுக்குமாகப் போய்வரும் செயலுக்குப் படித்துறை இல்லாத குளத்தில் குளித்திடச் சுற்றிச் சுற்றி வருவோரது செயலும்,[254] காதலியைப் பிரிந்து காதலன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தவிப்பதற்குப் பொருளைத் தேட இருட்டறையில் நுழைந்தவனின் தவிப்பும்,[255] வீராப்புப் பேசுவோர் ஓசை படாமல் ஒருவர் பின் ஒருவராக ஒதுங்கிப் போவதற்குக் கழைக் கூத்தாடியின் ஆட்டத்தைக் கண்டுகொண்டிருந்தோர் அவன் கைநீட்டிக் காசு கேட்கும்போது ஒவ்வொருவராக நழுவிச் செல்லுதலும்,[256] கொல்லைப் புறத்தில் குஞ்சுகள் பின்தொடரப் பெட்டைக் கோழி தலைதூக்கி முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டு செல்வதற்கு நல்ல தலைவர் நடந்துவரும் காட்சியும்,[257] காடெல்லாம் சுற்றிவந்து காதலியை அடைந்த காதலனுக்குக் கள்ளுண்ண விழைகின்ற புதுக்குடியனும்,[258] கடுவன் மந்திக்கு உரித்துப் பலாச்சுளை ஊட்டி மகிழ்தற்கு விரிவுரையாளர் விளக்கும் கவியும்,[259] விண்ணில் அங்குமிங்கும் தோன்றும் விண்மீன்களுக்கு வேரிட்ட குண்டு பலா வெடித்திட்ட வகையும்,[260] காதலனைப் பிரிந்திருக்கும் காதலியின் மேனியழகு பொலிவற்றுத் தோன்றுவதற்கு நிழலில் துளிர்த்த சிறு கிளையின் நீள் இலையும்,[261] கோபுரத்திலிருந்து கூட்டமாய்க் கிளம்பும் புறாக்களுக்கு, இலவம் வெடிக்க எழுந்து பறக்கும் பஞ்சும்,[262] ஒருவன் தலையணைமேல் கையூன்றிப் பிடரி தாங்கி படுத்திருக்கும் நிலைக்குக் கிணறு ஏறத் தத்தளிக்கும் நல்ல பாம்பின் நிலையும்,[263] கட்டை எறும்புகள் தொடர்ந்து செல்வதற்குக் கரியால் இழுத்த கோடும்,[264] ஆடவரின் அரும்பு மீசைக்கும்[265] கன்னியரின் நீள் புருவத்திற்கும்[266] எறும்புச் சிறு தொடரும், விண்மீன்களோடு கூடிய வானத்திற்குச் செல்லுண்ட குடையும்,[267] வானம் தேக்கிய வெண்முகில்களுக்குத் தூக்கிய கூடாரத்துத் துணிகளின் கிழிசலும்,[268] குடும்பத்தின் நலம் விளக்க வந்த தலைவிக்கு நாள் விளக்க வருகின்ற வைகறைப்பொழுதும்,[269] கணவனின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரவை எதிர்பார்த்து ஏமாந்த மனைவியின் வாடி வதங்கும் கண்களுக்கு வறுமையில் வாழும் ஏழை மக்களின் முகமும்[270] உவமைகளாகியுள்ளன. அவற்றுள் சில உவமைகளாலும், மற்றும் சில உவமிக்கப்படும் பொருள்களாலும் தனித்தன்மை பெற்றுச் சிறக்கின்றன; வெளியீட்டு முறையாலும் சில தனித்தன்மை மிக்கு காணப்படுகின்றன.

வழக்காற்று உவமைகள்

மக்கள் மத்தியில் பழக்கத்தில் இருந்துவரும் சில வழக்கு மொழிகளையும், முன்னோர் தம் வாழ்க்கை அனுபவம் வடித்துத் தந்த பழமொழிகளையும் தம் கவிதைகளில் உவமைகளாகக் கையாள்வது கவிஞர்தம் இயல்பாகும். அவ் வியல்புக்கேற்ப வாணிதாசன் கவிதைகளிலும் பல வழக்காற்று உவமைகள் காணப்படுகின்றன. 'ஒத்துக்கு மத்தளம் போல்' என்பது மக்களிடம் தொன்றுதொட்டு வழங்கி வரும் முன்னோர் மொழிகளுள் ஒன்றாகும். அதனை மூன்று இடங்களில் கவிஞர் பயன்படுத்தியுள்ளார்.[271] மேலும் செக்காட்டுவார் போல,[272] கடன் கொடுத்தான்போல,[273] துணி மாற்றல் போல,[274] கள்ளிச் சாறைப்போல,[275] பலா மொய்க்கும் ஈப் போல,[276] சிட்டெனப் பறந்து,[277] காதறுந்த செருப்பாம்,[278] தோண்டி விளக்குப்போல்,[279] கார்த்திகை விளக்குப்போல்,[280] மாற்றாந்தாய்,[281] தாயில்லாப் பிள்ளையைப் போல்,[282] பெற்றாளை இழந்தான் போல்,[283] ஊசற் குழம்பாக்கி மற்றும் பழம்பாயாய்,[284] பனிப்படலம் பகலவன் முன் (சூரியனைக் கண்ட பனிபோல)[285] கீரியின் முன் பாம்பாவான்,[286] வலைப்பட்ட மானாய்,[287] தஞ்சாவூர்ப் பொம்மையைப்போல்,[288] செல்லாக் காசாவாய்,[289] சொக்குப்பொடி மருந்து,[290] சுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மருந்தாகும்,[291] வேலியிழந்த விளைபயிர் போல்,[292] ஓணான் போல,[293] மோர்ச் சோற்றைக் கண்டலையும் பூனையைபோல,[294] எலியைத் தொடரும் பூனையைப் போல,[295] பெட்டையினைத் துரத்திச் செல்லும் ஆண் கோழி போல்,[296] படையுடைந்த மேட்டுவயல் நீரைப் போல,[297] தலை இருந்த புளிமுட்டை இறக்கிவைத்த வழிப்போக்கன் போல்,[298] கல்லைக் கிணற்றிற் போட்டதைப் போல,[299] வித்தைச் சமைத்து விருந்தூட்டியது போல,[300] தேனடைகாக்கும் தேன்வண்டு போல,[301] வாழையடி வாழையென,[302] எனப் பல வழக்கு மொழிகளைப் பல்வேறு சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தியுள்ள பாங்கினை அவரது கவிதைகளில் பரக்கக் காணலாம்.

தொன்றுதொட்டு மக்கள் மத்தியில் வழங்கிவரும் பழமொழிகளை, அப்படியேயும் சிறிது மாற்றியமைத்தும் உவமைகளாகப் பயன்படுத்தியுள்ள பாங்கும் வாணிதாசன் கவிதைகளில் காணப்படுகிறது. முடவன் கொம்புக்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல் என்னும் பழமொழி 'தேன் பார்த்து நிற்கின்ற முடவனைப் போல்'[303] என்று கவிஞரால் கையாளப்படுகிறது. 'குறள் கற்றோர் முன்னர் விரல் நீட்டல் கூடா' என்பது அறவுரை மட்டுமன்று; ஆன்றோரின் பழமொழியுமாகும் என்கிறார் கவிஞர்.[304] வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போல் என்னும் பழமொழியை இரு இடங்களில் கையாளுகிறார்.[305] காட்டிலே வரகு விளைஞ்சாலும் கல்லுரலுக்கு ஒரு நாள் வந்துதான் ஆகணும் என்னும் பழமொழி.

"காட்டோரப் புன்செயிலே வரகுவிளைந்தாலும்
கல்லுரலுக் கென்றேனும் வந்தாக வேண்டும்"[306]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று தக்க இடத்தில் எடுத்துக் காட்டு உவமையாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், தேள்கொட்ட நெறி தென்னைக் கேறலுண்டோ?[307] உப்பிட்ட வரை என்றும் மறக்கவே கூடாதே.[308] வெறுங்கையால் முழம்போடக் கூடுவதோ,[309] குரைத்துப் பெற்ற செல்வம் குரைக்குமோ![310] அன்னை அறியாத சூலுண்டோ?[311] அடிமேலோர் அடிவீழ அம்மியும் ஓர்நாள் அசைந் தாடும்,[312] பழுத்திருக்கும் மரத்தை நோக்கிப் பறந்து செல்லும் புட்கள் போல்,[313] ஆக்கப் பொறுத்தோம் ஆறப்பொறுப்பமெனும்.[314] பணமோடிப் பாதாளம் பாயும்,[315] தெருவெல்லாம் ஆறாகப் புரண்டாலும் நாய் கள் தானுண்டு மகிழாதாம்; நக்கித்தான் பார்க்கும்[316] குளத்து நீர் வருவெள்ளம் கொடுபோகா தென்கின்ற,[317] எச்சிக்கை ஒட்டா...கஞ்சன்,[318] வம்புக்குப் போகாது, வந்ததைவிடாது,[319] ஏட்டுச் சுரை ஆகாமல்,[320] முதலான பழமொழிகளைக் கொண்டும் பல உவமைகள் படைக்கப் பட்டுள்ளன. இவற்றின் மூலம் முன்னோர் மொழி களைப் பொன்னே போல் போற்றும் கவிஞரின் ஆர்வம் புலப்படுகிறது எனலாம்.

உவமைகளில் நகைச் சுவையை அமைத்துப் பாடும் வழக்காறும் கவிஞர்களிடம் நிரம்ப உண்டு. அதற்கு இணங்க வாணிதாசன் கவிதைகளிலும் சில நகைச்சுவை உவமைகள் காணப்படுகின்றன.

உப்பிய வயிற்றைத் தூக்கி
ஒருபையன் ஓடி வந்தான்;
சப்பிய பனங்கொட் டையோ?
தலையோ? என் றையங் கொண்டேன்!''[321]

என்னும் பாடலில் நகைச்சுவை உவமையின் நயத்தினை நன்கு உணரலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும் ஈயம் பூசுகிறவன் தோற்றத்தை 'பொய்க்கால் குதிரைபோலக் கைகால் தலையை ஆட்டி'[322] என்று காட்டும் போதும், கிழமச்சானின் விழிகளைப்பற்றி, மொச்சைபோல விழி இரண்டும்[323] என்று நையாண்டியுடன் குறிப்பிடும்போதும் நகைச் சுவைப் போக்கின் தெறிப்புகள் புலப்படுவதைக் காணலாம்.

வாழ்த்தும் போது ஆற்று மணலினும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவது தோன்றுதொட்டு கவிஞர் களால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் வழக்கமாகும். அவ் வழக்கத்தை வாணிதாசனும் பின்பற்றிப் பாடுகிறார்.

"பொன்னிப் பேராற்றுப்
பொடிமணல்போல் பல்லாண்டு
மன்னி நீ வாழ்க மகிழ்ந்து!"[324]

இங்ஙனம், பல்வேறு வகையான உவமைகளைக் கையாண்டு, இலக்கிய உலகில் தன்னையும் ஓர் ஒப்பற்ற 'உவமைக் கவிஞராக'[325] நிலைநாட்டிச் சென்றுள்ளார் வாணிதாசன் எனலாம்.

குறிப்புகள் :

1. தொல்காப்பியம், உவமயியல், 272
2. தண்டியலங்காரம், பொருளணியியல், 31
3. டாக்டர் மு.வ. இலக்கியத்திறன் (சென்னை 1959), ப. 227
4. சு. தில்லைவனம், 'வாணிதாசன்—ஒரு புதுமைக் கவிஞர்' கவிஞரேறு வாணிதாசனார் நினைவு மலர், (புதுவை, 1979) ப. 32

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி,
ப. 57, பா. 2
6. வாணிதாசன், இன்ப இலக்கியம், ப. 20, வ. 9, 10
7. " தொடுவானம், ப. 28
8. " கவிதைகள், முதல் தொகுதி, ப. 40
9. " பாட்டுப் பிறக்குமடா!, ப. 23
10. " தீர்த்தயாத்திரை, ப. 38
11. " இரவு வரவில்லை, ப. 83 & 84
12. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 89
13. " குழந்தை இலக்கியம், ப. 137 பா. 7
14. " கவிதைகள், முதல் தொகுதி,
ப. 25, பா. 2
15. " சிரித்த நுணா, ப. 83, பா. 3
16. " எழிலோவியம், ப. 23, பா. 8
17. " எழில் விருத்தம், ப. 27, பா. 2
18. " சிரித்த நுணா, ப. 57, பா. 2
19. வாணிதாசன், பாட்டரங்கப் பாடல்கள், ப. 24, பா. 8
20. " எழிலோவியம், ப. 14, பா. 5
21. (i) " இன்ப இலக்கியம், ப. 35 வ. 3-10
(ii) " தீர்த்தயாத்திரை, ப. 1
(iii) " பொங்கற் பரிசு ப. 22, பா. 4
(iv) " தமிழச்சி, ப. 8, பா. 20
22. டாக்டர் ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், ப. 221
23. தொல்பொருள் அகத்திணையியல், நூற்பா. 48
24. வாணிதாசன், இரவு வரவில்லை, ப. 34
25. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 134
26. " இன்ப இலக்கியம், ப. 19
27. " இரவு வரவில்லை, ப. 30
28. டாக்டர் ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், ப. 39
29. வாணிதாசன், எழில் விருத்தம், ப. 35, பா. 2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

30. வாணிதாசன், இன்ப இலக்கியம், ப. 19-21
31. ” ” ப. 25, 26
32. ” ” ப. 16-24
33. ” இரவு வரவில்லை, ப. 21
34. ” குழந்தை இலக்கியம், ப. 96-98
35. ” கவிதைகள், முதல் தொகுதி, ப. 2, வ. 30-33
36. ” எழிலோவியம், ப. 27, பா. 6
37. வாணிதாசன், பாட்டுப் பிறக்குமட!, ப. 2
38. ” பாட்டரங்கப் பாடல்கள், ப. 170
39. ” பாட்டரங்கப் பாடல்கள், ப. 15, வ. ப. 2
40. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப். 127
41. வாணிதாசன், பாட்டரங்கப் பாடல்கள், ப. 44, பா. 24
42. வாணிதாசன், பாட்டுப் பிறக்குமடா! ப. 57
43. வாணிதாசன், கொடி முல்லை, ப. 37, பா. 72
44. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 127
45. வாணிதாசன், பாட்டரங்கப் பாடல்கள், ப. 127
46. ” பாட்டுப் பிறக்குமடா, ப. 76
47. ” பாட்டரங்கப் பாடல்கள், ப. 17 வ. 71-73
48. ” இரவு வரவில்லை, ப. 29, பா. 5
49. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 44 பா. 6.
50. வாணிதாசன், குழந்தை இலக்கியம், ப. 9
51. ” இரவு வரவில்லை, ப. 3, பா. 3
52. வாணிதாசன், எழில் விருத்தம், ப. 42, பா. 10
53. ” பொங்கற் பரிசு, ப. 20, பா. 1
54. ” ” ப. 16, பா. 2
55. ” தமிழச்சி, ப. 1, பா. 1
56. ” பாட்டரங்கப் பாடல்க்ள், ப. 83, & ப. 169

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

57. வாணிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப. 18, பா. 1
58. வாணிதாசன், பொங்கற் பரிசு, ப. 49, பா. 1,2,3
" பாட்டரங்கப் பாடல்கள், ப. 76, வ. 197; ப. 104, பா. 1
59. " பொங்கற் பரிசு, ப. 45, பா. 1
60. " எழில் விருத்தம், ப. 15, பா. 1
61. " தீர்த்தயாத்திரை, ப. 37
62. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 139, பா. 1
63. வாணிதாசன், எழிலோவியம், ப. 20, பா. 9
64. " தொடுவானம், ப. 11
65. " குழந்தை இலக்கியம், ப. 9
66. வாணிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப. 31, பா. 8
67. வாணிதாசன், தீர்த்தயாத்திரை, ப. 42
68. " குழந்தை இலக்கியம், ப. 10
69. " எழிலோவியம், ப. 43, பா. 7
70. " இரவு வரவில்லை, ப. 10, பா. 2
71. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 24, பா. 9
72. " குழந்தை இலக்கியம், ப. 26, பா. 3
73. வாணிதாசன், எழில் விருத்தம், ப. 36, பா. 4
74. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 167, பா. 17
75. " எழில் விருத்தம், ப. 17, பா. 7
76. " எழிலோவியம், ப. 20, பா. 10
77. " இரவு வரவில்லை, ப. 22, பா.1
78. " " ப. 24, பா. 2
79. " எழில் விருத்தம், ப. 35, பா.1
80. " தீர்த்தயாத்திரை, ப. 56
81. " எழில் விருத்தம், ப. 48, பா. 3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

82. ,, கவிதைகள், முதல் தொகுதி,
ப. 40, பா. 1
83. ,, எழிலோவியம், ப. 14, பா, 3
84. ,, ,, ப. 4, பா. 3
85. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 6
86. ,, எழிலோவியம், ப. 26, பா 5.
87. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 2
88. ,, எழிலோவியம், ப. 26, பா. 5
89. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 2
90. ,, குழந்தை இலக்கியம், ப. 13
91. ,, இரவு வரவில்லை, ப. 71, பா. 1
92. ,, பாட்டரங்கப் பாடல்கள்,
ப. 36, பா. 16

7723

93. ,, ,, பா. 34, பா. 9
94. ,, இன்ப இலக்கியம், ப. 35
95. ,, ,, ப. 38
96. ,, எழில்விருத்தம், ப. 47, பா. 1 & 2
97. ,, ,, ப. 41, பா, 8
98. ,, இரவு வரவில்லை, ப. 69, பா. 1.
,, பாட்டுப் பிறக்குமடா, ப. 29
,, பொற்கற் பரிசு, ப. 5, பா. 2
99. வாணிதாசன், எழில் விருத்தம், ப. 32-34.
100. ,, தீர்த்தயாத்திரை, ப. 7
101. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி,
ப. 48, பா.1
102. ,, ,, ,, ப. 47, பா. 2
103. வாணிதாசன், பாட்டரங்கப் பாடல்கள்,
ப. 29, & ப. 170
104. வாணிதாசன், குழந்தை இலக்கியம், ப. 19, பா. 3
105. ,, பொங்கற் பரிசு, ப. 37
106. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி,
ப. 139, பா. 2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

107. வாணிதாசன், தீர்த்த யாத்திரை, ப. 32, பா. 2
108. ,, தமிழச்சி, ப. 33, பா. 33
109. ,, கொடிமுல்லை, ப. 58, பா. 118
110. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 61. பா.4
111. வாணிதாசன், குழந்தை இலக்கியம், ப. 14
112. & 113. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 3
114. வாணிதாசன், எழில் விருத்தம், ப. 41, பா. 7
115. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 3.
116. வாணிதாசன், எழில் விருத்தம், ப. 41, பா. 6
117. பா.பி. ப. 42; இ.இ. ப. 15; பா.பா. ப. 47; எ.ஓ. ப. 22, பா. 3.
118. எ.வி. ப. 44, பா. 3; இ.வ. ப. 69, பா. 1; பா.பி. ப. 29; பொ.ப. ப. 5, பா. 2
119. பா.பா. ப. 26, பா.4; வா.க.l. ப. 139, பா 2; தொ. வா. ப.7
120. தொ.வா. ப. 5
121. வா.க.l, ப. 77, ப. 2; எ.வி. ப. 32, பா. 4
122. பா.பா. ப. 48; வ. 27, 28
123. பா.பா. ப. 108, பா. 16
124. எ.வி. ப. 44, பா. 5; இ.வ. ப. 18; பா. 4
125. வா.க.l, ப. 48, பா. 1; வா.க.l. ப. 12
126. தமிழச்சி, ப. 19, பா. 47; இ.இ. ப. 17. வ. 7-9
127. கு.இ. ப. 14.
128. கொ.மு. ப. 56, பா. 112
129. இ.இ. ப. 17, வ. 13-14; கு.இ. ப. 41; பா.பா, ப. 34, பா. 8; பா.பா.ப. 82, பா. 14 பா.பா.ப. 15 வ. 13-17, பா.பா.ப. 114
130. தொ.வா.ப. 22
131. எ.வி.ப. 20, பா 4; வா.க. 1, ப. 139, பா. 3;
132. கு.இ.ப. 48, பா. 3.
133. வா.க. l, ப. 40, பா. 1

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

134. 135, & 136. பா.பா. ப. 114, வா.க. I ப. 54, பா. 1: கு.இ. ப. 44, பா. 6
137. தொ. வா. ப. 6, வ.4; பா.பா. ப.47, வ.8; பொ.ப. ப. 38.25; இ வ. ப.17, பா. 3; எ.ஓ. ப 19, பா. 6; எ.ஓ. ப.16, ப. 10; வா.க. I, பா. 8, பா. 1; இ.இ. ப. 9; வா.க. I, ப. 73, பா. 1
138. எ.வி. ப. 40, பா. 5; வா.க. I. ப. 16, பா. 3; தமி. ப.12, பா. 30; வா.க.I. ப. 115, பா. 5
139. முன்னர் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
140. வா.க.I. ப. 63, பா. 4
141. பா.பி. ப. 2; கு.இ. ப.61, பா. 3
142. கொ.மு. ப. 51, பா. 102; வா.க.I. ப. 60, பா. 3; பா.பா. ப.8, வ. 9
143. கு.இ. ப. 68
144. எ.வி. ப. 23, பா. 1; கு.இ. ப. 53; கு.இ. ப. 55; பா.பி. ப. 13
145. வா.க.I. ப.61, பா. 5; வா.க.I. ப.64, பா.1
146. வா.க.I. ப.73, பா. 2; வா.க.I. ப.65, பா. 2
147. எ.வி. ப.45, பா. 6; ப. 40, பா. 3
148. எ.வி. ப.22, பா. 9; ப. 21, பா. 6; ப.20, பா. 4; ப. 40; ப. 19, பா.1; பா.பா. ப.81, பா.13; பா.பா. ப. 130
149. இ.பா. ப. 13
150. வா.க.I ப.134, பா. 6
151. கொ.மு. ப. 12, பா. 12
152. வா.க.I. ப. 77, பா. 4
153. பா.பா. ப. 114
154. வா.க.I. ப. 115, பா. 5; வா.க. II. ப. 16, பா.3; தமி. ப. 12, பா. 30
155. வா.க.I. ப. 10
156. பா.பா. ப. 120
157. பா.பா. ப.82, பா.15; வா.க.I. ப.10
158. வா.க.I. ப. 77, பா. 4

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

159. வா.க.l. ப.14, பா.6; பா.பா. ப.48, வ. 39.
160. எ.வி.ப. 24, பா. 4
161. வா.க.l. ப. 2;
162. வா.க. ப. 48, பா. 2; கு.இ. ப. 21, பா. 4; கு.இ. ப. 21, பா. 3; பா.பா. ப. 48, வ. 31; வா.க l. ப. 25; இ.வ. ப. 85, பா. 1; இ.இ. ப. 9, வ. 7; பா.பி. ப. 37
163. இ.இ. ப. 1, வரி. 9
164. இ.வ. ப. 54, பா 3; எ.ஓ. ப. 50, பா. 4
165. எ.வி. ப. 45. பா. 6; கு.இ. ப. 23, பா. 3
166. எ.வி. ப. 24, பா. 2
167. பா.பா. ப. 120
168. பா.பா. ப. 82, பா. 15
169. இ.வ. ப. 54, பா. 3
170. பா.பா. ப. 95, பா. 8
171. பொ.ப. ப. 51 பா. 3
172. கு.இ. ப. 72, பா. 1; பா.பா. ப. 8, வ. 56
173. பொ.ப. ப. 52, வ. 4;
174. பா. பா. ப. 99, வ. 10
175. பா. பா. ப. 23, பா. 4
176. எ.வி. ப. 41, பா. 6
177. பொ.ப. ப. 51, பா. 1
178. பா.பி. ப. 15
179. மின்னல் : பா.பி. ப. 10; பா.ப.ா ப. 22, பா.2; பொ.ப. ப. 40, பா. 1 & ப. 50, பா. 2; எ.வி. ப. 39, பா. 2; எ.ஓ. ப. 51, பா. 8 இ.இ. ப. 31, வ. 14, & ப. 28

துடி : வா.கl. ப. 60, பா. 3 & ப. 77, பா. 4

கொடி : இ.இ. ப. 15, வ. 14; எ.ஓ. ப. 60, பா. 9; இ.இ. ப. 28; எ.வி. ப. 24, பா. 5; பா.பி. ப. 10; தீ.யா. பா. 17

நூல் : இ.வ. ப. 6, பா. 4; தீ.யா. ப. 17

ஈயாரின் இல்லை எனுஞ்சொல் : எ.ஓ. ப. 61, பா. 1 பா.பா. ப. 146; பா.பி. ப. 15

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

180. பருத்திக்காய் : எ.ஓ. ப. 58, பா. 5
தாமரைமொட்டு : எ.ஓ. ப. 60, பா. 9
பந்து : எ.ஓ. ப. 61, பா. 1
மலைநுனி : எ.ஓ. ப. 62, பா. 4
வெளவால் : எ.ஓ. ப. 63, பா. 6
ஒட்டுமாங்கனி : எ.ஓ. ப. 63, பா. 8
தாமரை, அம்பு, செப்புச் சிமிழ் : இ.இ. ப. 29
தெங்கிளநீர் : பா.பா. ப. 145

181. இ.இ. ப. 31, வ. 10; எ.ஓ. ப. 60, பா. 9

182. வரால் : பா.பா. ப. 165, பா. 10; எ.ஓ. ப. 38, பா. 5
வாளை : தொ.வா. ப. 22
காந்தள் : பா.பி. ப. 19; வா.க.|. ப. 40, பா. 1

183. சங்கு : இ.வ. ப. 29, பா. 1; பொ.ப. ப. 42, வ. 11
கமுகு, மண்குடத்துவாய் : இ.இ. ப. 28.

184. எ.ஓ. ப. 16, பா. 9

185. சந்தனப் புதுப்பலகை முதலியன : இ.இ. ப. 28
நீர்ச்சுழிப்பு : தமிழச்சி, ப. 37, பா. 95

186. குளிர்தோப்பு : எ.ஓ. ப. 61, பா. 2
வாடிய சாந்து : எ.ஓ. ப. 63, பா. 6
நீரிலா ஓடை : எ.ஓ. ப. 63, பா. 8
காய்ந்த மாங்கனி : எ.ஓ. ப. 57, பா. 1
புகைபட்ட ஆடி : வா.க.|. ப. 99. வ. 14

187. தேன் : பா.பா. ப. 8, வ. 80; இ.இ. ப. 31, வ. 2.
கரும்பு : பொ.ப. ப. 31, பா. 4;
மெல்யாழ் : பா.பா. ப. 114, பா. 2
பழச்சாறு : வா.க.|. ப. 60, பா. 2
கிளிமொழி : பா.பா. ப. 53, பா. 4
குயிலின் குரல் : பா.பா. ப. 25, பா. 2
கலப்பிலாப் பால் : எ.ஓ. ப. 58, பா. 5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

188. நிழலில் தோப்பு : எ.ஒ. ப. 63, பா. 8
கரும்புச் சொத்தை : எ.ஒ. ப. 16, பா. 9
189. கோவைச் செம்பழம் : எ.வி. ப. 24, பா. 5; இ.இ. ப. 24, வ. 13
அல்லிக்காடு : பா.பி. ப. 52
தேன் : வா.க.|. ப. 62
கோவைச் செங்காய் : எ.ஒ. ப. 58, பா. 5
190. முத்து : வா.க.|. ப. 96, பா. 3; இ.வ. ப. 39, பா. 3
முல்லை : வா.க.|. ப. 46, பா. 3; பா.பி. ப, 52
புன்னை : எ.ஒ. ப. 36, பா. 10; வா.க.|. ப. 74, பா. 1; வா.க.|. ப. 41, பா. 5
முருங்கை : வா.க.|. ப. 71, பா. 1
மாதுளை : வா.க.|. ப. 60, பா. 1; கு.இ. ப. 37
நாணல்முளை : சி.நு. ப. 86, பா. 3
191. தென்னை முகிழ்பாளை : பா.பா. ப. 127
பூத்த அலரி : பா.பி. ப. 70
192. எ.ஒ. ப. 61, பா. 1
193. அம்பு : இ.இ. ப. 28; பா.பா. ப, 72, வ. 80
உளி : பா.பா. ப. 131
வாள் : இ.இ. ப. 30, வ. 19
வேல் : பொ.ப. ப. 7, பா.2; வா.க.|. ப. 52, பா. 3
மான்நோக்கு : பா.பா. ப. 7, வ. 38; பா.பா. ப. 85, பா. 2; இ.இ. ப. 35, வ. 13
கெண்டை . பா.பா. ப. 7, வ. 50; எ.ஒ. ப. 72, பா. 10; இ.இ. ப. 28
கயல் : பா.பா. ப. 89; தொ.வா. ப. 23
சேல் : சி.நு. ப. 85, பா. 1
வண்டு : பா.பி. ப. 70
நீலம் : எ.வி. ப. 41, பா. 6; பா.பா. ப. 127; வா.க. ப. 41, பா. 5
தாமரை : பா.பா. ப. 145; தீ.யா. ப. 1; பா.பி. ப. 3
மாவடு : இ.இ. ப. 26; இ.இ. ப. 29

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

194. இரும்பு : எ.ஓ. ப. 58, பா. 3; தடக்கயல் : எ.ஓ. ப. 58, பா. 5; வாள் : எ.ஓ. ப. 62, பா. 4; மழுங்கியவேல் : எ.ஓ. ப. 63, பா. 6; உதவாத வேல் : எ.ஓ. ப. 63, பா. 8; வெதும்பிய மாவடு : எ.ஓ. ப. 6, பா. ப; 9; பிரப்பங்காய் : எ.ஓ. ப. 57, பா. 1

195. வில் : எ.வி. ப. 45, பா. 6
உழுந்து : தீ. பா. ப. 51

196. பிறைநிலா : தொ.வா. ப. 28; பா.பா. ப. 145; பா.பா. ப. 114, பா. 1; பா.பி. ப. 15 & 3 எ.ஓ. ப. 61. பா. 1
கொடுவாட்கத்தி : பா.பி. ப.3
முழு நிலவு : வா.க.I, ப 60, பா. 1
படைச்சால் : எ.ஓ. ப. 57, பா. 1

197. தாமரை : பா.பி. ப. 3; தீ.யா. ப. 1; பா.பா. ப. 145
நிலா : பொ.ப. ப. 42, வ. 11; வா.க.I. ப. 53, பா. 4; வா.க.I. ப.99, வ. 13; பா.பா. ப.33, பா. 6; இ.இ. ப. 15
செல்லுண்ட நிலா : எ.ஓ. ப. 38, பா. 5
மின்னல் சேர்வெண்மதி : எ.ஓ. ப.16, பா. 9

198. கடல் அலை : இ.இ.ப. 30, வ. 14; எ.ஓ. ப. 33, பா. 1; பா.பா. ப. 114, பா.1; பா.பா. ப. 145; வா.க.I. ப. 77, பா. 4; வா.க.I. ப.41, பா. 5 எ.ஓ. ப.61, பா. 1
கார்மேகம் : பா.பா. ப.109, பா. 20
இருள் : வா.க.I. ப.3, வ. 80
கருமணல் : தீ.யா. ப. 51

199. கோடைக்கார் : எ.ஓ. ப.63, பா. 8
கருப்பம்பூ : எ.ஓ. ப. 57, பா. 1
நாணல்பூ : தமி. ப. 4, பா. 10; வா.க.I. ப.56, பா. 3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

200. கரும்பாம்பு : வா.க.I. ப. 60, பா. 1
எருமைக் கொம்பு : எ.ஓ. ப.26, பா. 3
மேதிவால் : கொ.மு. ப. 14, பா. 15
உதிக்கும் நிலவு : வா.க.I. ப. 60, பா.1

201. செந்தளிர் : வா.க.1. ப.41, பா. 6; தமி. ப.37, பா. 95 பா. பி. ப. 15
சிந்திய தூது : எ.ஓ. ப.60, பா. 9; வா.க.I. ப.41, பா. 6
வெள்ளரி : இ.வ. ப. 54, பா. 1
நொச்சிப்பூ : பொ.ப. ப, 40, பா.1
தென்றல் : பா.பி. ப. 46
பழுப்பு இலை : எ.ஓ. ப.63, பா. 6

202. சாயலும் இனிமையும் : இ.இ. ப. 28

203. இன்ப இலக்கியம், ப. 15 & 16

204. வாணிதாசன், பாட்டரங்கப் பாடல்கள், ப. 7, வ. 35

205. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப.83, பா. 1

206. ,, பாட்டுப் பிறக்குமடா! ப. 49

207. ,, பொங்கற் பரிசு, ப. 38, வ.10

208. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 131, பா. 2

209. ,, எழில் விருத்தம், ப. 25, பா. 8

210. ,, கொடி முல்லை, ப. 16, பா. 22

211. ,, தமிழச்சி, ப. 40, பா. 100

212. ,, பாட்டுப் பிறக்குமடா! ப. 3

213. ,, ,, பதிப்புரை ப. viii

214. ,, குழந்தை இலக்கியம். ப. 80. பா. 8

215. வாணிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப. 39, பா. 6

216. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 53, பா. 6

217. ,, தீர்த்தயாத்திரை, ப. 16

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

218. வாணிதாசன், எழிலோவியம், ப. 32, பா. 9
219. " கவிதைகள், முதல் தொகுதி ப.3, வ. 84
220. " " ப. 3, வ. 69
221. " " ப. 3, வ. 61
222. " " ப. 3, வ. 60
223. " இனிக்கும் பாட்டு, ப. 17
224. " " ப. 15
225. " இனிக்கும் பாட்டு, ப. 15
226. " கவிதைகள், முதல் தொகுதி, ப. 94, பா. 6
227. " குழந்தை இலக்கியம்; ப. 41
228. " பொங்கற் பரிசு. ப. 47, பா. 2
229. " இரவு வரவில்லை, ப. 17, பா. 3
230. " கவிதைகள், முதல் தொகுதி, ப. 44 பா. 6
231. " எழிலோவியம், ப. 23, பா. 8
232. " கவிதைகள், முதல் தொகுதி, ப. 77 பா. 4
233. " எழிலோவியம், ப. 30, பா. 5
234. " எழில் விருத்தம், ப. 19, பா. 1
235. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 95, பா. 9
236. " குழந்தை இலக்கியம், ப. 21, பா. 2
237. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 7, வ. 29
238. " கவிதைகள், முதல் தொகுதி, ப. 96 ப. 2
239. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 27, பா. 10
240. " எழிலோவியம், ப. 30, பா. 5
241. " கொடி முல்லை, ப. 16, பா. 21
242. " இன்ப இலக்கியம், பா. 15, வா. 6
243. " சிரித்த நுணா, ப, 24, பா. 6
244. " கவிதைகள், முதல் தொகுதி, ப.3, வ.64
245. " இனிக்கும் பாட்டு, ப. 9

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

246. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 20
247. " " ப. 89, பா. 1
248. " " ப. 15
249. " " ப. 14
250. " இன்ப இலக்கியம், ப. 25, வ. 4-5
251. " " ப. 24, வ. 9
252. " எழில் விருத்தம், ப. 3, பா. 7
253. " கவிதைகள், முதல் தொகுதி, ப. 85, பா. 2
254. " " ப. 85, பா. 3
255. " " ப. 58, பா. 3
256. " தமிழச்சி, ப. 35, பா. 90
257. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 130
258. " கவிதைகள், முதல் தொகுதி, ப. 45 பா. 1
259. வாணிதாசன், தீர்த்தயாத்திரை, ப. 42.
260. " எழில் கிருத்தம், ப. 43
261. " இன்ப இலக்கியம், ப. 24, வ. 20
262. " தீர்த்தயாத்திரை, ப. 43
263. " கொடி முல்லை, ப. 23, பா. 37.
264. " குழந்தை இலக்கியம், ப. 124, பா. 2
265. " தீர்த்தயாத்திரை, ப. 48
266. " பொங்கற் பரிசு, ப. 19, பா. 5
267. " எழிலோவியம், ப. 15, பா. 8
268. " " ப. 26, பா. 4
269. " இரவு வரவில்லை, ப. 13, பா. 1
270. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 85, பா. 3
271. " " ப. 103, வ. 138
" கொடி முல்லை, ப. 47, பா. 92
" தொடுவானம், ப. 31

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

272. " சிரித்தநுணா, ப. 40, பா. 3
" பாட்டரங்கப் பாடல்கள், ப. 99, வ. 21
273. " இன்ப இலக்கியம், ப. 13, வ. 13
274. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 146
275. " குழந்தை இலக்கியம், ப. 47, பா. 6
276. " கொடி முல்லை, ப 8, பா. 5
277. " தீர்த்த யாத்திரை, ப. 58
278. " கவிதைகள் இரண்டாம் தொகுதி,
ப, 26, பா. 2
279. " சிரித்தநுணா, ப. 82, பா. 3
280. " இரவு வரவில்லை, ப. 45, பா.2
281. " " ப. 64, பா. 3
282. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 14,
பா. 10
283. " இரவு வரவில்லை. ப. 61, பா. 1
" " ப. 63, பா. 1
284. " தீர்த்தயாத்திரை, ப. 10
285. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 35, பா. 13
286. " " ப. 36, பா. 17
287. " எழிலோவியம், ப. 70, பா. 4
288. " குழந்தை இலக்கியம், ப. 74, பா. 3
289. " " ப. 85, பா. 9
290. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 64, வ. 60
291. " " ப. 65, வ. 66
292. " " ப. 65, வ. 81
293. " குழந்தை இலக்கியம், ப. 74, பா. 1
294. " கவிதைகள், முதல் தொகுதி, ப.54, பா. 1
295. " தீர்த்தயாத்திரை, ப. 39. & 47
296. " கொடி முல்லை, ப. 13, பா. 14
297. " இரவு வரவில்லை, ப. 51, பா. 1
298. " கொடி முல்லை, ப. 33, பா, 62
299. " தீர்த்தயாத்திரை, ப. 5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

300. வாணிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப. 67, வ. 20
301. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 133.
302. " எழில் விருத்தம், ப. 38, பா. 9
303. வாணிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப.70. பா. 4
304. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 119
305. வாணிதாசன், இன்ப இலக்கியம், ப. 35, வ. 17
" பாட்டரங்கப் பாடல்கள், ப. 146
306. " இரவு வரவில்லை, ப. 12, பா. 3
307. " கொடிமுல்லை, ப. 11 பா. 10
308. " பாட்டுப்பிறக்குமடா!, ப. 13
309. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 115, பா. 4
310. " தீர்த்தயாத்திரை, ப. 40
311. " " ப. 26
312. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 104, பா. 1
313. " " இரண்டாம் தொகுதி, ப.4, பா.6.
314. " இன்ப இலக்கியம், ப. 36, வ. 9
315. " தீர்த்தயாத்திரை, ப. 9
316. " கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப,5, பா. 3
317. " இன்ப இலக்கியம், ப. 36, வ. 17
318. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 146
319. " குழந்தை இலக்கியம், ப. 47
320. " " ப. 87
321. " எழிலோவியம், ப. 39, பா. 7
322. " பாட்டுப் பிறக்குமடா, ப. 72
323. " " ப. 74
324. " இரவு வரவில்லை, ப. 88, பா. 2
325. " இரா. 'பெருமாள் கவிஞர்' நெஞ்சம் - 1 தமிழ்மலர் (மலேசிய இதழ்) 10-3-68.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and
with the Compliments of the
Dept: of Education Govt: of India,
New Delhi;

3. உருவகங்கள்

உருவகமே தலையாயது!

உவமையோடு பொருள் ஒன்றிவிடுவது உருவக மாகும். 'ஒரு பொருளின் அழகினைக்கண்டு, மற்றொரு பொருளின் அழகை நினைந்து இதனை அதனோடு ஒப்பிடுதல் உவமை. அதே மனநிலை மேலும் சிறிது வளர்ந்து, இரண்டு பொருளையும் வேறு வேறாகக் காணாமல், ஒன்றிலேயே மற்றொன்றைக் கண்டால் அது உருவகம் எனப்படும்'.[1]

"உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து
ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்."[2]

என்னும் தண்டியாசிரியர் விளக்கமும் அதுவேயாகும் 'உவமையில் இரு பொருளுக்கும் இடையில் பாலம் அமைத்தார்கள். ஆனால், உருவகத்திலோ இரண்டை யும் பின்னிப் பிணைக்கிறார்கள்' என்பர்.[3] உவமையை விட உருவகம் ஆழமானது; சிக்கலானது; அதன் காரண மாகவே கவிதையின் தலையாய அம்சமாகக் கருதப் படுவதுமாகும்.[4] உவமையை ஒட்டி உண்டான முதற் சிதைவாகவும்,[5] உவமையின் சுருக்க வடிவாகவும்[6] உருவகத்தைக் கொள்வர். மொத்தத்தில், பிறிதொரு பொருளோடுள்ள ஒப்புமையின் ஆழமும் நெருக்கமும் காரணமாக, அப்பொருளாகவே குறிக்கப்படும் நிலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யில் உருவகம் உருவாகின்றது எனலாம்.[7] இத்துணை சிக்கலான சிறப்புமிக்க உருவகத்தைத் தம் கவிதைகளில் திறம்பட அமைத்துப் பாடியுள்ளார் வாணிதாசன். 'பிற கவிஞரெல்லாம் மிகுதியும் பேசாத பகுதி எனும் உருவகத்தையே சிறப்பாக அமைத்துப் பாடுபவராக' வாணிதாசன் கருதப்படுகிறார்.[8] அவரது கவிதைகளில் காணப்படும் உருவகங்களை,

1. தனிநிலை உருவகம்
2. இணைநிலை உருவகம்
3. ஒருதலை உருவகம்
4. அடுக்குநிலை உருவகம்
5. முழுநிலை உருவகம்
6. ஏனைய உருவகங்கள்

என வகைப்படுத்தி ஆயலாம்.

தனிநிலை உருவகம்

பொருள் ஒன்றுக்கு உருவகமும் ஒன்றையே அமைத்தல் தனிநிலை உருவகமாகும். இதனை 'ஒரே ஒரு பொருளுக்கு ஓரே ஓர் உருவகம் அமைத்தல்' என்பர்.[9] வாணிதாசன் இவ்வகை உருவகங்களை அவரது கவிதைகளில் பரவலாகக் கையாண்டுள்ளார்.

கவித்தேன்,[10] கொடும் பழக்க வெள்ள ஆற்றை,[11] கீழ்வானக்காடு,[12] கவிச்சிறகால்,[13] முழுநிலவாம் மெய்யெழுத்துப்புள்ளி,[14] வண்டுவழி,[15] வைக்கோற் குன்றம்,[16] அடிமையெனும் குட்டநோயினுக்கு,[17] ஆரியப் புல்லுருவி,[18] பாசிப் போர்வை[19] வேய்ந்தகீற்றோ வெறுங் கந்தல்,[20] துள்ளிடும் மீன்கள்...வெள்ளித் தூறல்,[21] விண்மீன்...வான் ஏங்கி வெதும்பிய கொப்புளமோ?,[22]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைக்காடு[23] முதலிய பல தனிநிலை உருவகங்கள் அவரது கவிதைகளில் காணப்படுகின்றன.

இணைநிலை உருவகம்

இரு பொருள்களுக்குத் தொடர்புடைய இரு உருவகங்களை இணைத்து அமைத்தலை இணைநிலை உருவகம் எனலாம். வாணிதாசன் இத்தகைய இணை நிலை உருவகங்களையும் அருகிய நிலையில் கையாண் டுள்ளார். சாத்திர சம்பிரதாயக் கட்டுகளை உதறித் தள்ளிவிட்டு உயர்சாதிக் குப்பன், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த கறுப்பியைக் கைப்பிடிக்கத் துணிகிறான். அச் செயலால் குன்றென உயர்ந்து நிற்கிறான் குப்பன். சாத்திரம் பேசும் சழக்கர் தம் சூழ்ச்சியோ அக் குன்றில் அடிபடும் பானையாக நொறுங்கிப் போகிறது.

> "குட்டை மனத்தவர் சூழ்ச்சியெல்லாம்—குப்பன்
> குன்றில் அடிபடும் பானையாச்சே!"[24]

என்னும்போது குப்பனைக் குன்றாகவும் குட்டை மனத்தவர் சூழ்ச்சிகளை அதில் அடிபட்டு நொறுங்கும் பானையாகவும் இரு நிலைகளில் உருவகித்துள்ள பாங்கினைக் காணலாம். அதேபோல், தொடுவானத்தை மதிலாகவும். அதற்கப்பால் தோன்றும் அழகைக் காண்பதற்காக அம் மதிலின் நடுவினில் துளைத்த சந்தாகக் காலைக் கதிரவனையும் உருவகிக்குமிடத் திலும்[25] இணைநிலை உருவகத்தின் இயல்பு வெளிப் படுவதைக் காணலாம். மேலும், 'தாமரைப் பசுந்தட்டின் மேல் உருள்கின்ற தண்ணீர் முத்தை' என்றும்,[26] 'சிட்டுச் சிறுவரின் செங்கைக் கரும்புகள் தொட்டுப் பிசைந்தன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொங்கல்' என்றும்,[27] 'ஆழ்ந்த மனக் குரங்கு அறிவுக் கோலெடுத்தால் ஆடுமடா!' என்றும்[28] வாணிதாசனால் அவ் இணைநிலை உருவகங்கள் பரவலாகக் கையாளப் பட்டுள்ளன. அதனை நிரல்நிறையாக அமைத்துப் பாடியுள்ள இடங்களும் அவரது கவிதைகளில் உள்ளன. சங்கத்தைச் சோலையாகவும் தமிழைத் தேனாகவும் உருவகித்து, 'சங்கத் தமிழ்ச் சோலைத் தேனை'[29] என நிரல்நிறையாகப் பாடுகிறார். மேலும்,

> ''தோளில் பிரிந்து புரளும் நறுங்கூந்தல்
> உச்சிமலையில் உறையும் முகிற்குலம்!'[30]

என்னும்போது உச்சி மலையாகிய தோளில் புரளும் முகிலாகிய கூந்தல் என நிரல்நிறையாக அவ் இணை உருவகம் அமைந்திருந்தலைக் காணலாம்.

ஒருதலை உருவகம்

பொருளைக் கூறாமல் விடுத்து உருவகத்தையே பொருளாகக் கூறுவது ஒருதலை உருவகமாகும். இவ் வகை உருவகங்களில் 'உருவகமே பொருளாக இருந்து செயல்படுகின்றது' என்பர்.[31]

''நொந்த இடையைச் சாய்ந்து தந்தங்கள் பார்க்க''[32] என்னும்போது 'தனங்கள்' என்று பொருளை கூறாமல், 'தந்தங்கள்' என உருவகமே பொருளாகக் கூறப்பட்டுள்ளமை காணலாம். 'சன்னல் வழிபார்க்கும் மின்னலைக் கண்டார்கள்'[33] என்னும் போதும் 'பெண்'ணுக்குப் பதில் 'மின்னல்' கூறப்படுகிறது. மேலும், 'படித்துறை எங்கும் வட்டமதிக் கூட்டம்'[34] என்று பெண்டிரின் முகங்களையும், 'தொடுவானில் செவ் வண்ணத் தொட்டி உருண்டிடும்'[35] என்று சூரியனையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இருண்ட மேகத்திடை புகுந்து உருண்டு செல்லும் வெள்ளித் தட்டு'[36] என்று நிலாவையும், 'நீல வான நெடு வயலில் தெளித்திட்ட தூள்பிண்ணாக்கோ'[37] என்று விண்மீன்களையும் 'புன்னை அடர்கிளை பொன்னைச் சிந்தும்'[38] என்று பொன் போன்ற புன்னை மலர்களையும் ஒருதலை உருவகங்களாக அமைத்துக் கவிஞர் பாடியுள்ள பாங்கினைக் காணலாம்.

தனிநிலையாக இவ் ஒருதலை உருவகத்தை அமைத்துப்பாடியுள்ள இடங்களும் வாணிதாசன் கவிதை களில் உள்ளன.

"காயும் முழுமதி அவள் முகத்தே—படர்
கார்முகில் கண்டான்; துடிதுடித்தான்!"[39]

என்பதில் முழுமதியாகிய முகம் என்று தனி நிலையும், அதில் படர்கின்ற வருத்தத்தைக் 'கார்முகில்' என்னும் ஒருதலை உருவகத்தால் பெறவைக்கிறார். 'வான் வெளிப் பொய்கையிற்...எழும் கூம்பிடாப் பொன்மலர்'[40] என்பதில் வானமாகிய பொய்கையில் என உருவகித்து, அதில் எழும் சூரியனைக் 'கூம்பிடாப் பொன்மலர்' எனக் குறிப்பிடுகிறார். இவற்றைத் தனி நிலையாக வந்த ஒருதலை உருவகங்களாகக் கொள்ளலாம்.

அடுக்குநிலை உருவகம்

அடுக்காகப் பல உருவகங்களை ஒரு பொருளுக்கு அமைத்துப்பாடுதல் அடுக்குநிலை உருவகமாகும். அவை ஒரே அடியில் அடுக்காகவும் வரலாம்; ஒரே பாடலில் அடுத்தடுத்தும் வரலாம்; ஒரு தலைப்பின் கீழ் உள்ள பல பாடல்களில் தொடர்ச்சியாகவும் இடைவெளியிட்டும் அமையலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'...என தாசான் கவியரசர் தென்றற் பொதிகை மலை; தீந்தமிழ்ப் பாற்கடலாம்' என்றும்,[41] 'அருந் தமிழை நம்முயிரை நம்விழியை வாழ்வை' என்றும்[42] ஒரே அடியில் ஈரடுக்காகவும் மூவடுக்காகவும் உருவகங் கள் அமைந்து சிறப்பதைக் காணலாம்.

"வானிடை ஒளிப்பி ழம்பின்
வட்டமோ? வெள்ளித் தட்டோ?
பானைமோர் மிதக்கும் வெண்ணெய்ப்
பற்றலோ? சிறுவர் பந்தோ?
மானமே உயிராய் வாழ்ந்த
வீரர்கைப் பரிசை தானோ?
தேனடை நிலவே!......"[43]

என்று ஒரே பாடலில் அடுக்காகப் பல உருவகங்கள் அமைந்து நிலவுக்கு நயமூட்டுகின்றன.

ஒரே தலைப்பின் கீழ் அமைந்த பல பாடல்களில் தமிழை விழியாகவும் உயிராகவும் பயிராகவும் வானப் பரிதியாகவும் இசைதரு இன்பச் சுருதியாகவும் அமிழ் தாகவும் நறுங்காற்றாகவும் சோலையாகவும் உருவகம் செய்துள்ளார்.[44] மழலைச் செல்வத்தை சீர்மேவும் கீழ்வானில் சீய்த்தெழுந்த செஞ்சுடர், கார்மேவும் குன்றும் தவழ்ந்துவரும் மென்காற்று, உச்சிமலைத்தேன், உயர் சாரல் நீரருவி, பச்சைமலைப் பாறை பயிலும் புலிக்குட்டி சாரல் மலைதவழும் சந்தனம், கார் அகில், வேரில் பழுத்த பலா, விடிவான், கொம்பு முளைக்காத கொல்லேறு, சிறுகிளி, தீங்கரும்பு, கருப்பஞ்சாறு, செழுவாழை, மாங்கனி, ஓங்கிவளர் தென்னை உச்சி இளநீர், கார் நிறைந்த ஊருணி, கண்கவரும் தாமரை, செம்பொன் சிறுசிலை, ஓவியம், மாமணி, செந்தமிழ், கண்மணி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீட்டா ஒளிக்கல், நற்றமிழ், காராடும் வான்கவின், கலித்தொகை, தேன்பாகு, கண் என அடுக்கு நிலையில் உருவகப்படுத்திக் காட்டுகிறார்.[45]

எழுதுகோலுக்குப் பகையைச் சாய்க்கும் கூர்வாள், பலரை ஈர்க்கும் காந்தம், நகையை மூட்டும் குழந்தை, நலிவைப் போக்கும் தென்றல், கவலை போக்கும் மருந்து, அறிவைச் சொல்லும் தந்தை, அன்பைக் காட்டும் தாய், வெறியை ஊட்டும் காதல், வீரம் ஊட்டும் தாறு, விளக்கிக் காட்டும் கணக்கன், மேன்மை சொல்லும் தோழன், தளர்வின்று ஊக்கும் சங்ககாலப் பாட்டு எனப் பல உருவகங்களை அமைத்துப் பாடுகிறார்.[46]

காதலியை நகைத்த முல்லை, நன்னீர்க்கேணி, நளிர்புனல் ஓடை, நன்னெறி வெண்பா, குறுந்தொகைப் பாடல், குளிர்பூந்தென்றல், குட்டைப் புதுமலர், பாலைப் பாடல், ஆவிரைப் புதுமலர், பாரதிதாசன் குடும்ப விளக்கு, படரும் முழுநிலா, பசுந்தாழம்பூ, நெய்தற்கலி எனப் பலவாறாக உருவகிக்கிறார்.[47]

காதலனைக் கொல்புலி, தேனூற்றிக் கிண்டியெடுத்த அமுது, கீழ்க்கடலிற் கண்டெடுத்த முத்து, கற்கண்டு, ஒளிமணி, கட்டிக் கரும்பு, உயிர், உடல், ஒளிசெய்யும் பரிதி, பூங்காற்று, மாமழை, பசுங்குன்று எனக் காதலி மூலமாக உருவகம் செய்து காட்டுகிறார்.[48]

தலைவியைப் பற்றித் தோழி கூறுவதாகப் பனிபடர்ந்த குன்றம் முதலாக கூர்முதிர்ந்த வேல்விழியாள் ஈறாக இருபத்திரண்டு உருவகங்களை அடுக்காகக் கூறுகிறார்.[49]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதிதாசனைக் குறிஞ்சி வேர்ப்பலா, தமிழ்த் தும்பி, மெல்லிசையாழ், தொடுவான் எழுந்த விடிமீன், கமழ்பூங்காற்று, விடியல் பூங்குயில், சங்க இலக்கியம். வள்ளல், பகைக்கு எறியீட்டி, அழகின் சிரிப்பு, செந்தமிழ் உழவர், அறம்பயில்கூடம், மாமழை, வான்கதிர் ஒளி, கவிப்புலி, இனமலர்த் தென்றல், பைங்குயில், அலைகடல் தோன்றிய பரிதி, எழுதா ஓவியம், கீழ்த்திசை வானம், வெற்றி முரசு, வீரர்வாய்ச் சங்கம், அணிநிறை காவியம், கவித்தந்தை என உருவகப்படுத்துகிறார்.[50]

அண்ணாவுக்கு மாற்றுமருந்து முதலாக மலரோடை ஈறாக பதினைந்து உருவகங்கள் அடுக்காக அமைத்துப் பாடுகிறார்.[51]

இங்ஙனம் அடுக்குநிலை உருவகங்கள் அவரது கவிதைகளில் காணப்படுவது பெருகிய வழக்காகத் தோன்றுகிறது.

முழுநிலை உருவகம்

தனிநிலைக் காட்சிகளைவிடத் தொகுநிலைக் காட்சிகள் ஒரு முழுமையான சொல்லோவியமாகக் காட்சி அளிக்கிறது. இவற்றை முழுமையாகக் காட்டுவதில் கவிஞன் வெற்றி காண வேண்டும் என்னும் விழைவு அதனுடன் கலந்து இயைகிறது.[52] கவிஞனின் அவ் விழைவே முழுநிலை உருவகமாக வெளிப்படுகிறது எனலாம்.

ஆற்றைப் பெண்ணாக உருவகப்படுத்துகிறார் கவிஞர். தாமரை முகமாகவும், தடங்கயல் விழியாகவும், வரால்மீன் கையாகவும், அல்லிமலர் செவ்விதழாகவும், வாழை கால்களாகவும், சங்கினம் கைவளைகளாகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞரால் காட்டப்படுகின்றன.[53] ஒரு முழுமைக் காட்சியாக இஃது அமைவதால் முழுநிலை உருவகமாக நாம் இதனைக் கொள்ளலாம்.

இயற்கை அன்னை கூத்தாடுங் காட்சியும் முழுநிலை உருவகமாகத் தீட்டப்படுகிறது. பொன்னிறக் கதிர்களால் மின்னும் பொருள்களைச் சிறு நகையாகவும், விதவித மலர்களைக் குளிர் முகமாகவும், மலைதவழ் கருமுகிலைக் கூந்தலாகவும், குயிலின் குரலை இசையாகவும், வானின் இடியைக் கொடுநகையாகவும், உயிரைப் பறிக்கும் மின்னலைக் கூர்விழிப் பார்வையாகவும் சூறாவளிச் சுழற்சியை இடையசைவாகவும் கொண்டு இயற்கை அன்னை கூத்தாடுவதாகக் காட்டப்படுகிறது.[54]

இரவின் அரசாட்சி நாட்டின் அரசாக முழுமை நிலையில் உருவகப்படுத்தப்படுகிறது. கோட்டான்கள் படையாகவும், குளிர்காற்றுக் கொடியாகவும், குன்றங்கள் நிலப்பரப்பாகவும், காட்டாறு மும்முரசாகவும், கருவான உடுக்கள் கருவூலப் பொன்னாகவும், முளைத்து வரும் நிலவு கூர்வாளாகவும், விடிவெள்ளி முடிமணியாகவும், முல்லைமலர் செங்கோலாகவும், செவ்வல்லி கொற்றக் குடையாகவும் காட்டப்படுகின்றன.[55]

வருணனையாகக் காட்டுவதற்கு மட்டுமின்றி அறநிலை அடிப்படையிலும் இம் முழுநிலை உருவகம் பயன்படுத்தப்படுகிறது. அங்ஙனம் அமைந்த பாடல் வருமாறு:

“......... மரமண்டை மக்கள்
வளர்வதற்கும் வாழ்வதற்கும் கரம்பேறிப் போன
உள்ளத்தில் முளைத்திருந்த அறியாமைக் காட்டை
உழுபடையாம் திருக்குறளால் உழுதுழுது வித்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெள்ளுதமிழ் நீர்பாய்ச்சி அறிவாக்கம் தந்த
செஞ்சொல்லோர் உழவனெனில் யார் மறுக்கக் கூடும்!''[56]

இப்பாடலில் அமைந்துள்ள உருவகங்கள் வருமாறு:—

மக்கள் உள்ளம்—கரம்பு நிலம்
அறியாமை—காடு
திருக்குறள்—உழுபடை
தெள்ளுதமிழ்—நீர்
அறிவு—ஆக்கம்

திருவள்ளுவர்—உழவர்

இங்ஙனம் முழுமை நிலையில் இவ்வுருவகங்கள் அமைந்து சிறக்கின்றன எனலாம்.

ஏனைய உருவகங்கள்

வாணிதாசன் கவிதைகளில் காணப்படும் ஏனைய பல உருவகங்களில் சிறப்பாகக் குறிக்கத் தகுந்தவை சில உள. அவை வருமாறு:

அன்பு மனைவியை தாமரை, சிறுகுயில், வான்நிலவு, வண்ணமயில், அகம் புறம், ஆவி, தீந்தமிழ் என்றும்,[57] நெய்யமுது[58] என்றும் உருவகம் செய்கிறார் கவிஞர்.

குழந்தையைக் கவிதையின் உட்பொருள், செப்புச் சிறுசிலை, இளங்கரும்பு என்றும்,[59] தங்கச் சிலை, கொத்தும்கிளி, குத்துவிளக்கு, புதுமணப் பூ என்றும்,[60] ஓடைப் புதுமலர்த் தாமரை, ஓவியன் தீட்டாத சித்திரம், கோடைக் குளிர்தென்றல், கொத்துமலர் முல்லை, கொஞ்சும் கிளிப்பிள்ளை என்றும்[61] உருவகிக்கிறார். 'குளிர் கடலின்மேல் எழுந்த கட்டிப் பசும்பொன்'னாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வும்[62] குழந்தை உருவகிக்கப்படுகிறது. ஈண்டு, கட்டிப் பசும்பொன் முதலில் கடல்மேல் எழுந்த சூரியனுக்கு உருவகமாகி, பின்னர் பாடப்படும் குழந்தைக்கு உருவக மாகி நிற்கிற உருவக நயம் எண்ணத் தக்கது.

தமிழ் பல உருவகங்களால் சிறப்புச் செய்யப்பெறு கிறது. அடிமை மலை பிளக்கும் உளி, கைவேல், வயிரத் தின் வாள், முரசம் என வீர உணர்வின் வெளிப்பாட் டிலும்[63] செந்தேன், தீந்தேன், அமுது, மது என இனிமைத் தன்மையிலும்[64] மடமை இருள் கிழிக்கும் மதி, நிலவு, பரிதி என ஒளி நிலையிலும்[65] தமிழ் உருவகிக்கப் படுகிறது.

தங்கம், பொன், தாமரைமலர் ஆகியவற்றின் அடிப்படையில் சூரியனை உருவகிப்பது பெருகிய வழக்காக உள்ளது.[66] அதன் கதிர் ஒளி வீச்சு பொன்மழை யாக உருவகிக்கப்படுகிறது [67]

பிறைநிலாவைப் பொன்னரிவாளாகவும்[68] அரிவை யின் நெற்றி, கரியானைக்கோடு, வீரனின் உடைவாள் ஆகியவையாயும்[69] உருவகம் செய்கிறார். விண்மீன்களை வயிரக்கற்களாகவும்[70] வயிரமணிக் குப்பையாகவும்[71] உருவகிக்கிறார்.

இருளைப் பாடாக் குயிலாகவும்.[72] சூரியனை வண்டுதாத் தாமரைப் பூவாகவும்[73] உருவகிப்பது புதிய போக்காகத் தோன்றுகிறது. கடலின்மேல் எட்டடி உயர்ந்து சீறி எழுகின்ற அலைகளைக் கட்டினை வெருண்டறுத்த வெண்மயிர்க் காளைக் கூட்டமாகவும்,[74] கடலோரத்துப் படகுகளைப் படுத்திருக்கும் யானை களாகவும்.[75] உருவகப்படுத்தும் போதும் அப் புதிய போக்குத் தலைகாட்டக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழி, இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் காதலியை உருவகம் செய்து காட்டும் போக்கும் பரவலாகக் காணப்படுகிறது.[76]

பெரியாரைக் கூர்வாள் இளைஞர் பயிலும் கூடமாக வும், குருட்டுக் குன்றைத் தகர்க்கும் வேட்டாகவும், போர்முரசார்க்கும் வெற்றிப் பாதையாகவும், புதுப்புதுப் படைக்கலம் சமைக்கும் கொட்டிலாகவும் உருவகப் படுத்துகிறார்.[77] களங்கண்ட மறப்புலியாகவும், குளிர் பூங்காற்றாகவும் நன்முத்தாகவும், புறப்பாட்டாகவும் கலைஞர் கருணாநிதி உருவகப் படுத்தப்படுகிறார்.[78]

இங்ஙனம் வாணிதாசன் கவிதைகளில் பல்வேறு உருவகங்கள் பல்வேறு நிலைகளில் பாங்குடன் கையாளப் பட்டுள்ளன. அவை, வாணிதாசனின் இலக்கியத்திறனை அறிந்துகொள்ளப் பெரிதும் துணை செய்கின்றன.

குறிப்புகள் :

1. டாக்டர் மு. வரதராசன், இலக்கியத்திறன், ப. 229
2. தண்டியலங்காரம், பொருளணியியல், நூற்பா, 36
3. பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், கவிதையும் வாழ்க்கையும், (சென்னை, 1981), ப. 135.
4. டாக்டர் க. கைலாசபதி, கவிஞர் இ. முருகையன், கவிதைநயம், ப. 21
5. பேராசிரியர் அ.மு.ப., கவிதையும் வாழ்க்கையும், ப. 135
6. "Metaphor is nothing but Compressed simile" M.R. Ridley, Poetry and the ordinary Reader. (London, 1930), P. 64
7. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், ப. 287

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. இராம. இராமநாதன், 'தற்காலத் தமிழ்க் கவிஞர்கள்', தென்றல், (6-6-59), ப. 5
9. டாக்டர் ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், ப. 83
10. வாணிதாசன் பாட்டரங்கப் பாடல்கள் ப. 15, வரி 20
11. வாணிதாசன் கவிதைகள், முதல்தொகுதி, ப. 104, பா. 2
12. ,, எழில்விருத்தம், ப. 17, பா. 6
13. ,, இரவு வரவில்லை, ப. 46, பா. 4
14. ,, ,, ப. 10, பா. 2
15. ,, பாட்டுப் பிறக்குமடா, ப. 47
16. ,, பொங்கற் பரிசு, ப. 12, பா. 3
17. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 137, பா.6
18. ,, தொடுவானம், ப. 9, வ. 8
19. ,, பொங்கற்பரிசு, ப. 12, பா. 3
,, எழிலோவியம், ப. 15, பா. 6
20. ,, குழந்தை இலக்கியம், ப. 38, பா. 2
21. ,, சிரித்த நுணா, ப. 29, பா. 2
22. ,, பாட்டுப் பிறக்குமடா, ப. 8
23. ,, கொடி முல்லை, ப. 44, பா. 87
24. ,, கவிதைகள் முதல் தொகுதி, ப. 67, பா. 7
25. ,, எழிலோவியம், ப. 13, பா. 2
26. ,, ,, ப. 19 பா. 7
27. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 27
28. ,, இரவு வரவில்லை, ப. 51, பா. 2
29. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 170
30. ,, இன்ப இலக்கியம், ப. 16, வ. 5
31. டாக்டர் ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமை, ப. 88
32. வாணிதாசன், பாட்டுப் பிறக்குமடா!, ப. 19
33. ,, இன்ப இலக்கியம், ப. 27, வ. 11
34. ,, தமிழச்சி, ப. 32, பா. 81

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

35. ,, தொடுவானம், ப. 6
36. ,, ,,
37. ,, ,,
38. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 92, பா. 2
39. ,, கவிதைகள் முதல் தொகுதி, ப. 66, பா. 5
40. ,, பொங்கற் பரிசு, ப. 22 பா. 1
41. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 171
42. ,, ,, ப. 27, பா. 10
43. ,, எழிலோவியம், ப. 43, பா. 7
44. ,, 'தமிழ்' குழந்தை இலக்கியம், ப. 131, பா. 1-3
45. ,, 'பாரிக்குத் தாலாட்டு', இரவு வரவில்லை, ப. 79-81
46. வாணிதாசன், குழந்தை இலக்கியம், ப. 35&36
47. ,, இரவு வரவில்லை, ப. 30, பா. 1-5
48. ,, இன்ப இலக்கியம், ப. 23
49. ,, ,, ப. 33, 34
50. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 88-90
51. ,, சிரித்த நுணா, ப. 44, 45
52. டாக்டர் ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமைகள், ப. 86
53. வாணிதாசன், 'ஆறு', எழில்விருத்தம், ப. 33, பா. 9
54. ,, 'ஆடுங்கூத்து', பாட்டுப் பிறக்குமடா, ப. 39
55. ,, 'இரவு', எழில் விருத்தம், ப. 16, பா. 10
56. வாணிதாசன், பாட்டரங்கப் பாடல்கள், ப. 110, பா. 21
57. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 6, 8, 9, 54, 55, 56
58. ,, இரவு வரவில்லை, ப. 4, பா. 4
59. ,, சிரித்த நுணா, ப. 24—26
60. ,, குழந்தை இலக்கியம், ப. 1, 2
61. ,, பாட்டுப் பிறக்குமடா, ப. 47
62. ,, சிரித்த நுணா, ப. 24

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

63. உளி: வா.க.I., ப. 128
கைவேல், வயிரவாள் : பா.பா. ப. 57
வாள் : சி.நு. ப. 86; முரசம்; சி.நு. ப. 56
64. செந்தேன் : பா.பா. ப. 38; ப. 57
தீந்தேன் : பா.பா. ப. 70
அமுது, மது: பா.பா. ப. 57
65. மதி : வா.க.I, ப. 128
நிலவு : பா.பா. ப. 57
பரிதி : பா.பி. ப. 42
66. தங்கக்கட்டி : பொ.ப. ப. 12; பா.1
தங்கத்தட்டு : பொ.ப. ப.3; பா. 1
தங்கத் தாம்பாளம் : பொ.ப. ப. 43
தங்கத் தாமரை : இ.வ. ப. 73; பா. 2
செம்பொன்னாற் செய்த பெருங்குண்டு : இ.வ. ப. 10; பா. 1
பொன்மலர், பொற்றாமரை மலர் : பொ.ப. ப 36, பா. & ப. 52, வ. 1
67. பொன்மழை : தொ.வா. ப. 6, வ. 10; வா.க.I, ப. 7
68. தொ.வா. ப.11; வ. 1
69. எ.ஓ. ப. 41; பா. 2
70. வா;க.I, ப. 139, பா. 1
71. இ.வ. ப. 4, பா. 4
72. பொ. ப. ப. 53, பா. 1
73. பொ. ப. ப. 5, பா. 1
74. சி.நு. ப. 29; பா.1
75. சி.நு. ப. 29; பா. 3
76. தீந்தமிழ் : வா.கI. ப. 101; வரி 60
செந்தமிழ், நறுந்தொகை, கலித்தொகை : வா.க.I, ப. 40
இசைப்பாடல், சுவைக்காவியம், கலித்தொகை, தமிழ்ப் புறப்பாடல், முத்தமிழ், சங்கத்தமிழ் : இ.வ. ப. 35, பா. 1-5
இசைத்தமிழ், தீந்தமிழ், கடைச்சங்கத் தீந்தமிழ்ப் பாட்டு : இ.வ. ப. 29; பா. 1-4
77. சி.நு. ப. 43; பா. 6
78. இ.வ. ப. 87

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. சொல்லாட்சி

சொற்களே கவிதைக்கு உயிர்நாடி

'சொற்களே, கவிஞன் கையாளும் செங்கற்களாம். அவற்றைக் கொண்டுதான் அவன் கவிதை என்கிற மாளிகையைக் கட்டுகிறான். ஏனைய எழுத்தாளர் களைப் போலவே அவனும் ஒவ்வொரு சொல்லையும் அதன் பொருளுக்காகத்தான் பயன்படுத்துகிறான். ஆனால், சொற்களுக்குப் பொதுவாக ஏற்கப்பட்டுள்ள பொருளைவிடக் கூடுதலான பொருளில் அவன் அவற்றைப் பயன்படுத்துகிறான். சொற்களுக்கு இருக்கக் கூடிய சிறப்பான பொருளுக்காகவும், அவை எவ்வாறு தோற்றம் அளிக்கின்றன—எவ்வாறு ஒலிக் கின்றன என்பதை அறிந்தும் அவன் அவற்றைத் தேர்ந் தெடுத்துக் கையாளுகிறான். அனைத்துக்கும் மேலாக அவற்றைக் கொண்டு ஆற்றல் மிக்க அணிவகுப்புகளை அவன் அமைத்து விடுகிறான்.' என்பர்.[1] மேலும், 'கவிதையிலே சாதாரணமான சொற்கள் அசாதாரண மான, ஆற்றலைப் பெற்று விளங்குகின்றன' என்றும் கூறுவர்.[2] உரைநடையில் ஆளப்படும் சொற்களுக்கும் பாட்டில் ஆளப்படும் சொற்களுக்கும் வேறுபாடு இல்லை. ஆனால் கவிஞன் அந்தச் சொற்களை ஆளும் முறையில் தான் வேறுபாடு உள்ளதாகக் கருதுவர்.[3] எனவே கவிஞன் கையாளும் சொற்களே, கவிதையின் சிறப்புக்கு உயிர் நாடியாகத் திகழ்வன எனலாம். 'ஒரு கவிஞனுக்குக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்து உதயமானால் மட்டும் போதாது. அக் கருத்தை உயிரோவியமாக்கச் செஞ்சொற்கள் வேண்டும்' என்று நியூமனும், 'ஒலிகளைச் சொல்லில் சிறை செய்கின்ற தொழிலைத்தான் கவிஞன் செய்கிறான்' என்று ஷெல்லியும் கூறியுள்ள கருத்துகள் சொற்களின் சிறப்பை காட்டுகின்றன எனலாம்.[4] "பொருளாற்றலும் ஒலியாற்றலும் பொருந்தப் பெற்ற சொற்களே கவிதையின் உயிர்க் கருவியாக அமைந்துள்ளன. கவிதையிலே சொற்கள் பொருந்து மாற்றையே சொல்வளம்—Diction என்று கூறுகிறோம்" என்பர்.[5] அத்தகைய சொல்வளம் மிக்கவராக வாணிதாசன் திகழ்கிறார். ஆழமான சங்க இலக்கியப் பயிற்சியும் அழுத்தமான தமிழறிவும் கொண்ட அவரது கவிதைகளில் சொல்லாட்சி சிறந்து விளங்குவதைப் பரக்கக் காணலாம்.

வந்த சொல்லே திரும்ப வருதல்

வந்த சொல்லே திரும்பத் திரும்ப வருமாறு அமைத்துப் புதுப்புது நயங்களைப் பெய்வது வாணிதாசனின் சொல்லாட்சித் திறனின் ஒரு கூறாகும். காட்டாக,

> "வருவாய்! என அழைத்தேன்! 'உன் வருவாய் என்ன
> தருவாய்?' எனக்கேட்டாள்; 'என்வருவாய் உன்றன்
> செவ்வாய்ச் சிரிப்'பென்றேன்; சீறிச் சிலைத்துமே,
> 'அவ்வாயும் இவ்வாயும் செவ்வாயும் புதனும்போல்
> சேர்ந்திருக்க வேண்டுமென்றாய்,......"[6]

என்னும் பாடலில் 'வாய்' எனும் சொல் திரும்பத் திரும்பக் கவிஞரால் கையாளப்பட்டுப் புதுப்புதுப் பொருள்களுடன் நயமூட்டுவதனைக் காணலாம். மேலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதலரின் வாயிரண்டும் 'செவ்வாயும் புதனும் போல் இணைந்திருக்க வேண்டும்' போது கவிஞரின் சொல்லாற்றலில் தனித்தன்மையான ஆளுமை புலப்படுகிறது எனலாம்.

சொல்லோவியம்

புத்தம் புதிய சொல்லோவியங்களைத் தீட்டுவதும் வாணிதாசனின் சிறப்புக் கூறாகத் திகழ்கிறது. 'கடற்கரையோரம் காற்றாட வந்த நடைபயில் நிலவுகள், நகரக்கன்னியர்'[7] எனப் பாடும்போது 'நடை பயில் நிலவுகள்' என்றும், 'சிற்றூர்த் திங்களெல்லாம் கடைக் கண்ணாற் சிரித்து நகை காட்டும்'[8] என்னும் போது 'திங்களெல்லாம் கடைக் கண்ணாற் சிரித்து' என்றும் புதிய சொல்லாட்சியினைப் பெய்து காட்டுவதைக் காணுகிறோம், மேலும் 'பிள்ளைமதி' என்னும்,[9] 'சின்ன நிலவு' என்றும்,[10] பிறை நிலாவைக் குறிப்பதும் கவிஞரின் புதுமை நாட்டத்தைப் புலப்படுத்துகிறது எனலாம்.

ஒரு சொல் இரு பொருள்

ஒரு சொல்லையே இருமுறை இருவகைப் பொருள் தருமாறு கையாளுவதும் வாணிதாசனின் இயல்பாகத் தெரிகிறது. 'காந்தளம் மென்விரல் காந்தளைக் கொய்ய' என்றும்,[11] 'அரும்பு மிளமீசை ஆளன் அகங்குளிர அரும்பு நகைகாட்டி' என்றும்,[12] 'தோகை அடிபட்டுச் சோர்ந்து கிடப்பதைப் போல் தோகை படுத்திருந்தாள்' என்றும்[13] அவர் பாடியுள்ள பகுதிகள் அவ்வியல்பை வெளிப்படுத்திக் காட்டுகின்றன, மேலும் பொருள் மாற்றமுடன் ஒரே ஒலி இயல்புடைய வெவ்வேறு சொற்களைக் கையாளும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்மையும் அவரிடம் காணப்படுகிறது. சுடலைப் பற்றிப் பாடும்போது, 'அழித்தாலும் அழிப்பாய் இன்பம் அளித்தாலும் அளிப்பாய்'[14] எனக் குறிப்பிடும்போது அத்தன்மை வெளிப்படுவதைக் காணலாம்.

சில சொற்களால் படம் பிடித்தல்

ஒரு சில சொற்களைக் கொண்டு, பாடப்படும் பொருள்களைப் படம் பிடித்துக் காட்டும் இயல்பும் அவரிடம் உள்ளது. செங்கண் சிறுகுயில்,[15] செம்மூக்குக் கிள்ளை,[16] தீக்கொண்டைச் சேவல்,[17] கருங்கால் வெண்ணுடல் பெருமூக்கு நாரை[18] முதலிய சிறுசிறு தொடர்களில் ஒரு சில சொற்களே அமைந்து சிறப்பதைக் காணலாம். இத்தகைய தொடர்களில் கவிஞர் தாம் கண்ட பொருளை நாமும் காணுமாறு செய்து நம் உள்ளத்தில் பதிய வைக்கிறார் என்பர்.[19]

எதிர்மறைச் சொற்கள்

எதிர்மறையான சொற்களைக்கொண்டு பொருள்களைச் சுட்டிச் செல்லலும் அவரிடம் காணப்படுகிறது. கவிஞருக்குள்ள சங்க இலக்கியப் பயிற்சியே இதற்குத் துணை செய்வதாகக் கருதலாம். 'பூவாத வேங்கை'யும்[20] என வேங்கைப் புலியையும், 'வலைபடாக் கெண்டை'[21] எனக் கண்களையும், 'வண்டுதாத் தாமரைப்பூ'[22] எனச் சூரியனையும், 'பாடாக் குயிலும்'[23] என இருளையும் 'மூசாத இரு மொக்கும்'[24] எனக் கொங்கைகளையும் சுட்டிச் செல்லுமிடங்கள் குறிப்பிடத் தக்கனவாம்.

சொல்லாட்சியால் கவிநயம் சிறத்தல்

கவிஞரின் சொல்லாட்சித் திறனால் கவிநயம் சிறக்கும் இடங்களும் அவரது கவிதைகளில் பரவலாகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காணப்படுகின்றன. '...களிவண்டு தாதுண்(டு) இசை பாடும் ஆளன் திருத்தோளில் மாதுண்(டு) இசைபாடு வாள்!' என்றும்,[25] 'கிளையின் உச்சி சொட்டுகின்ற தேனொத்த அவன் வாய்ச் சொல்லைக் காதிரண்டால் சுவைத்திருந்தாள்' என்றும்[26] 'வாய்ச் சிரிப்பை முல்லை மலர் பாய்விரித்துக் காட்டும்' என்றும்,[27] '...பல்லில்லை வாயில், மாதுளையின் வித்தென்று சொல்லுவாரென்றா நீ வாய்திறவாதிருக்கின்றாய்?' என்றும்,[28] 'கதவின் இடுக்கில் கண்ணொளி பாய்ச்சி இதயத்துள்ளே ஏற்றினான் அன்பை!' என்றும்[29] 'சிட்டுச் சிறுவரின் செங்கைக் கரும்புகள் தொட்டுப் பிசைந்தன பொங்கல்!' என்றும்[30] அவர் பாடியுள்ள பகுதிகளில் சொல்லாட்சித் திறனும் கவிநயமும் பின்னிப்பிணைந்து சிறந்தோங்குவதைக் காணலாம்.

இரட்டுற மொழிதல்

இரட்டுற மொழிதல் எனும் சிலேடை நயந்தோன்ற அமைப்பதிலும் வாணிதாசன் திறன்மிக்கவராகக் காணப்படுகிறார். 'புதுக்குடியர்'[31] என்னுஞ்சொல் புதிதாகக் குடிப்பழக்கம் உடையவர், புதுக்குடித்தனம் மேற்கொண்டவர் எனும் இரு பொருள்களில் அவரால் கையாளப் படுகிறது.

> ''தென்னாட்டில் இரவலருண்(டு)
> என்றுரைக்கும் செய்தியெல்லாம் அல்லிக் காக்கி''[32]

என்பதில் 'இரவலர்' எனுஞ்சொல் பிச்சை எடுப்பவர், இரவில் அலர்தல் எனும் இருபொருள்களுடன் அமைந்திருக்கக் காணலாம். அல்லிப்பூ இரவில் அலர்தல் ஈண்டுக் குறிக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பண்ணுருட்டி மேலோர் பலாச்சுவைத்தோம்"[33]

என்பதில் பண்ணுருட்டி, பலா ஆகிய இரண்டு சொற்கள் சிலேடை நயந்தோன்ற அமைந்துள்ளன. பண்ணுருட்டி என்பது ஓர் ஊரையும், இசையை உருளச் செய்வதையும் (பண் + உருட்டி) பலா என்பது பலாப்பழத்தையும், பல ஆக்களின் பாலையும் (பல் + ஆ) குறித்து நிற்கின்றன. இவற்றைப்போல 'சித்திரை'[34] எனுஞ்சொல் ஒரு மாதம், அறிவாகிய உணவு (சித்து + இரை) ஆகிய இரு பொருள் களிலும், 'அண்ணா'[35] எனுஞ் சொல் அறிஞர் அண்ணா. உள் நாக்கு ஆகிய இருபொருள்களிலும், 'கலை'[36] எனுஞ் சொல் நுண்கலை, ஆடை ஆகிய இரு பொருள்களிலும் 'பழம்'[37] எனுஞ்சொல் பழம் போன்ற, பழமையான ஆகிய இரு பொருள்களிலும் கவிஞரால் சிலேடை நயத்துடன் கையாளப்பட்டுள்ளன.

'...கவியரங்கெழுந்து வந்ததை வாழ்த்தி'[38]

என்பதில் கவியரங்கிற்கு வருகை தந்த நும்மை வாழ்த்தி என்றும், வந்த தை மாதத்தை வாழ்த்தி என்றும் இரு பொருள் படுமாறு இரட்டுற மொழியும் நயம் எண்ணத் தக்கது. இவ்வாற்றல் கவிஞருக்கு இயல்பாக அமைந்த ஒன்று என்பதற்கு 'விளக்கு' பற்றிய ஒரு பாடல் தக்க சான்றாகத் திகழ்கிறது.

".........கட்டில் மீது
வம்பளந் திருப்பார் காதல்
மணமக்கள்! அவர்கள் பேச்சைக்
கம்மலாய் எரிந்து கேட்டுக்
காதோடே வைத்தி ருப்பாய்!"[39]

என்னுமிடத்தில் 'கம்மலாய்' எனுஞ்சொல் 'மங்கலாக' எனும் பொருளிலும் 'கம்மல் எனும் காதணியாக' எனும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றொரு பொருளிலும் இயற்கையாய் அமைந்து சிறப்பதைக் காணலாம்.

இச்சிலேடை நயம் வாணிதாசனின் பாட்டரங்கப் பாடல்களில்தான் பெருகிய வழக்காக இடம் பெற்றுள்ளது. அதற்குக் காரணம் கேட்போருக்கு உடனடிச் சுவையூட்டும் பாட்டரங்கப் பாணியாகக் கவிஞர் அதனைக் கருதியிருக்கலாம்.

தொடுவானம் எனும் சொல்லாட்சி

'தொடுவானம்' என்னும் சொல் கவிஞரை மிகவும் கவர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அதன் பயிற்சி அவரது கவிதைகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. அவரது இசைப்பாடல் தொகுதி ஒன்றுக்குத் 'தொடுவானம்' என்றே பெயரிட்டுள்ளார். 'தொடுவான் அழகே அழகு'[40] என்று தன்னை மறந்து அவர் பாடுகிறார். முப்பது இடங்களுக்கு மேல் அச் சொல்லாட்சி அவரது கவிதை களில் இடம் பெற்றுள்ளது.[41] அவற்றின் மூலம் அச் சொல்லின் மீது கவிஞருக்குள்ள ஈடுபாட்டை நாம் புரிந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது. கீழ்த்திசையில் வெள்ளி முளைத்துவரல்,[42] செவ்வண்ணத் தொட்டியாக வும் தங்கத் தாம்பாளமாகவும் இளம்பரிதி எழுந்துவரல்,[43] மேற்றிசையில் அழகூட்டுதல்[44] முதலியன கவிஞரின் தொடுவானச் சொல்லாட்சியில் சிறப்பிடம் பெறுகின்றன. பொதுவாகக் கவிஞரின் தை முதல் நாள் வாழ்த்துப் பாடல்களில் இளங்கதிர் எழுச்சியுடன் இணைந்து இத்தொடுவானம்' மிகுந்த பயிற்சி காட்டுகிறது.[45] "தொடுவானம்...புலனுக்குப் பட்டது; புத்துணர் வளிப்பது; ஒளியும் அளியும் இன்பமும் நிறைப்பது; விரிந்தது!"[46] என்பது 'தொடுவானம்' பற்றிய கவிஞரின் கருத்துரையாகும். அச் சொல்லின் மீது இத்துணை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈடுபாடு கவிஞருக்கு இருப்பதால்தான், அவரது கவிதைகளில் அது பெருகிய வழக்குப் பெற்றுள்ளதாகக் கருதலாம்.

பேச்சுவழக்குச் சொற்கள்

வாணிதாசன் கவிதைகளில் பேச்சு வழக்குச் சொற்களும் திறம்படக் கையாளப்பட்டுள்ளன. இலக்கியத்தில் பேச்சு வழக்குச் சொற்கள் இடம் பெறுவது இயல்பு வழக்குகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.[47] மரூஉ என்னும் பெயர் பெற்று அவை விளங்கிக் கொண்டிருக்கின்றன. தற்காலக் கவிதைகளில் இவை இடம் பெறுவது காலத்தின் கட்டாயமாகிவிட்டது எனலாம். 'பேச்சு மொழி நடையில் கவிதைத் திறன் சிறந்து நிற்பதாகக்' கருதுவர்.[48] 'எளிய குடியானவர்களின் வாசகத்தையே (சொற்களையே) கூடிய வரையில் நான் உபயோகப்படுத்தப் போகிறேன்' என்னும் வோட்ஸ் ஓர்த்தின் கருத்தும் எண்ணத்தக்கதாகும்.[49] 'தத்தம் காலத்தில் வழக்கிலிருந்த சகல சொற்களையும் தேவையும் பொருத்தமும் நோக்கி' கவிஞர்கள் பயன்படுத்துவதாகக் கருதுகின்றனர்.[50] வாணிதாசனும் அதற்கு விதி விலக்கானவர் அல்லர் என்பதனை அவரது கவிதைகளில் காணப்படும் பேச்சு வழக்குச் சொற்களைக் கொண்டே நாம் அறியலாம்.

கூப்பிடு தொலைவு,[51] நாளைக்குப் பின்னைக்கு[52] முடிச்சை அவிழ்த்துவிடும்,[53] கடலை மூக்குக் கலகலப்பும்,[54] கிடப்பதைப் போல்,[55] கிடத்திவைத்து,[56] சாக்குப் போக்கு,[57] அடடா,[58] சிச்சிச்சீ நாயே,[59] இளிக்கிறான்,[60] இடுக்கெல்லாம்,[61] சிக்கெனப் பிடித்து,[62] வெடுக்கென்று,[63] நறுக்கென்று,[64] முண்டும் பசி,[65] பொதுக்கென்று,[66] கொக்கரிக்கும்,[67] தளதளத்த,[68] பொலு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொரலென,[69] குசுகுசு,[70] கிச்சுக் கிச்சு,[71] கிம்பளங்கள்,[72] ஆருகண்டா, சொல்லுறாங்க, அவங்கவங்க, பாருபுள்ளே வந்துடிச்சி, பக்கமேள வாத்தியண்டெ,[73] அகட்டி வச்சி, ஆம்பளே, பொம்பளே,[74] மலிந்த சரக்கு[75] முதலான, பேச்சுவழக்குச் சொற்கள் வாணிதாசன் கவிதைகளில் காணப்படுகின்றன.

அயல்மொழிச் சொற்கள்

மக்களின் பேச்சு வழக்கில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் சிலவும் அருகிய நிலையில் வாணிதாசனால் கையாளப்பட்டுள்ளன. 'திடமுள போலிசாகி, டாக்டராகி'[76] முதலான சில ஆங்கிலச் சொற்களும், மகராசா,[77] வர்ணம், சொர்ணம்,[78] சாதாரணம்,[79] கலியாணம்,[80] அகிம்சை[81] முதலான வடசொற்களும் அவரது கவிதைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படுகின்றன. வாணிதாசன் என்னும் பெயரே வடசொல் என்பதை,

"வாணியும் தாசனும் சுத்த வடசொல்லே!
ஏணியைப் போலெனை ஏற்றிவிட் டோர்கள்
அளித்த புனைபெயர்; அந்நாள் முதற்றே
நிலைத்து வருதல் நெடுநாள் பழக்கம்"[82]

என்னும் அவரது கூற்றே உறுதிப்படுத்துகிறது. பிறமொழிச் சொல் என்பது பற்றிக்கூட எண்ணாமல், விரும்பியோர் அளித்த புனைபெயர் என்பதால் அதனை அவர் விரும்பி ஏற்றுக்கொண்டுள்ளார் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. மேலும் புதுவை வட்டாரத்தில் வழங்கி வரும் உசியேவாய், (நிலவரி தண்டுபவர்), வாவு (விடுப்பு)[83] முதலான வழக்குச் சொற்கள் சிலவும் அவரது கவிதைகளில் அருகிய நிலையில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிவுரை

இங்ஙனம், வாணிதாசனாரின் சொல்லாட்சித் திறன், அவரது கவிதைகளின் மூலம் வெளிப்பட்டுத் தோன்றுவதைப் பரக்கக் காணலாம். வாணி தாசனின் மொழி, நடை, சொல்லாற்றல் பற்றி,

"......நிகரற்ற வாணிதாச!
கற்கண்டு மொழியில் உண்டு;
கவிதைத்தேன் நடையில் உண்டு;
பொற்புறும் சொற்கள் நின்பால்
புகலிடம் ஆவ துண்டு"[84]

என்பார் கூற்று, உண்மையாதலை வாணிதாசனின் கவிதைகளைக் கற்போர் மிக நன்றாக உணர்வர்.

"...சொல்வளம், கற்பனை ஊற்று என்ற இரண்டும் வளமாகப் பெற்றவர் கவிஞர் தோழர் வாணிதாசன்...அவரது பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் 'நோபல் பரிசு' பெறக்கூடும்"[85] என்னும் கவியரசு கண்ணதாசனின் கருத்துரை, ஒரு கவிஞரைப் பற்றிய மற்றொரு சமகாலக் கவிஞரின் சரியான கணிப்புரையாகக் கொள்ளத்தக்கதாகும்.

குறிப்புகள் :

1. "Words are the Poet's bricks, with which he "builds" a poem. Like all wrirers, he must be concerned with the meaning of each word; but the poet uses words for more than their generally

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

accepted meanings He chooses their for the special meanings they can have. and also for the way they look and sound. Above all he arranges them into effective patterns"

—The Doubleday Pictorial Library of THE ARTS Volume 7, P. 192,

2. டாக்டர் க. கைலாசபதி, கவிஞர் இ. முருகையன், 'கவிதை நயம்' ப. 12.
3. டாக்டர் மு. வரதராசன், இலக்கியத்திறன், ப. 220.
4. மேற்கோள்கள், ரா.ஸ்ரீ. தேசிகன், கவிதைக்கலை, முதல் தொகுதி, ப. 172 & ப. 194
5. டாக்டர் க. கைலாசபதி, கவிஞர் இ. முருகையன், கவிதை நயம், ப. 77
6. வாணிதாசன், பாட்டரங்கப் பாடல்கள், ப. 134
7. " தீர்த்த யாத்திரை, ப. 37
8. " பொங்கற் பரிசு, ப. 41
9. " பாட்டரங்கப் பாடல்கள், ப. 64
10. " " ப. 27
11. " இன்ப இலக்கியம், ப. 15. வ. 12
12. " பொங்கற் பரிசு, ப. 39
13. " தீர்த்த யாத்திரை, ப. 23
14. " எழிலோவியம், ப. 34, பா. 4
15. " இன்ப இலக்கியம், ப. 42
16 & 17. " எழில் விருத்தம், ப. 40
18. " தீர்த்த யாத்திரை, ப. 54
19. டாக்டர் மு. வரதராசன், இலக்கியத்திறன், ப. 258
20. வாணிதாசன், பாட்டுப் பிறக்குமடா, ப. 29,
21. " " ப. 26
22. " பொங்கற் பரிசு, ப. 5
23. " " ப. 53
24. " பாட்டுப் பிறக்குமடா!, ப. 15
25. " பொங்கற் பரிசு, ப. 35, பா. 4
26. " கொடி முல்லை, ப. 36, பா. 69

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

27. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 45
28. ,, இன்ப இலக்கியம் ப, 32
29. ,, ,, ப. 13
30. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 27
31. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 8, வ. 80
32. ,, ,, ப. 11, பா. 8
33. ,, ,, ப. 50
34. ,, ,, ப. 129
35. வாணிதாசன், பாட்டரங்கப் பாடல்கள், ப. 62, வ. 3
36. ,, ,, ப. 16, வ. 37
37. ,, ,, ப. 82, பா. 20
38. ,, ,, ப. 15, வ. 21
39. ,, எழிலோவியம், ப. 46, பா. 5
40. வாணிதாசன், தொடுவானம், ப. 5
41. வா.க II, ப. 65, பா. 1; கொ.மு., ப. 38, பா. 75; பொ.ப. ப. 43; தொ.வா. ப. 6, வ. 9; பொ.ப. ப. 53, பா. 1; ப. 32, பா. 2; ப. 1; பா. 1 ப.1 பா.3; ப. 1, பா. 4; பா.பா. ப. 163, பா. 1; வா.க. II., ப. 50; பா. 6; பொ.ப. ப. 10, பா. 2; ப. 50, பா. 1; எ.வி. ப. 35, பா. 1; பொ.ப. ப. 46, பா. 1; எ.வி. ப. 43, பா. 1; இ.வ. ப. 5, பா. 1; வா.க. I., ப. 57, பா. 1; ப. 74, பா. 1; இ.வ. ப. 87, பா. 1; எ.வி. ப. 40, பா 5; பொ.ப., ப. 11, பா. 4; வா.க.I., ப. 44, பா. 4; ப. 6; பா.பா. ப. 169 ப. 104, பா. 1; ப. 88; இ.வ. ப. 7. பா. 2; பா.பா. ப. 144; வா.க.I., ப. 148, பா. 1; தொ.வா. ப.5
42 வா.க.II., ப. 65; பா.1; கொ.மு. ப. 38, பா. 75
43. தொ.வா. ப. 6, வ. 9; பொ.ப. ப. 43; பா.பா. ப. 163, பா. 1; வா.க.II, ப. 50, பா. 6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

44. எ.வி. ப. 43, பா 1; இ.வ. ப. 5, பா. 1
வா.க.|., ப. 57, பா. 1
45. பொ.ப. ப.1, பா.1; ப. 3, பா. 1; ப. 4, பா. 1
ப. 10, பா. 2; ப. 11, பா. 4; ப. 32, பா 2;
ப. 43; ப. 46, பா. 1; ப. 50, பா. 1; ப. 53, பா. 1
46. வாணிதாசன், 'முன்னுரை' தொடுவானம், ப. 3
47. டாக்டர் க. கைலாசபதி, கவிஞர் இ. முருகையன், கவிதைநயம், ப. 90
48. டாக்டர் சி. கனகசபாபதி, பாரதி—
பாரதிதாசன் 'கவிதை மதிப்பீடு,' ப. 43
49. மேற்கோள், ரா. ஸ்ரீ. தேசிகன், கவிதைக்கலை, முதல் தொகுதி, ப. 138
50. டாக்டர் க. கைலாசபதி, கவிஞர். இ. முருகையன், கவிதைநயம், ப. 89
51. வாணிதாசன், எழிலோவியம், ப. 29, பா. 1
52. ” கவிதைகள், முதல் தொகுதி, ப. 96, பா. 5
53. ” பாட்டரங்கப் பாடல்கள், ப. 94, பா. 6
54. ” கொடிமுல்லை, ப. 27, பா. 47
55. ” தீர்த்தயாத்திரை, ப. 23
” இன்ப இலக்கியம், ப. 30
56. ” கொடி முல்லை, ப. 36, பா. 69.
57. ” குழந்தை இலக்கியம், ப. 61
58. ” இரவு வரவில்லை, ப. 37, பா. 1
” பொங்கற்பரிசு, ப. 2, பா. 3
” கவிதைகள், முதல்தொகுதி, ப. 36
59. ” ” ப. 35
60. ” பாட்டுப் பிறக்குமடா, ப. 75
61. ” தீர்த்த யாத்திரை, ப. 36, பா. 3
62. ” ப. 1
63. ” குழந்தை இலக்கியம், ப. 28, பா. 9.
64. ” இரவு வரவில்லை, ப. 8, பா. 4
65. ” பொங்கற்பரிசு, ப. 16, பா. 2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

66. ,, கவிதைகள், முதல்தொகுதி, ப. 5, பா. 4
,, சிரித்தநுணா, ப. 67 பா. 3
67. ,, பொங்கற்பரிசு, ப. 19, பா. 3
68. ,, இரவு வரவில்லை, ப. 43, பா. 3
69. ,, கவிதைகள், முதல்தொகுதி, ப. 139, பா. 1
70. ,, ,, ப.79, பா. 3
71. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 47, வ. 18
72. ,, சிரித்த நுணா, ப. 58
73. ,, கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப. 103
74. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 41, 42
75. ,, தொடுவானம், ப. 40
76. ,, சிரித்த நுணா, ப. 58
77. ,, கவிதைகள், இரண்டாம் தொகுதி, ப. 103.
78. ,, ,, முதல்தொகுதி, ப. 22
79. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 144
80. ,, தொடுவானம்; ப. 40
81. ,, கவிதைகள் முதல் தொகுதி, ப. 117
82. ,, ,, இரண்டாம் தொகுதி, ப. 84
83. ,, சிரித்த நுணா, ப. 58
84. டாக்டர் தமிழண்ணல், 'பைந்தமிழ்ப் பாகன் வாணி தாசன்' கவிஞரேறு வாணிதாசன் நினைவு மலர் (புதுச்சேரி, 1979) ப. 61
85. 'தென்றல்' இதழிலிருந்து மேற்கோள் :— கருத்துரை களுள் சில, பாட்டரங்கப் பாடல்கள். ப. 176.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. குழந்தை இலக்கியக் கூறுகள்

குழந்தை இலக்கியம் படைப்பது எளிய செயல் அன்று. அதற்கென்று சில தனித்தன்மைகள் உண்டு. "குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் எழுதுவது என்பது அரிய கலை. அது எல்லோராலும் முடியாது...பெரியவர்களுக்கு எழுத எவ்வளவு நிறைபுலமை வேண்டுமோ அதனினும் அதிகமான நிறைபுலமையும் ஆற்றலும் குழந்தை இலக்கியம் படைப்போர்க்கு வேண்டும்"[1] என்பர். அதனால் குழந்தைகளுக்கு என்று இலக்கியம் படைப்பதை மிக எளிமையானதாகக் கருதிவிட முடியாது. குழந்தை இலக்கியத்திற்கென்று சில சிறப்புக் கூறுகள் உண்டு. அவை வாணிதாசன் குழந்தைப் பாடல்களில் எங்ஙனம் இடம் பெற்றுள்ளன என்பதனை ஈண்டுக் காண்போம்.

1. ஓசை நயத்திற்கு முதலிடம் :

குழந்தைப் பாடல்களில் ஓசை நயத்திற்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. பொருட் சிறப்புக்கு இரண்டாவது இடம்தான். குழந்தை இலக்கியத்தின் முதற் சிறப்புக் கூறாக நாம் இதனைக் கொள்ளலாம். "குழந்தைப் பருவத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ளங்கவரும் ஒரு பெரும் சக்தியாக விளங்குகிறது பாட்டு என்பதை நாம் நன்கறிவோம். குழந்தை அடைவதோ ஓசை இன்பம். ஓசை இன்பத்திலே மனம் ஒன்றி மெய்ம் மறக்காத குழந்தையே இல்லை என்று கூறிவிடலாம்,"[2] என்கிறார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழ வள்ளியப்பா. அதற்கேற்ப, ஓசை நயத்தால் குழந்தைகளின் உள்ளத்தை ஈர்க்கும் பாடல்கள் பலவற்றைப் படைத்துத் தந்துள்ளார் வாணிதாசன்.

"இனிக்கும் பாட்டுப்பாடுவேன்—காலை
எழுச்சிப் பாட்டுப் பாடுவேன்!
கனிபி ழிந்த சாற்றைப் போலக்
காதில் இனிக்கப் பாடுவேன்!"[3]

என்று இனிக்கும் பாட்டுடன் இசை இன்பத்தையும் கலந்து குழந்தைகளுக்கு ஊட்டி மகிழும் கவிஞரின் இயல்பைக் காணலாம். ஓசை நயத்திற்கே முதலிடம் கொடுத்து அவர் பாடிய குழந்தைப் பாடல்கள் பலவாம். அவற்றுள் ஒன்று வருமாறு:

"சாய்ந்தாடம்மா! சாய்ந்தாடு!
தங்கச் சிலையே! சாய்ந்தாடு!
காயும் நிலவே! சாய்ந்தாடு!
கண்ணே! மணியே சாய்ந்தாடு!
முத்தம் தருவேன்! சாய்ந்தாடு!
முத்தே! பவளமே! சாய்ந்தாடு!
கொத்தும் கிளியே! சாய்ந்தாடு!
தோகை மயிலே! சாய்ந்தாடு!
பொன்னே' மணியே! சாய்நதாடு!
புதுமணப்பூவே! சாய்ந்தாடு!
கன்னற் சுவையே! சாய்ந்தாடு!
காலை அழகே! சாய்ந்தாடு![4]

இப்பாடல், குழந்தையைப் பார்த்து 'சாய்ந்தாடு' என அன்போடு கொஞ்சி ஓசை நயத்தோடு பாடும் வண்ணம் அமைந்துள்ளது. பாடலைப் பாடும்போதே குழந்தைகள் தம்மை மறந்து தலைகளை ஆட்டிச் 'சாய்ந்தாடும்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்மையை ஏற்படுத்துவது இப்பாலின் ஓசை நயமாகும். தங்கச் சிலையே, காயும் நிலவே, கண்ணே, மணியே, முத்தே, பவளமே, கொத்துங்கிளியே, தோகைமயிலே, பொன்னே, புதுமணப் பூவே, கன்னற் சுவையே, காலை அழகே ஆகிய சொற்களும் சொற்றொடர்களும் பாடலின் ஓசை நயத்திற்குப் புதுப்பொலிவை ஊட்டும் வகையில் புனையப்பட்டுள்ளன. "ஓசைக் கோப்பு என்பது கருத்துகளைச் சேர்த்து ஒட்டி வைக்கும் வெறும் பிசின் அன்று. இது கவிதைக்கு உயிர் நாடியாய்த் திகழ் கின்றது. மின்சார ஒளிபோல் கவிதை முழுதும் பாய்கின்றது,"[5] என்று ஜேம்ஸ் சதர்லன்ட் கூறியுள்ளார். அவ்வோசை நயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த குழந்தைக் கவிஞராக வாணிதாசன் காணப்படுகிறார்.

2. எளியநடைக்குச் சிறப்பிடம்

குழந்தை இலக்கியத்தின் அடுத்த சிறப்புக் கூறு, எளிய நடையாகும். "ஓரிரு கருத்துகள் மட்டுமே அமைந்த எளிய சிறு பாடல்களே குழந்தைகளுக்குப் போதுமானது"[6] என்பர். எளிய சிறு பாடல்கள் பலவற்றைக் குழந்தைகளுக்கு வடித்துத் தந்துள்ளவர் வாணிதாசன்.

> எங்கள் தம்பி! நல்ல தம்பி!
> எங்கள் தம்பி! தங்கக்கம்பி![7]

என்று தம்பியைப் பற்றியும்,

> "எங்கள் பாப்பா! தங்கப் பாப்பா!
> எழுந்து விழுந்து நடக்கும் பாப்பா!"[8]

என்று பாப்பாவைப் பற்றியும் அவர் பாடும்போது எளிய நடை இயல்பாக அமைந்து உள்ளதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும்,

"அடுப்பங் கரையில் பூனைக்குட்டி!
அயர்ந்து தூங்குது பூனைக்குட்டி!
துடுப்பை எடுத்தால் பூனைக்குட்டி!
துள்ளிப் பாயுது பூனைக்குட்டி![9]

என்னும் பூனைக்குட்டிப் பாடலிலும் கவிஞருக்கு அவ் எளிய நடை நன்கு கை கொடுக்கிறது எனலாம். "எளிய நடையில் இனிய சந்தத்தில் உள்ளத்தை நேரடியாகத் தொட்டு, உணர்ச்சியைத் தூண்டும் பாடல்களே சின்னஞ் சிறுவருக்குத் தேவை"[10] என்பர். குழந்தை இலக்கியத் திற்கு அவ்வெளிய நடையின் தேவையை உணர்ந்த குழந்தைக் கவிஞராக வாணிதாசன் திகழ்கிறார்.

3. சொற்களும் சொற்றொடர்களும் திரும்பத்திரும்ப வருதல்

வந்த சொற்களோ சொற்றொடர்களோ மீண்டும் மீண்டும் வருமாறு அமைந்த பாடல்களைக் குழந்தைகள் பெரிதும் விரும்புவர். குழந்தை இலக்கியத்தின் கூறுகளில் இதையும் ஒன்றாகக் கருதலாம். "குழந்தைகளுக்காகப் பாடும் பாடல்களில்...சில சொற்களும் தொடர்களும் திரும்ப திரும்ப வரவேண்டும்" என்பர்.[11] அங்ஙனம், வந்த சொல்லே திரும்பத் திரும்ப வருமாறு வாணிதாசன் பாடியுள்ள பாடல்கள் பலவுண்டு.

"தம்பி! சோறு! வாய்திற!
தளிரே! சோறு! வாய்திற!
கொம்புத் தேனே! வாய்திற!
குளத்துப்பூவே! வாய்திற!"[12]

இப்பாடலில் 'வாய்திற' என்னும் சொல் அடிதோறும் திரும்பத் திரும்ப வருவதால் ஒரு தனிச் சிறப்பு ஏற்படுவதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"காக்கா! காக்கா! ஓடி வா!
கத்திக் கத்தி நடந்துவா!"[13]

என்னும் பாடலில் 'காக்கா' 'கத்தி' என்றும் சொற்கள் அடுக்கி வருகின்றன.

மேலும்,

"தொட்டில்! தொட்டில்! தொட்டில்!
தொங்கி ஆடும் தொட்டில்!
பட்டுக் குழந்தை தூங்கப்
பாட்டி வாங்கிய தொட்டில்!"[14]

என்னும் பாடலில் 'தொட்டில்' என்னும் சொல் பலமுறை அடுக்கி வருவதைக் காணலாம். ஆசிரியர் பாடஞ் சொல்லித் தரும் முறையினைக் குழந்தைப் பாடலாக வடிக்கும்போதும், இவ்வுத்தியைப் புதிய முறையில் பயன் படுத்துகிறார் கவிஞர்.

"எண்ணி எண்ணி எண்ணிக் காட்டி
எம்மை எண்ணச் சொல்லுவார்—குண்டை
எடுத்தே எண்ணச் சொல்லுவார்;
எழுதி எழுதி எழுதிக் காட்டி
எழுதச் சொல்லி அதட்டுவார்—பாடம்
எழுதச் சொல்லி அதட்டுவார்".[15]

என்னும் பாடலில் 'எண்ணி' எழுதி' என்னும் சொற்கள் திரும்பத் திரும்ப இடம் பெற்று, ஆசிரியரின் பாடஞ் சொல்லித்தரும் முறையை அப்படியே படம் பிடித்துக் காட்டப் பெரிதும் உதவுகின்றன. 'எழுதச் சொல்லி அதட்டுவார்' என்னும் சொற்றொடர் இரண்டுமுறை அடுக்கி வந்து, பாடற்பொருளின் சிறப்புக்குப் பெருந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணை புரிவதைக் காணலாம். வந்த அடியே திரும்ப வருமாறு அமைந்த பாடலும் உண்டு.

"தம்பிப் பையன் சிறுபையன்
தாமரை மலரைப் போற்கையன்!
தம்பிப் பையன் சிறுபையன்!
தங்கக்கட்டி போல் மெய்யன்!"[16]

இப்பாடலில் 'தம்பிப் பையன் சிறுபையன்' என்னும் அடி இரண்டு முறை இடம் பெற்றுப் பாடலுக்கு அழுத்தம் கொடுப்பதைக் காணலாம். இங்ஙனம், சொற்கள், சொற்றொடர்கள், அடிகள் திரும்பத் திரும்ப வரும் குழந்தை இலக்கியப் போக்கு, வாணிதாசன் குழந்தைப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளது.

4. எளிய முறையில் இயைபுத்தொடை

அடிகளின் இறுதிச்சீர் ஒன்றி வருதலை இயைபுத் தொடை என்பர். 'இறுவாயொத்தல் இயைபெனப் படுமே'[17] என்கிறார் புலவர் குழந்தை. குழந்தைப்பாடல் களில் அவ்வியைபுத் தொடை எளிமையுடன் அமைவது சாலச் சிறந்ததாகும்.

"அம்மா புடவை பட்டு!
அழுதால் தலையிற் குட்டு!
அடுப்பில் வேகுது பிட்டு!"[18]

என்னும் பாடலில் இயைபுத் தொடை எளிய முறையில் அமைந்திருப்பதைக் காணலாம். மேலும்,

"எருமைத்தயிரோ கட்டி!
எடுக்கும் வெண்ணெய் கெட்டி!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உருகும் நெய்யைக் கொட்டி.
உண்ண வயதும் கெட்டி!"[19]

என்னும் பாடலிலும் அடிதோறும் இறுதிச் சீர் இயைந்து வந்து, பாட்டின் இன்னோசைக்குத் துணைபுரிகிறது. இங்ஙனம், இயைபுத் தொடையை எளிய முறையில் அமைத்து, வாணிதாசன் படைத்துள்ள குழந்தைப் பாடல்கள் பலவாகும்.

5. வா! வா! என விளித்துப்பாடுதல்

குழந்தைகள், வா! வா! என விளித்துப்பாடும் பாடல்களைப் பெரிதும் விரும்புகின்றனர். 'நிலா நிலா ஓடி வா! நில்லாமல் ஓடி வா!' எனத் தொன்றுதொட்டுத் தாய்மார் பாடி வரும் நிலாப்பாட்டு அவ்வுத்தியில் அமைந்ததாகும். அதே பாணியில்,

"நிலவே! நிலவே! வாராயோ!
நீ பகல் எங்குச் சென்றாயோ!"[20]

என்னும் பாடலில் அடிதோறும் 'வா! வா!' என அமைந்துள்ள விளிச் சொற்கள், குழந்தைகளின் உள்ளத்தைப் பெரிதும் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

6. சிந்தையைக் கவரும் சிந்துமெட்டு

குழந்தைக் கவிஞர்கள் கையாளும் எளிய மெட்டுகளில் சிந்து மெட்டும் ஒன்றாகும். சிந்து மெட்டுகளால் குழந்தைகளின் சிந்தையைக் கவர்ந்த பாடல்கள் பலவாம். பாரதியாரின் 'பாப்பாப்பாட்டு' சிந்துமெட்டால் அமைந்ததாகும். கவிமணியும் பாரதிதாசனும் சிறுவர்களுக்காகப் பாடிய பாடல்களில் சிந்து மெட்டுகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்பிடம் வகிக்கின்றன. வாணிதாசனும் சிந்து மெட்டு களால் ஆன குழந்தைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

"பெற்ற அன்னை தந்தையே—என்றும்
பேசும் செல்வம் ஆகுமே!
மற்ற செல்வம் யாவுமே—நாட்டில்
வந்துவந்து போகுமே![21]

என்பது சிந்து மெட்டில் அமைந்த பாடலாகும். மேலும்,

"ஆட்டுக் குட்டி முன்கால் தூக்கி
அங்கும் இங்கும் துள்ளும்!—அதன்
அழகு நெஞ்சை அள்ளும்!
ஆட்டுக்குட்டி ஓடி ஓடி
'அம்மா' என்றே கத்தும்!—தாய்
ஆட்டின் மடியை முட்டும்!"[22]

என்னும் பாடல் பின்னடி மடக்கி அளவடியானும் சிந்தடியானும் வந்த நாமுச்சீர் இரட்டை ஆகும். சிந்து மெட்டில் அமைந்த இப்பாடல் குழந்தைகளின் நெஞ்சங் களை எல்லாம் அள்ளும் வகையில் அமைந்துள்ளது எனலாம். அங்கும் இங்கும் துள்ளும் ஆட்டுக்குட்டியோடு குழந்தைகளின் மனமும் மகிழ்ச்சியால் துள்ளும் வகையில் பாடலில் சந்த அமைப்பு, சிந்து பாடுவதைக் காணலாம்.

7. எளிய உவமைகளும் இனிய காட்சிப் படிமங்களும்

வாணிதாசன் குழந்தைப்பாடல்களில் எளிய உவமை களும் இனிய காட்சிப் படிமங்களும் இடம்பெற்றுள்ளன. குழந்தைகளை வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் கவிஞரால் அவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"செக்கச் சிவந்த மூக்குத்தான்
செடியிற் பழுத்த மிளகாயோ!"[23]

எனக் கிளியின் சிவந்த மூக்குக்கு உவமையாகச் செடியிற் பழுத்த சிவந்த மிளகாய், மிகப் பொருந்தமாகக் கவிஞரால் கூறப்படுகிறது. முட்டையிலிருந்து வெளி வரும் சிறு புறாக்குஞ்சுக்கு, 'நனைந்த உருண்டை வெண்பஞ்சை'[24] உவமையாகக் கூறுமிடத்தில் கவிஞரின் திறன் பளிச்சிடுகிறது எனலாம். உவமைகளைப்போலவே காட்சிப் படிமங்களாலும் குழந்தைகளின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவர் வாணிதாசன் ஆவார்.

"ஓணான் போலத் தலைதூக்கி
உடலை நெளித்துப் பார்த்திடுவான்"[25]

இப்பாடலில் தலையைத் தூக்கி உடலை நெளித்துப் பார்க்கும் குழந்தையின் உருவத்தைத் தலை தூக்கிப் பார்க்கும் ஓணானோடு ஒப்பிட்டுக் காட்டும்போது, உவமையழகுடன் படிமக் காட்சியும் இணைவதைக் காணலாம்.

"பன்முறை கழுத்தைச் சாய்த்துப்
பார்த்திடும் உழுந்துக் கண்ணால்!"[26]

என்று கோழிக்குஞ்சு ஒன்றின் உருவம் கருத்துருக் காட்சி யாகக் குழந்தைகளுக்குப் படம் பிடித்துக் காட்டப் படுகிறது. மேலும், இரவு முழுதும் கொட்டமடிக்கும் பூனை, பகல் பொழுதிலோ கண்ணைச் சிறிது மூடி, காதை மெல்லத் தூக்கி, வாலை மடக்கிக்கொண்டு தூங்கும்போது அமைதியான தோற்றம் குழந்தைகளின் மனக்கண் முன்னால் காட்டப்படுவதையும்"[27] கருத்துருக் காட்சியின் சாயலாகக் கொள்ளலாம். இங்ஙனம், எளிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உவமைகளாலும் இனிய படிமக் காட்சிகளாலும் வாணிதாசனின் குழந்தைப் பாடல்கள் தனிச் சிறப்புப் பெற்று திகழ்கின்றன எனலாம்.

8. ஒலிக்குறிப்புச் சொற்கள்

குழந்தைப் பாடல்களில் ஒலிக்குறிப்புச் சொற்கள் இடம் பெறுவது நல்லது. அவை, குழந்தைகளை மகிழ்விக்கப் பெரிதும் உதவுவனவாம். குயில் கூவுகிறது என்று கூறுவதைவிட "குக்குக் கென்றே கூவுகின்றாய்!"[28] என்று கூறுவது குழந்தைகள் உள்ளத்தை மிகவும் கவரக் கூடியதாகும். வாணிதாசன் அவ்வொலிக்குறிப்புச் சொற்களைப் பல இடங்களில் கையாண்டுள்ளார். பூனையைப் பாடும்போது, "மீ! மீ! என்றே நக்கும்"[29] கிளியைப் பாடும்போது "அக்கா! அக்கா! என்றுன்னை அடிக்கடி பேச யார் சொன்னார்?![30] என்றும் ஒலிக்குறிப்புச் சொற்கள் அவர் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"கண்ணைக் கையை ஆட்டி ஆட்டிக்
கப்சிப் பென்றே கூவுவார்!"[31]

என்னும் பாடலில் 'கப்சிப்' என்னும் பேச்சுவழக்கான ஒலிக்குறிப்புச் சொல் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். மேலும் 'தடபுட இசைக்கும் மின் வண்டி' என்றும்[32] 'ஓம்ஓம் என்று கூவிடும் உந்துவண்டி' என்றும்[33] வாகனங்களைப் பற்றி பாடும்போதும் ஒலிக் குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் கவிஞர்.

இங்ஙனம், இவ்வாய்வுக் கட்டுரையில் வாணிதாசனின் குழந்தைப் பாடல்களில் அமைந்துள்ள பல்வேறு குழந்தை இலக்கியக் கூறுகள் சிறப்பாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுத் தக்க சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளன எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புகள் :

1. டாக்டர் மா. இராமலிங்கம், 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' ப. 225
2. அழ. வள்ளியப்பா, 'வளர்ந்துவரும் குழந்தை இலக்கியம்' ப. 8
3. வாணிதாசன், இனிக்கும் பாட்டு' ப. 5
4. வாணிதாசன், 'குழந்தை இலக்கியம்' ப. 1
5. Rhythm in fact is not a glue that sticks the poets thoughts together, it is a kind of electricity that makes them vibrate and him.
— ரா. ஸ்ரீ. தேசிகன், 'ஜேம்ஸ் சதர்லண்ட்' கவிதைக் கலை, 2. (கல்கத்தா, 1967) ப. 168
6. டாக்டர் மா. இராமலிங்கம், 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' ப. 258
7. வாணிதாசன், 'இனிக்கும் பாட்டு' ப. 8
8. ,, ,, ப. 7
9. ,, ,, ப. 20
10. அழ. வள்ளியப்பா, 'வளர்ந்துவரும் குழந்தை இலக்கியம்' ப. 12
11. டாக்டர் மு. வரதராசனார், 'தமிழ் இலக்கிய வரலாறு' ப. 351
12. வாணிதாசன், 'குழந்தை இலக்கியம்' ப. 5
13. ,, 'இனிக்கும் பாட்டு' ப. 36
14. ,, 'குழந்தை இலக்கியம்' ப. 32
15. ,, 'இனிக்கும் பாட்டு' ப. 44
16. ,, 'குழந்தை இலக்கியம்' ப. 72
17. புலவர் குழந்தை, 'யாப்பதிகாரம்' சென்னை, (1959) ப. 53.
18. வாணிதாசன், 'குழந்தை இலக்கியம்' ப. 6
19. ,, 'இனிக்கும் பாட்டு' ப. 47
20 ,, ,, ப. 10
21. ,, 'குழந்தை இலக்கியம்' ப. 115

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

22.	,,	'இனிக்கும் பாட்டு'	ப. 19
23.	,,	'குழந்தை இலக்கியம்'	ப. 55
24.	,,	,,	ப. 59
25.	,,	,,	ப. 74
26.	,,	,,	ப. 65
27.	,,	,,	ப. 44
28.	,,	,,	ப. 61
29.	,,	,,	ப. 43
30.	,,	,,	ப. 55
31.	,,	'இனிக்கும் பாட்டு'	ப. 44
32.	,,	'குழந்தை இலக்கியம்'	ப. 26
33.	,,	'இனிக்கும் பாட்டு'	ப. 38

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. வாணிதாசன் கவிதைகள் —ஒரு கண்ணோட்டம்*

புதுமைக் கவிஞர்

பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரையில் தனியான தோர் இடம் வகிக்கும் தகுதிபெற்றவர் கவிஞரேறு வாணிதாசன் ஆவார். புரட்சிக் கவிஞரின் தாக்கத்தைப் இப்புதுமைக் கவிஞரின் கவிதைகளில் பரக்கக் காணலாம். அமைதியே உருவாக அடக்கமே வடிவாக சேலியமேடு என்னும் சிற்றூரில் வாழ்ந்து கொண்டே, செந்தமிழ்ப் பணிபுரிந்த சீர்திருத்தக் கவிஞர் அவராவார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் சமுதாயச் சிந்தனைகளால் கவரப்பட்டு, எழுச்சிக் கவிதைகள் பல வடித்த உணர்ச்சிக் கவிஞர் வாணிதாசன் ஆவார். கொண்ட கொள்கைக்காக இறுதிவரை உறுதியோடு நின்ற ஓர் இலட்சியக் கவிஞர் வாணிதாசன் எனில் அது முற்றிலும் உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

சமுதாயச் சிந்தனைகள்

சாதிப் பாகுபாட்டையும் சமய வேறுபாட்டையும் கடுமையாகச் சாடும் சமதர்மக் கவிஞராக அவர் காட்சி யளிக்கின்றார்.

---

* சென்னை மாணவர் மன்றம்—பொன்விழா மலரில் (1982) வெளிவந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"எட்டிப் பழமோ பறைச்சி இதழ்?—மன
இன்பத்திற்கு ஏதடி ஜாதி மதம்?
மொட்டு பலவகை ஆனாலும்—அதன்
முருகுதரும் சுவை ஒன்று என்றான்"[1]

என்று சாதி மதவேற்றுமைகளைச் சாடி வீறுகொண்டு அவர் பாடியுள்ள வைரவரிகள் பலவாகும்.

நாள் பார்த்தல், கோள் பார்த்தல் போன்ற மூடநம்பிக்கைகளை வேரோடு களையவேண்டும் என்பதில் பெருவிருப்பம் உடையவர் அவர்.

"கடைக் காலக் கொள்கையிது; வீணர் சூழ்ச்சி;
ஆள்வினையை நம்பாது மக்கள் வீழும்
அளறுமிகு முள்நிறைந்த பாட்டை......"[2]

என்று நாள் பார்க்கும் மூடநம்பிக்கையை எதிர்த்து முரசு கொட்டுகின்றார் கவிஞர்.

காதல் மணம், பெண் விடுதலை ஆகிய கொள்கை வழி நின்று பல கவிதைகளை வடித்துள்ளார். தாய்மையின் சிறப்பினை,

"காய்தாங்கும் கொடியாம் அன்னை;
கண்ணிமை எனினும் ஒக்கும்;
தாயினை இழந்தார் வானத்
தண்துளி காணாப் புன்செய்..."[3]

என்ற கவிதை வரிகளின் மூலம் அழகாகப் வெளிப்படுத்தியுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளியல் சிந்தனைகள்

இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளின் மிகச் சிறந்த உள்ளீடு, பொதுவுடைமைப் பொருளியல் சிந்தனை எனில் மிகையாகாது. அப்பொருளியல் சிந்தனையினைப் புதுப்பொலிவுடன் தம் கவிதைகளில் கையாண்டுள்ள புதுமைக் கவிஞரின் திறன் போற்றுதற்குரியதாகும்.

''கூப்பிடு வாழ்வோர் அனைவரையும் கூப்பிடடி!
காப்பெதற்கு? கார்தந்த செல்வம் விளைபொருள்கள்!
சாப்பாட்டைத் தேக்காதே! சண்டை அதன் விளைவாம்!
பங்காக்கி உண்போம்! பசியேது பின்நாட்டில்''[4]

என்று 'பங்காக்கி உண்ண' அழைக்கும் கவிதை வரிகளில், கவிஞரின் பொதுவுடைமை வேட்கை நன்கு வெளிப்படுகின்றதன்றோ?

''கொடுமையடா மண்ணில் சிலருண்டு வாழல்
கூழுக்கும் வழியற்றுப் பாட்டாளி தாழல்
உடைமை பொதுவாக்கி வாழ்வோம் இந்நாட்டில்
ஊரை வளைப்போரை வேர்கல்லிச் சாய்ப்போம்''[5]

என்ற புரட்சி முழக்கம்; கவிஞரின் பொதுமை நோக்கைப் புலப்படுத்துவதாகவே அமைந்துள்ளதைக் காணலாம்.

தமிழ் உணர்வு

பைந்தமிழ்ப் பற்றுமிக்கவர், பாவலர் ஏறு வாணிதாசன் ஆவார். அவரது தமிழ் உணர்வை வெளிப்படுத்தும் கவிதைவரிகள் பலவாகும்.

''கொண்டுவா யாழை! குழந்தைகளைப் பாடவிடு!
பண்டைத் தமிழ்வீரம் பாடட்டும்; கேட்போம்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசர் மடிமேல் அரும்புலவர் செந்நாவில்
ஓங்கி வளர்ந்த உயர்தமிழைப் பாடட்டும்"[6]

என்று 'ஓங்கி உயர்ந்த உயர் தமிழைப்' பாடும்போது, கவிஞர் தம் தமிழ் உணர்வின் வெளிப்பாட்டை நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

மேலும்,

"அடிமை மலைபிளக்கும் உளிஎங்கள் தமிழே!
ஆண்மைக்கும் வலிமைக்கும் உரமெங்கள் தமிழே![7]

என்று அவர் முழங்கும் போது, மொழிப்பற்றின் முகட்டிற்கே சென்றுவிடுகின்றார்.

இயற்கை ஈடுபாடு

ஆங்கிலக் கவிஞர் வோட்ஸ் ஓர்த்தை இயற்கைக் கவிஞர் என்பர். கவிஞர் வாணிதாசனும் ஓர் இயற்கைக் கவிஞராகவே தமிழ் இலக்கிய உலகில் காட்சியளிக்கின்றார். கவிஞரின் இயற்கை ஈடுபாடு பல கவிதை வரிகளின் மூலம் நன்கு வெளிப்பட்டிருப்பதைப் பரக்கக் காணலாம்.

முழுதும் 'இயற்கை' பற்றிய கவிதைகளையே கொண்ட கவிஞரின் "எழிலோவியம்" ஓர் சிறந்த இலக்கியப் படைப்பாகும்.

"விளைவயல் பொட்டல் என்ற
வேற்றுமை கருதாது என்றும்
அளித்துயிர் ஓம்பு கின்றாய்
அன்னையே! முகிலே! வாழி!"[8]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என மேகத்தைப் பாடும்போதும், சமதர்மக் கொள்கையின் மேல் தான் கொண்டுள்ள மோகத்தை வெளிப்படுத்தத் தவறவில்லை கவிஞர்.

"………வீட்டோரத்
தோட்டத்து வேலியிலே
தொங்கும் சுரைக்காய்கள்
மீட்டாது மாட்டிவைத்த
மெல் யாழாம்…"[9]

என்பன போன்ற கவிதை வரிகள், கவிஞரது இயற்கை ஈடுபாட்டை நன்கு எடுத்துக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றன.

உவமை நயங்கள்

கவிஞர் வாணிதாசன் கவிதைகளில் கவிநயம், சொல் நயம், உவமை நயங்களுக்குப் பஞ்சமே இல்லை. சிறந்த உவமைகளை அமைத்துக் கவிபாடுவதில் கவிஞர் வாணிதாசன் வல்லவராகத் திகழ்கின்றார்.

"காட்டுப் பூனைப் பல்லாம்
கார்முல்லை நீளரும்பு"[10]

என்பதில் முல்லை மலர்க்கு, காட்டுப் பூனைப் பல்லையும்,

"பெண்தலை கோதி எடுந்திடுபேன்போல்
பிய்த்தனம் என்னுடல் களைகள்"[11]

என்பதில் வயல்களில் களையெடுப்பதற்கு, தலைமுடியைக் கோதி பேன் எடுப்பதையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இலவங்காய் வால்முளைத்துப்
பறப்பதைப் போல் கிள்ளை
நெட்டாகக் கல்வீட்டுப்
புறச்சுவரைத் தாவும்"[12]

என்னும் வரிகளில், கிளி பறந்து செல்வதற்கு, இலவங்காய் வால்முளைத்துப் பறப்பதுபோன்ற கற்பனையையும் அமைத்து உவமை நயந்தோன்ற பாடியுள்ள திறன் பாராட்டுதற்குரியதாகும். இங்ஙனம், உவமைகளைக் கையாள்வதில் புதுமுறையை வகுத்துக் கொண்டு பாடுவதில் வல்லவராகத் திகழ்கின்றார் கவிஞர் வாணிதாசன்.

கற்பனை ஓவியங்கள்

கவிஞர்களின் கைவண்ணத்தில் கவினுறச் சித்தரிக்கப் படுவோர் பெண்களே எனலாம். ஆடவர் உள்ளத்தை ஏங்கி ஏங்கித் தவிக்கவைக்கும் ஆற்றலில் பெண்டிரின் பேரழகுக்குப் பெரும்பங்கு உண்டு. அத்தகைய பேரழகுப் பெட்டகமொன்றை, அழகிய சொல்லோவியமாகத் தீட்டி, நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்திக் காட்டு கிறார் கவிஞர் வாணிதாசன்.

சோலை மரமொன்றின் வேர்மீது தலைவைத்து, தனது மெல்லுடலை நீட்டிப் படுத்திருக்கிறாள் ஒருத்தி. அவள் படுத்துக்கிடக்கும் தோற்றம் எப்படி இருக்கிற தாம்? யாழ் கிடப்பதுபோல இருக்கிறதாம், மீட்டுவார் இன்றி! அவ்வளவுதானா? தமிழ் நூல் ஒன்று தனியே படிப்பாரின்றிக் கிடப்பது போலவும் தோன்றுகிறதாம். கார்மேகம் காணாத தோகைமயில் போலக் கிடக்கிறா ளாம், அத்துடியிடையாள்! மேலும் தொடர்கிறது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞரின் வருணனை! அருகில் உள்ள நீர் நிலையில் துள்ளிப் பாயும் கெண்டை மீன்களை நோக்கி, கெண்டை மீன் போன்ற அவளது விழிப்பார்வை பாய்கிறதாம். அப்படிப் பார்த்துப் பார்த்துச் சலித்துப்போய், இமைகளை இறுக மூடியவாறு படுத்திருக்கிறாள், பருவங் கொழிக்கும் உருவங் கொண்ட அப்பைம்பொன் பாவை! எப்படி? கல்லில் செதுக்கிய வண்ணச் சிலைபோல! நறுமணங்கமழும் சந்தனக் கிண்ணம் கிடப்பதுபோல! அக்காட்சியைக் கண்ட ஆடவன் எண்ணமோ, எங்கெங்கோ ஓடுகிறது; இறக்கை கட்டிப் பறக்கிறது!

அன்புக் காதலனை ஏங்கவைத்த அக் கன்னி மகளை படம் பிடித்துக் காட்டும் கற்பனை ஓவியம் இதோ!

"யார் அவள்? அவளேதான்! யாழ்கிடப்பதைப் போல
தமிழ்நூல் தனியே படிப்பா ரின்றிக்
கிடப்பதைப் போலக் கிடக்கின்றாள் கிள்ளை!
வேர்மேல் தலைவைத்து மெல்லுடலை நீட்டி
நீர்க்கெண்டை நோக்கி விழிக்கெண்டை பாயக்
கிடக்கின்றாள். கார்காணாத் தோகை கிடப்பதைப்போல்!
கண்ணைத் திறக்காது கல்லிற் செதுக்கிவைத்த
வண்ணச் சிலைபோல் என் வாழ்வரசி மரத்தடியில்
எண்ணம் எழுந்தோட விழியேங்க நறுஞ்சாந்துக்
கிண்ணம் கிடப்பதைப் போல் கிடக்கின்றாள்..."[13]

* * *

கிராமியக் காதலைப் படம் பிடித்துக் காட்டுவதிலும் வல்லவராகத் திகழ்கிறார், வாணிதாசன். அவர் வாழ்ந்தது சேலியமேடு என்னும் ஒரு குக்கிராமத்தில் தானே! கிராம மக்களின் இயல்பான நடைமுறை வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி, தம் மனத்தில் நிரந்தர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகப் பதியவைத்துக் கொண்டவராயிற்றே அவர். அதன் வெளிப்பாடு, அவர் கவிதையிலும் தெரியத்தானே செய்யும்? அவர் தீட்டிக் காட்டியுள்ள ஓர் அற்புதமான காதல் ஓவியத்தைக் காண்போமா!

அதோ நாற்று நடும் கறுப்பி! காற்றிலே பறக்கும் உடையை இறுக்கிக் கட்டுகிறாள்! நெற்பயிரைக் கையில் எடுக்கிறாள்! சேற்றிலே புதைந்த அடியைப் பெயர்த்து. நாற்றை நடுகிறாள். நடும்போதே தெம்மாங்கு தீஞ்சுவையைப் பாய்ச்சுகிறாள். அப்போது அவள் தோற்றம்! அடடா! காற்றில் குலையும் தலையழகு; கட்டான உடல்; கருநாவல் நிறம்; இத்தகு கோல அழகினைப் பருகிக் களிக்கின்றன, குப்பன் என்னும் இளைஞனின் இரு கண்கள். எப்படி? வெயிலில் திரியும் மான் ஒன்று, ஊற்று நீரைக் கண்டால் விடுமா? உடனே ஓடிச்சென்று உண்ணு மல்லவா? அதைப்போல அவனது இரு கண்களும் அவள் எழிலைக் கண்டு, அல்ல உண்டு களிக்கின்றனவாம்.

வேலை முடிந்து அவள் வரட்டும் எனச் சாலையில் காத்துக் கொண்டிருக்கிறான் குப்பன். அவன் உள்ளமோ காதல் நோயால் தவியாய்த் தவிக்கிறது. அவள் அழகுருவோ, அந்நோயை மேலும் அதிகப்படுத்துகிறது. சேலையுள் விம்மித் தோன்றும் மாதுளை போன்ற அவள் தோள்; செந்நிறம் ஏறிய அந்தப் பல்வரிசை; நூல் போன்ற நுண்ணிய இடை; நெற்றியில் இட்டுள்ள செந்நிறப் பொட்டு; கவர்ந்திழுக்கும் அழகிய காதோலை...இத்தகு அவளது அழகுத் தோற்றம், அவன் உடல் நோயை அதிகரிக்காமல் வேறு என்ன செய்யும்? அப்போது...மாலைக் கதிரவன் மறையத் தொடங்கும் வேளை! அவள் வருவதைப் பார்க்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குள்ளவாத்தைப் பழிக்கின்ற கோல நடையோடு அல்லவா வருகின்றாள்? அருகில் செல்கின்றான்; 'சற்று நில்' என்கின்றான்; தன் காதல் விண்ணப்பத்தை அவளிடம் சமர்ப்பித்திடத் தயாராகின்றான். அக்காதல் ஓவியம் இதோ:

"காற்றில் பறக்கும் உடையிறுக்கி—அந்தக்
கறுப்பி எடுத்தனள் நெற்பயிரை;
சேற்றில் புதைந்த அடிபெயர்த்தாள்—தமிழ்த்
தீஞ்சுவை பாய்ச்சினள்; நாற்று நட்டாள்
காற்றில் குலையும் தலையழகும்—அவள்
கட்டுடல் நாவல் கருநிறமும்
ஊற்றுநீர் கண்ட வெயில் மான்போல்—குப்பன்
உண்டுநின் றான்அவன் கண்ணிரண்டால்!
சேலையுள் விம்மிடு மாதுளைத்தோள்—அவள்
செந்நிறம் ஏறிய பல் வரிசை
நூலிடை, செம்பொட்டுக், காதோலை—உடல்
நோய் செய்யச் சாலையில் காத்திருந்தான்;
மாலைக் கதிரொளி மங்க மங்கக்—குள்ள
வாத்தைப் பழித்தவள் வந்து சேர்ந்தாள்!
'வேலை முடிந்ததா? சற்றுநின்றே—என்றன்
விண்ணப்பம் கோடி!' என்றுரைத்தான்!"[14]

பாரதிதாசன் செல்வாக்கு

கவிஞர் வாணிதாசன் கவிதைகளில் பாவேந்தர் பாரதிதாசனின் செல்வாக்கு மிகுதியாக இருப்பதைக் காணலாம். பாரதிதாசன் என்னும் ஆலமர நிழலின்கீழ் சிக்கிய ஒரு செடியாகவே கவிஞர் வாணிதாசனைச் சிலர் கருதுவர். சிக்கிய செடி அன்று; செழித்துத் தழைத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செடி என்பதைக் கவிஞர் வாணிதாசனின் கவியாற்றலை உணர்ந்தவர்கள் மட்டுமே அறிய இயலும். பாரதிதாசன் பாதையில் வெற்றி நடைபோடும் முன்னோடிக் கவிஞராகத் திகழ்பவரே, கவிஞரேறு வாணிதாசன் ஆவார்.

"தமிழ்நாட்டுத் தாகூர் வாணிதாசனார்"[15] எனப் போற்றியுள்ளார் தமிழ்ப் பெரியவர் மயிலை சிவமுத்து. "திரு. வாணிதாசர் ஒரு பெரும் உலகக் கவிஞர் ஆதல் வேண்டும். கவிஞர் வாணிதாசன் கவிதைகளுக்கென்று, தமிழ் இலக்கிய உலகில் ஒரு தனி இடம் என்றும் இருந்தே தீரும்"[16] எனப் புகழ்மாலை சூட்டுகின்றார் தமிழ்த் தென்றல் திரு. வி. க.

இலட்சியக் கவிஞர் வாணிதாசன்

தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சூறாவளித் தமிழகத்தில் சுழன்றடித்த காலத்தைப் படம் பிடித்துக் காட்டுவதில் புரட்சிக் கவிஞருக்குத் துணையாக இருந்தவர், இப் புதுமைக் கவிஞர் ஆவார். அறிஞர் அண்ணா காட்டிய மறுமலர்ச்சிப் பாதையில் வெற்றி நடை போட்ட இலட்சியக் கவிஞராகவும் அவர் திகழ்கின்றார். தமிழ்ப் பற்று, தன்மான இயக்கப் பற்றுக் கொண்டவர்; பொதுவுடைமைப் பற்று மிக்கவர் அவராவார். காலத்திற்கு ஏற்றாற்போல் கோலத்தை மாற்றும் குறிக்கோள் இல்லாக் கவிஞராக அவர் வாழ்ந்ததில்லை.

"கோடி கொடுப்பினும் கொள்கையிற் கோடேல்"[17]

என்னும் கொள்கை வழி நின்ற கொள்கைக் கவிஞர் அவர் ஆவார். எனவே இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கிய வரலாற்றில், 'பாரதிதாசன் வழிவந்த ஓர் இலட்சியக் கவிஞர்' என்ற சிறப்பிடம், கவிஞரேறு வாணிதாசனுக்கு என்றும் உண்டு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

குறிப்புகள் :

1. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 66
2. ,, கொடி முல்லை, ப. 11
3.
4. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 4
5. ,, ,, ப. 98, பா. 10
6. ,, பாட்டரங்கப் பாடல்கள், ப. 4
7. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி ப. 128
8. ,, எழிலோவியம், ப. 28
9. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 3
10. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 3, வ. 69
11. ,, கவிதைகள், முதல் தொகுதி, ப. 15
12. ,, ,, ப. 57
13. ,, இன்ப இலக்கியம் ப. 30
14. ,, கவிதைகள், முதல் தொகுதி ப. 65
15. மயிலை சிவமுத்து, 'எழிலோவியம்' நூலுக்கு வழங்கிய அணிந்துரை
16. திரு.வி.க. 'எழிலோவியம்' நூலுக்கு வழங்கிய முன்னுரை
17. வாணிதாசன் 'புதிய கொன்றை வேய்ந்தோன்' சிரித்த நுணா, ப. 21

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு 1

Forwarded free of cost and
with the Compliments of the
Dept. of Education, Govt. of India,
New Delhi.

1. வாணிதாசன் வாழ்க்கைக் குறிப்புகள்

இயற்பெயர் : எத்திராசலு என்ற அரங்கசாமி

புனை பெயர் : ரமி. வாணிதாசன்

தந்தையார் : அரங்க. திருக்காமு

தாயார் : துளசி அம்மாள்

பிறந்த ஊர் : வில்லியனூர், புதுவை மாநிலம்

வாழ்ந்த ஊர் : சேலியமேடு, புதுவை மாநிலம்

தங்கை : ஜெயா என்ற ஆண்டாள்

தம்பியர் : சௌந்திரராசலு, தேவிதாசன், கல்லாடன்

மனைவி : ஆதிலட்சுமி அம்மாள்

மக்கள் : மாதரி, ஐயை, எழிலி, முல்லை, இளவெயினி, நக்கீரன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருங்கிள்ளி

தமிழாசிரியர்கள் : பாரதிதாசன், முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, எல்லப்ப வாத்தியார்

பிரஞ்சுமொழி ஆசிரியர் : சிமோனல்

அறிந்த மொழிகள் : தமிழ், தெலுங்கு, பிரஞ்சு, ஆங்கிலம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1915 : சூலைத்திங்கள் 22-ஆம் நாள்-கவிஞரின் பிறப்பு.

1928 : E.S.L.C போன்ற 'செர்த்தி பிகா' என்ற பொதுத் தேர்வில் முதலாவதாக வெற்றி.

1932 : 'Certificat Etude Primaire Elemantair Francaise' என்ற பிரஞ்சுத் தேர்வில் வெற்றி. புதுவை கல்வே கல்லூரியில் சேர்ந்து படித்தல்.

1933 : புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இல்லத்தில் அவரிடம் தனியாகத் தமிழ்ப் பாடங்களைக் கற்றுக்கொள்ளல்.

1934 : B.I என்னும் தமிழ்—'பிரவே' தேர்வில் தேர்ச்சி

1935 : திருமணம் (வயது இருபது) ஆதிலட்சுமியை மணத்தல்.

1937 : சனவரித் திங்கள் 15-ஆம் நாள்! தற்காலிகத் தமிழாசிரியராக உழவர்கரை பேட்டில் பணியைத் தொடங்குதல். (அப்பணியைக் கவிஞருக்கு வாங்கிக் கொடுத்தவர் முன்னாள் புதுவை நகர மன்றத் தலைவர் மறைந்த இரத்தினவேலுப்பிள்ளை என்பவர்.)

1938 : 'மேதாவி' என்னும் புனைபெயரில் மர்ம நாவல்கள் எழுதி வந்த கோ.த. சண்முகசுந்தரத்தை ஆசிரியராகக் கொண்டு, நாம் தமிழர் இயக்கத் தலைவர் திரு. சி பா. ஆதித்தனாரால் நடத்தப் பெற்ற 'தமிழன்' இதழில் (மதுரைப் பதிப்பு) 'ரமி' என்னும் புனைபெயரில் கவிஞரின் 'பாரதி நாள்' என்னும் முதற்பாடல் வெளிவரல். 'தமிழன்' ஆசிரியரின் விருப்பத்திற்கிணங்க 'வாணிதாசன்' என்னும் புனைபெயரில் எழுதத் தொடங்குதல்.

1940 : B.T.க்குச் சமமான C.A.P. ஆசிரியப் பயிற்சித் தேர்வில் வெற்றி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1942 : ரெட்டியார் பாளையத்தில் ஆசிரியப் பணி. பாரதிதாசனோடு நெருங்கிய தொடர்பு—கவிதைகளைத் திருத்தி வாங்குதல்—திருமண நிகழ்ச்சிகளுக்குப் புரட்சிக் கவிஞருடன் சென்று வாழ்த்துதல்.

1944 : காரைக்காலுக்கு மாற்றப்படல். அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' இதழின் முகப்பட்டையில் 'விதவைக்கொரு செய்தி' என்னும் கவிஞரின் கவிதை வெளி வரல். அண்ணாவின் பாராட்டுக் கடிதம் கிடைக்கப் பெறல்.

1945 : பாகூர் பாடசாலைக்கு மாற்றப்படல்.

1948 : தமிழில் 'வித்துவான்' பட்டம் பெறுதல். அதனால் ரூ.10 ஊதிய உயர்வு கிடைத்தல். புதுவை கல்வே கல்லூரிக்குத் தமிழ்ப் பேராசிரியராக மாற்றப்படல்.

1949 : புதுக்கோட்டைச் செந்தமிழ்ப் பதிப்பகத்தார் மூலம் கவிஞரின் முதற்கவிதை நூல் வெளிவரல்.

1950 : மே திங்கள் 28ஆம் நாள்! பெத்தாம்பாளையம் பழனிசாமியின் முயற்சியால் கோயமுத்தூரில் நடைபெற்ற அறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தர பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கலைஞர் மு. கருணாநிதி, நாவலர் இரா. நெடுஞ்செழியன் முதலானோர் பங்கேற்ற—"முத்தமிழ்" மாநாட்டில் கலந்து கொள்ளல். மூன்றாம் நாள், கவியரங்க நிகழ்ச்சியில் கவிதை பாடி வெள்ளிக்கிண்ணம் பரிசு பெறல்.

1950 : சென்னைத் தொடர்பு ஏற்படல். சென்னை மாணவர் மன்ற நிறுவனர் தமிழ்த் தாத்தா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மயிலை சிவ. முத்துவின் அன்பைப் பெறல். புலவர் தா. அழகுவேலன், புலவர் நா. அறிவழகன், செந்நீர்க் குப்பம் செங்கல்வ ராயன் ஆகியோரின் நட்புக்குப் பாத்திரமாதல்.

1951 : சென்னை செல்வ நிலையத்தார் கவிஞரின் 'பெரிய இடத்துச் செய்தி' என்னும் மொழி பெயர்ப்புச் சிறுகதையை வெளியிடல்.

1952 : 'வாழ்க்கை' மே இதழில் 'பட்டிக்காட்டுப் பெண்' என்னும் மொழி பெயர்ப்புத் தொடர் கதை வெளிவரல்.

1954 : பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் 'Cherlier D Ordre be L' etoilo Da'n Jovan' என்னும் சிறப்பு விருது அளித்தல்.

1955 : 'கலை மன்றம்' ஏப்ரல் இதழில் 'காதல் எங்கே?. என்னும் மொழிபெயர்ப்பு நாடகம் வெளிவரல்'

1956 : திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டைக் காண சிங்கப்பூர் 'தமிழ் முரசு' இதழின் எழுத்தாளர் பொந்தியான் வாணிநேசன் என்பாரோடு செல்லல். அது போழ்து திருச்சி மலைக்கோட்டை, திருவரங்கம் கோயில் ஆகியவற்றை அவரோடு சென்று பார்வையிடல். லக்னோ 'நேஷனல் ஹெரால்டு, ஆங்கில இதழில் கவிஞரைப்பற்றிய 'வாணி தாசன் ஒரு புரட்சிக் கவிஞர்' என்னும் கட்டுரை வெளிவரல்.

1964 : சென்னை மாணவர் மன்றத்தின் புதுவை மாநிலச் சிறப்பு உறுப்பினராக இடம் பெறல். 'நித்திலக் குவியல்' மே இதழில் கவிஞரின் 'பாவேந்தர் பாரதிதாசன் வாழ்க்கைச் சிறு குறிப்பு' என்னும் கட்டுரை இடம் பெறல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1965 : சூன் திங்கள் 20ஆம் நாள் 'தமிழ் முரசு' (சிங்கப்பூர்) இதழில் 'கவிஞர் உலகில் ஒருவர்' என்னும் கவிஞரைப் பற்றிய கட்டுரை கவிஞரில் வாழ்க்கை வரலாற்றுடன் இடம் பெறல்.

1968 ; மார்ச்சுத் திங்கள் 10ஆம் நாள்; 'தமிழ் மலர்' (மலேசியா) இதழில் 'கவிஞர் நெஞ்சம்—1'' என்னும் தலைப்பில் கவிஞரைப் பற்றிய கட்டுரை இடம் பெறல்.

1969 : கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் 46 ஆவது அகவையையொட்டி, ''கலைஞர் நாற்பத்தாறு'' என்னும் 'வெண்பாமாலை சூட்டி மகிழ்ந்தது. (2-11-89)

1971 : தமிழாசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறுதல்.

1972 : சூன் திங்கள் 18ஆம் நாள்; தென்னார்க்காடு மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றம், புதுவை மாநகரில் கவிஞருக்குப் பாராட்டு விழா எடுத்தது. பொன்னாடை போர்த்தப் பெற்றது; மலர்க்கிரீடம் சூட்டப் பெற்றது; பொன் மோதிரம் பரிசாகக் கொடுக்கப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டத் தமிழாசிரியர் கழகத் தலைவர் புலவர் ப. அரங்கநாதம் பிள்ளை அவர்களின் மூலம் 'கவிஞர்'ரேறு என்னும் பட்டமும் வழங்கப்பட்டது.

1973 : மே திங்கள் 5ஆம் நாள்! புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் புதுவை நகர மன்றக் கட்டடத்தில் கவிஞருக்குப் பாராட்டு விழா நடத்தப் பெற்றது- 'வெள்ளிக் கேடயம்' பரிசு அளிக்கப் பெற்றது. 'பாவலர் மணி' என்னும் பட்டமும் வழங்கப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1973 : சூலைத் திங்கள் 22ஆம் நாள்! கவிஞரின் 59-ஆவது பிறந்த நாளையொட்டி "கவிதை" ஏட்டின் சார்பில் தன்னைக் காண வந்த கவிஞர் க. பொ. இளம்வழுதிக்குப் பேட்டி அளித்தல்.

ஆகஸ்ட் முதல் நாள் 'கவிதை' ஏட்டின் சார்பின் 'கவிஞரேறு வாணிதாசன் சிறப்பு மலர்' வெளிவரல்.

1974 : ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாள்! மாரடைப்பால் இயற்கை எய்தல். உவமைக் கவிஞர் சுரதா. உள்ளிட்ட பலர் சேலியமேட்டிற்கு வருகை தந்து கவிஞருக்கு இறுதி அஞ்சலி செலுத்துதல் 8ஆம் நாள் 'முரசொலி' நாளிதழில் கவிஞரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கவிதாஞ்சலி இடம் பெறுதல். 18 ஆம் நாள் 'காஞ்சி' இதழின் தலையங்கப் பகுதியில் கவிஞரின் நினைவாஞ்சலி இடம் பெறல்.

1975 : கவிஞரின் 'பாட்டரங்கப் பாடல்கள்' என்னும் கவிதைத் தொகுதிக்குத் தமிழக அரசு—தமிழ் வளர்ச்சி மன்றத்தின் சார்பில் முதற்பரிசு ரூ. 2,000 வழங்கப்படல்.

1978 : ஆகஸ்ட் 26ஆம் நாள் சேலியமேட்டில் பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியன் தலைமையில் 'கவிஞரேறு வாணிதாசன் இளைஞர் மன்றத் திறப்புவிழா' நடைபெறுதல். அவ்விழாவைத் தொடங்கி வைத்து உரை நிகழ்த்திய புதுவை மாநில முதல்வர், சேலிய மேட்டிலுள்ள அரசினர் பள்ளிக்கு வாணிதாசனாரின் பெயர் சூட்டப்படும் என அறிவித்தல்.

1979 : தமிழக அரசின் 'பாவேந்தர் விருது'ம், ரூ. 10,000மும் கவிஞர்க்கு (குடும்பத்தாருக்கு) வழங்கப்படல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. வாணிதாசன் கையாண்டுள்ள பாவும் பாவினங்களும்

ஆசிரியப்பா : நேரிசை ஆசிரியப்பா.
நிலைமண்டில ஆசிரியப்பா.

வெண்பா : குறள் வெண்பா.
நேரிசை வெண்பா.
பஃறொடை வெண்பா.
இன்னிசைக் கலிவெண்பா.
நேரிசைக் கலிவெண்பா.

கலிப்பா : கொச்சகக் கலிப்பா.
பஃறாழிசைக் கொச்சகக் கலிவெண்பா.
வெண் கலிப்பா.

விருத்தம் : அறுசீர் ஆசிரிய விருத்தம்.
எழுசீர் ஆசிரிய விருத்தம்.
எண்சீர் ஆசிரிய விருத்தம்.
கலிவிருத்தம்.

தாழிசை : ஆசிரியத் தாழிசை
கலித் தாழிசை
வஞ்சித் தாழிசை

துறை : குறள் வெண் செந்துறை.
கலித்துறை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டுப் புறப்		தாலாட்டு கும்மி.
பாவடிவம்	:	சமனிலைச் சிந்து.
		வியனிலைச் சிந்து.
		காவடிச் சிந்து.
		தென்பாங்கு.
		கண்ணிகள்.
மற்றும்	:	இசைப்பாடல் (பண்ணத்தி)
		ஒலி நோக்குப் பாடல்.
		புதிய ஆத்திசூடி
		புதிய கொன்றை வேய்ந்தோன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. அரசுப் பரிசும் பாவேந்தர் விருதும்

தமிழ் நாடு அரசு
தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்

சான்றிதழ்

1971, 1972 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப் பெற்ற நூல்களில் கவிதை என்ற தலைப்பில்—பாட்டரங்கப் பாடல்கள்—என்னும் நூல்—முதற்—பரிசுக்குரியதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியர் கவிஞர் வரணிதாசன்

அவர்களைப் பாராட்டி ரூபாய் இரண்டாயிரம்—பரிசாக அளிப்பதோடு இச்சான்றிதழும் வழங்கப்படுகிறது.

(ஒப்பம்) நெடுஞ்செழியன்
துணைத் தலைவர்
கல்வி அமைச்சர்

(ஒப்பம்) மு. கருணாநிதி
தலைவர்
முதலமைச்சர்

தமிழ்வளர்ச்சி மன்றம்
சென்னை
நாள் : 21-11.-1975

பாவேந்தர் பாரதிதாசன் விருது

29—4—1979

அமரர் கவிஞர் வாணிதாசன் அவர்கட்கு இவ்வாண்டுக்குரிய பாவேந்தர் பாரதிதாசன் விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறோம்

கையொப்பம்
இராம. வீரப்பன்
29-4-79

செய்தி அறநிலையத்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு
சென்னை

கவிஞரேறு வாணிதாசன் நினைவு மலர், 10; 1-9-1972.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. கவிஞரின் கையெழுத்து

வாணிதாசன்

புரட்சியகம் - சேலியமேடு - கடலூர் என். டி.

பேரன்புடையீர்,

வணக்கம். வணக்கம் பல

தங்களின் விருப்பப்படியே என் கவிதை தமிழ் வாழ்க என்ற தலைப்பில், அன்னாய் வாழ்க! (12. வரிகளும்) வையத்திலே தமிழ் வழியே வாழி! (8 வரிகளும்) பாடல்களிலிருந்து எடுத்து வெளியிட்டுக் கொள்ள இதன் வாயிலாக இசைவு தருகின்றேன்.

அன்பன்,

வாணிதாசன்

19. 6. 64

* டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர்கள், கவிஞரின் பாடலைப் பாடநூல்களில் பயன்படுத்திக்கொள்ள அனுமதி கேட்டு எழுதிய மடலுக்குக் கவிஞர் விடுத்த பதில்.

உதவி : பேராசிரியர் மா. ரா. அரசு, எம்.ஏ.,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. இதழ்களின் மடியில் :

தமிழ் முரசு ஞாயிற்றுக்கிழமை 20-6-1965

[illegible]

[illegible]

கவிஞர் உலகில் ஒருவர்

வாணிநேசன் பொந்தியான்.

[illegible]

[illegible]

இல்லத்தில் இருவன்னாட் கோடு!

---

* 'தமிழ் முரசு' (சிங்கப்பூர் இதழ்), 20-6-1965.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நாரிட்ட திரையாகும் தலைமீது விரிவான்!
தழைமரத்தில் பகலெல்லாம் ஒளிந்திருந்த பறவை
கூரிட்ட வாய்திறந்து குரல்கூட்டிக் குளிர்நீர்க்
குளம் நோக்கி இணைஇணையாய் இறகடித்துக் குறுகும்!
வேரிட்ட குன்றுபலா வெடித்திட்ட வகைபோல்
விண்மீன்கள் கருவானில் அங்குமிங்கும் கிளம்பும்!
ஊரிட்ட இருள்கிழிக்கும் விளக்கெல்லாம் அறிஞர்
உரையொக்கும்! ஊரடங்கும்; ஓடிவரும் இரவே!

மலையருவி முழவார்க்கும்! வட்டமிடும் வௌவால்!
வாயிலிலே மணம்பரப்பி வந்தடையும் குளிர்கால்!
இலையுதிரும்; கொடிமுல்லை நறும்பூக்கள் மலரும்!
இல்லத்து நீள்வாழை படபடக்கும்! அழைக்கும்!
குலையுதிரும் முதிர்ந்தபழம்; குளம்கூம்பும் மலர்கள்!
கொட்டகையில் கால்நீட்டி வைக்கோலை எருமை
தலைநீட்டி இழுக்கின்ற மெல்லோசை இரவில்
தனிஇனிமை! தனிஇனிமை! தடித்துவரும் இரவே!

கடைந்தெடுத்த தந்தக்கால் கட்டிலின்மேல் அணையில்
கட்டவிழ முல்லைமலர்ப் பாயலின்மேற் பரப்பில்
அடைந்திருந்தே உலைமறந்தே அன்பாற்றில் மிதந்தே
அகமகிழ்ந்த காதலர்கள் கண்டிருப்பாய் இரவே!
உடைந்தமனத் துயருற்றோர் உறக்கமின்றிப் புரள
ஊமையைப்போல் இருப்பாயோ? விளக்குவையோ
அடைஇருளே நீஇன்றேல் உயிரினங்கள் அமைதி
அடையாதே நல்வாழ்வும் அடையாஇவ் வுலகே!

கோட்டான்கள் உன்படையோ? குளிர்காற்று கொடியோ?
குன்றங்கள் உன்னரசின் நீண்டநிலப் பரப்போ?
காட்டாறு மும்முரசோ? கருவான உடுக்கள்
கருவூலப் பொன்னுமோ? முகிழ்த்துவரும் நிலவு
நீட்டரசு கூர்வாளோ? வெள்ளிமுடி மணியோ?
செங்கோலோ முல்லைமலர்! செவ்வல்லி குடையோ?
நாட்டரசும் உன்னரசின் கீழ்ப்பட்ட அரசே!
நல்லிரவே! நீவாழி! நீவாழி நிலைத்தே!!

---

* திராவிடநாடு, பொங்கல் மலர் 14-1-63.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுமைத் தீ பரவட்டும்

கவிஞர் வாணிதாசன்

கார்பொய்த்த காலத்தும் நீர் பொய்க்காநாடு!
கல் துளைத்துக் கலைவளர்த்து நெல்விளைத்த நாடு!
கூர்பொய்த்த வேலெடுத்தும் பகைவெட்டிச் சாய்த்த
குன்றுநிகர் தோள்மறவர் வாழ்ந்ததிரு நாடு!
சீர்பொய்த்துப் போனதுவே! அந்தந்தோ அந்தோ!
செந்தமிழர் நிலையிதுவா? இந்நிலையை மாற்றப்
பேர்பொய்த்துப் போகாமுன் எழுந்தோடி வாரீர்!
பிற்போக்கு நிலைமாறப் பரவட்டும் தீயே!

முல்லைக்குத் தேர் ஈந்தான்; முன்பாடி வந்த
முத்தமிழ்ப்பா வாணர்க்குத் தன் நாட்டை ஈந்தான்!
இல்லையென்ற சொல்லுக்கே இடமில்லை அந்நாள்!
இன்மருந்தும் அயலவர்க்குப் பங்கிட்டே உண்டான்!
பல்வளமும் நிறைந்திருந்தும் தாயகமே! மக்கள்
பசிநோயால் வாடுவதோ? இந்நிலையை மாற்ற
எல்லோரும் புறப்படுவோம் புத்துலகம் காண!
எங்கெங்கும் பரவட்டும்! பரவட்டும் தீயே!

படைபெருக்கி வளம்பெருக்கிப் பலதொழிலும் கண்டு,
பண்போடு கலைவளர்த்து வெற்றிமுரசார்த்துக் கடல்
கடந்து புகழ்நட்டோம் முன்நாளில்; அந்தக்
கதையெல்லாம் வெறுங்கதையா? கடாரம்சொல் லாதோ?

'முரசொலி' பொங்கல் மலர். 1965.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞரேறு வாணிதாசன் தீட்டிய

6. "கலைஞர் நாற்பத்தாறு"*

சீரார் திருக்குவளைக் கண்மணியே! செந்தமிழர்
ஊராள வந்த ஒளிக்கதிரே!—பேரார்
கருணா நிதியே! கலைஞனே! மூன்று
முரசொடு வாழ்க முனைந்து! 1

கத்து கடல்சூழ் கவின்சேர் திருக்குவளை
முத்துவேல் தந்த முதலமைச்சே!—புத்தம்
புதுமை அரசைத் தமிழரசைப் போற்றி
முதுகுரவர் வாழ்த்த முனை! 2

அஞ்சுகத்தாய் பெற்ற அறிவார் முதலமைச்சே!
செஞ்சொற் கலைஞ! திருநாடு—விஞ்சும்நல்
அஞ்சாமை கேள்வி அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமல் வாழ்க இனிது! 3

துள்ளித் திரிகின்ற காலம் துரைத்தனத்தார்
பள்ளிப் படிப்பின்மேல் பற்றொதுக்கி—உள்ளத்தில்
தாயகத்தின் மேன்மை தனைக்கொண்டாய்! வாழியவே!
காய்கதிர்நீ என்றென்றும் காண்! 4

ஏரோட்டு நல்லுழவர் ஏனல் விளைக்கின்ற
ஈரோட்டுப் பள்ளி இருந்தாய்ந்து—சீர்நட்ட
அண்ணா வழிவந்த ஆன்ற முதலமைச்சே!
பண்ணோடு வாழ்க படர்ந்து 5

---

* கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நாற்பத்தாறாவது பிறந்தநாள் வாழ்த்தாகப் பாடியவை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அண்ணா வழிவந்த ஆரூர் எழுகதிரே!
பண்ணாகும் செந்தமிழ்போல் பாராண்டு—மண்ணில்
இளமையோ டின்றுபோல் என்றென்றும் நாட்டில்
வளமைபெருக்கியே வாழ்! 6

புத்தம் புதுமை பொலிகின்ற நற்புதுவைச்
சொத்தாய் உனக்களித்த சொத்துண்டாம்!—பித்தாய்!
அதுநுமை கண்டிருந்த புன்னாள் அறிவேன்!
புதுப்புகழில் வாழ்க பொலிந்து! 7

கல்லக் குடியில் கருத்தில்லார் கண்திறக்க
மல்லாடி வெற்றி மலைந்தோனே!—சொல்லாலே
கேட்போர்ப் பிணிக்கும் கிளைஞ! பழந்தமிழ்ப்
பாட்டாய்ப் பயன்விளைத்து வாழ்! 8

கல்லடியும் பட்டாய்! கருத்தில்லார் வாய்வந்த
சொல்லடியும் பட்டாய்! திருக்குவளை—நல்லாய்!
கலைஞனே! காக்கும் முதலமைச்சே! என்றும்
கலைபோல் வாழ்க கனிந்து! 9

கதையெழுதி மக்கள் கறையகல நல்ல
விதைவித்தி வாழும் விறலோன்!—புதைசேற்றைத்
தன்னடிமை யாக்கும் தமிழர் முதலமைச்சன்!
என்றென்றும் வாழ்க இனிது! 10

தோட்டப் புறம்புகுந்து தூய தமிழ்மொழியை
வீட்டிருந்தே ஓட்ட விரைந்துவந்த—கூட்டுமொழி
இந்திக்குச் செந்தீயை இட்ட கலைஞனை நாம்
வந்திப்போம்! வாழ்க மகிழ்ந்து! 11

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டில் நிலைத்திருந்த நாற்சாதி நீள் கொடுமை
கேட்டும்கே ளாதிருந்த கீழோரின்—வீட்டில்
விளக்கேற்றி வைத்தாய்! விரிவுரை தந்தாய்!
வளம்பெற்று வாழ்க மகிழ்ந்து! 12

நாட்டு மலர்தவழும் நற்காற்றே! நற்றமிழர்
பாட்டுப் பயிலும்நற் பாவலனே!—ஊட்டி
வளர்த்த தமிழகத்தை வாழ்வித்தாய்! வாழ்க!
உளத்தில் நிறைந்தாய் உணர்! 13

கூத்தளித்துக் கொள்கைக் குறிவிளக்கி என்றென்றும்
நாத்தழும் பேறியசொல் நாவளித்துச்—சீர்த்த
மதிவிளக்கி இங்குள்ளோர் வாழ்க்கை வளத்தைப்
புதுப்பித்தாய்! வாழ்க பொலிந்து! 14

பெண்டுபிள்ளை நோயுறினும் பெற்றெடுத்த தாய் நாட்டின்
தொண்டு பெரிதெண்ணும் தூயோனே!—மண்டு
தமிழ்ப்பகையை வீழ்த்துநம் தாயின் மொழியே
அமிழ்தினும் மேலாம் அறி! 15

மற்போருக் கஞ்சான் வாழும் திருநாட்டில்
சொற்போருக் கஞ்சான் திருக்குவளை—விற்போர்
மறவன் கருணா நிதியாம்! வளமை
நிறைவோடு வாழ்க நிலைத்து! 16

இந்த உடலும் இதனின் இடையென்றும்
வந்தியக்கும் மூச்சும் வளமார்நம்—சொந்தத்
திருநாட்டை வாழ்விக்கச் செய்வதுவாம்; வாழி!
கருணா நிதியே கடன்! 17

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உளம் நிறைந்த செந்தமிழர் ஒல்லும் வளத்தை
இளங்கோ இசைத்த சிலம்பைக்—களங்கமறக்
கற்றதனால் அன்றோ, கருணா நிதிவாழி!
பெற்றெடுத்தாய் பூம்புகார்ப் பேறு! 18

சென்னைத் துறைமுகத்துச் சீரில்லாப் புற்றரையில்
முன்னை அரசாண்ட மூவேந்தர்—அன்னைத்
திருநாட்டை ஆக்கித் திசைக்கறிவு தந்தோன்
கருணா நிதிவாழி காண்; 19

அண்ணாவின் தம்பியரில் ஆன்ற முதல்தம்பி!
கண்ணே! கருணா நிதியே! இம்!—மண்ணாள்
முதலமைச்சே! வாழிநீ! முத்தமிழ் தீமை
எதுவரினும் அஞ்சா தெதிர்! 20

ஓடிப் பொருள் குவிக்கும் ஊர்தியெலாம் ஆட்சிக்குத்
தேடிப் பொருள் குவிக்கச் செய்தவன்யார்?—வாடி
வதங்கிய மக்கள் வயிறு நிறைய
உதவும் கலைஞரென ஓது! 21

புன்செய்ப் புலத்தின் இறையிலி செய்தோன்; என்
நெஞ்சில் நிலைத்த மறவனாம்!—கொஞ்சு
தமிழ்கூறு நம்அண்ணாச் சான்றோனின் தம்பி
அமிழ்தின் இனியவ னாம்! 22

மண்ணாள் முதலமைச்சன் வாய்திறந்தால் போதுமென
எண்ணிக் கிடப்போரை எண்ணுவதோ?—கண்ணின்
மணியாம் கருணா நிதிஎன்போன் காக்கும்
அணியாவான் நாட்டிற் கவன்! 23

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நொதுமல் பகையென்று நோக்காது நாட்டில்
பொதுமை முறைசெய்யும் பொற்பன்—இதுநாள்
அரசாள் முதலமைச்சன்! ஆன்ற கலைஞன்!
உரைசாலப் பெற்றான் உணர்! 24

பாடிப் பிழைக்கும் பறவையாம் பாவலர்க்குக்
கூடிப் பிழைக்கக் கொடுப்போனாம்?—ஈடில்
கலைஞன் கருணா நிதியே அமைச்சன்!
பலபெற்று வாழ்க படர்ந்து! 25

கல்லார்க்கும் கற்றோர்க்கும் காயும் கதிர்போல
எல்லார்க்கும் ஈயும் இயல்புடையோன்!—வல்ல
எனக்கேனோ என்னும் இயல்புடையார் வாழ்க்கை
மனக்கவலை மாற்றும் மருந்து! 26

வெள்ளத்தால் பாழ்பட்ட வேற்று நிலத்தார்க்கும்
வள்ளல்போல் வாரி வழங்குவோன்!—வெள்ளம்
குறையாக் குளிர்பொன்னி ஆற்றோன் கலைஞன்
நறைபோல் இனியனாம் நாடு! 27

தழைவற்றிப் பொய்கைத் தடம்வற்றி நாட்டில்
மழைவற்றி வாழ்கின்ற போழ்தும்—கழைச்சுவை
கண்டெடுத்து நல்கும் கருணா நிதியமைச்சன்
உண்டென் றறிவே உணர்! 28

முன்னேற்ற நற்கழகம் இந்நாள் முடிந்ததென
பின்னே முணுமுணுத்த பேதைகளை—இந்நாள்
தலைதாழ்த்தி வாயடைக்க வந்த தமிழ்மகனே
கலைஞன் முதலமைச்சன் காண்! 29

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டி வளர்த்துக் கருத்தில்லார் கைகோத்தே
இட்டு வரும்நல் இயல்புடையோன்—மட்டில்
அகழ்வாரைத் தாங்கும் அறிவுடையோன் என்றும்
புகழோடு வாழ்க பொலிந்து! 30

வேற்றார் நமையடுத்த மாநிலத்து மேலோர்கள்
போற்றிப் புகழும்நற் பொற்புடையோன்—மாற்றார்
மதிக்கும் முதலமைச்சன் மங்காத் தமிழுக்(கு)
உதித்த சுடர் என்(று) உணர்! 31

காட்சிக் கெளியான்; கடுஞ்சொல்லே கற்றறியான்
வீழ்ச்சி அறியாத மேலோனே!—தாழ்ச்சித்
தளைவெட்டி வீழ்த்தித் தமிழகத்தைக் காக்கும்
உளத்தோன் கலைஞன் உணர்! 32

இன்றுள்ள மாணவர்கள் இன்பத் திருநாட்டை
நன்றே நடத்தும் நடைபயிலப்—பொன்றா!
வழிகாட்டும் எங்கள் வளமார் கலைஞன்
விழிநாட்டிற் கென்றே விளிம்பு! 33

தமிழை அரசேற்றித் தக்கோர் வியக்க
நமதரசை ஆளுகின்ற நல்லோன்—நமையெலாம்
ஈன்ற தமிழ்த்தாய் உலகிற்கே ஈன்றளித்த
ஆன்றவிந்த நற்கலைஞன் ஆம்! 34

முரசறைந்து வாழ்த்தி முறைசெய்து காத்தே
அரசாண்டு வாழ்ந்தோர் அரசர்—உரைசால்
கருணா நிதியே! கலைஞனே! வாழும்
தரைபோல வாழ்க தழைத்து! 35

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பார்வாழும் மக்கள் பசிநோய் மருத்துவன்
ஊர்வாழ் அமைச்சன் ஒருவன்காண்—சீரார்
கலைஞன் கருணா நிதியே! என் நெஞ்சில்
நிலைத்திருப்போன் வாழ்க நிலைத்து! 36

கண்ணின் மணியைக் கருணா நிதியைஎம்
அண்ணா வழிவந்த ஆண்மகனைப்—பெண்ணாகி
அஞ்சுகத்தாய் பெற்றாள் அவள் வாழ்க! வாழியவே
செஞ்சொற் கலைஞன் சிறந்து! 37

முத்துவேல் தந்த முனைமழுங்காக் கூர்வேலாம்
இத்தரையான் எங்கள் முதலமைச்சன்—பத்தரை
மாற்றுப் பசும்பொன்னாம்! மக்கள் உளமெல்லாம்
வீற்றிருப்போன் வாழ்க மிகுந்து! 38

அண்ணாவின் பின்னால் அரசியலில் என்றென்றும்
புண்ணும் புரையும் புகுமென்றார்—கண்ணிலெலாம்
மண்வாரிக் கொட்டி வளமார் திருநாட்டை
வண்கதிர்போல் செய்தான் விளம்பு! 39

நாட்டில் முரசொலித்து நற்றமிழர் வாழ்கின்ற
வீட்டுத் திருமகனாய் வீற்றிருப்போன்—ஈட்டு
நனிபுகழ்சேர் நல்லோன் கருணா நிதியே!
பனிமலைபோல் வாழ்கஇப் பார்! 40

வள்ளுவனை ஈன்ற வளமார் தமிழ்நாட்டுப்
பிள்ளைகளில் அண்ணா பெரும்புகழோன் உள்ளம்
இனிக்க அரசாளும் எங்கள் கலைஞன்
தனிப்பிறவி என்றிங்கே சாற்று! 41

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாமணக்கும் செஞ்சொல்லான் நல்லோர் வியக்கின்ற
தேமணக்கும் சங்கச் செழுந்தமிழ்ப்பா—மாமணக்கும்
பூமணத்தை வாரிவரும் புத்தம் புதுத்தென்றல்
காமணக்கும் முக்கனியாம் காண்! 42

பொன்னி வளநாட்டின் பொற்புடையோன்
என்றென்றும்
கன்னித் தமிழ்மொழியின் காப்பாளன்—மின்னி
இடிக்கும் மழையே கலைஞன்! இனியன்!
குடிகாக்கும் செம்மலெனக் கூறு! 43

புன்னைப் பெருங்கானல் பூத்தவழ்ந்த தென்றலாம்
அன்னைத் தமிழரசி அன்புமகன்—இந்நாள்
கலைஞனாய் வந்தோன் கருணா நிதியே!
நிலைபெற்று வாழ்க நிலைத்து! 44

பூதத்துத் தேன்சொரியும் பொன்னி வளநாட்டின்
காதத்தும் வேங்கைக் கடும்புலிகாண்—ஓதுதமிழ்
மாய்க்க நினைப்போர்க்கு! வல்லோர்க்கும்
நல்லோர்க்கும்
வாய்த்த மலையருவி வாழ்த்து! 45

நாற்பாத்தா றாண்டு நலம்போல என்றென்றும்
மேற்போர்த்த வானின் விரிசுடராய்ப்—பாற்குடத்துப்
பேர்பெற்ற வாணிப் பெரும்புலவன் வெண்பாப் போல்
சீர்பெற்று வாழ்க சிறந்து! 46

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரகூர், கவிஞர் அருணகிரி பாடிய

7. "கவிஞர் வாணிதாசன் அகப்பொருட் காரிகை"

கட்டளைக் கலித்துறை

1. கைக்கிளை — காட்சி

திருமிளிர் வாணியின் தாசன் திரண்மணிச் செய்வரையில்
கருமுகி லோங்கக் கவின்பிறை தோன்றக் கருமதவேள்
பொருதிணை வில்தான் பொருந்தவுஞ் செக்கர் பொலிந்தகோங்கின்
இருமுகை கொண்ட வொருகொடி காண்ட லிவைவியப்பே.

2. ஐயம்

மண்ணார் கவிஞருள் மாமணி யேயெனும் வாணிதாசன்
விண்ணார் மலைமிசை மேவுதல் தெய்வ வியன்மகள்கொல்?
பண்ணா ரிசைவல காந்தர்வ தத்தைகொல்? பாருயிர்க்கே
எண்ணான் கறஞ்செ யிறைவிகொல்? ஈங்குற் றிருப்பதுவே.

3. தெளிவு

இலகிய மீபுகழ் வாணிநற் றாசன் எழில்வரையில்
நலமுறு மிம்மின் அடிநிலந் தோய்ந்த, நறுமணஞ்சேர்
திலகமார் வின்னுதல் வேர்த்தவாட் கண்ணிமை செய்துநின்ற
உலகினி லென்பொருட் டேவந் துதித்த வுயர்மகளே.

---

* 18—6—1972 அன்று புதுவையில் நடைபெற்ற கவிஞர் வாணிதாசனார் பாராட்டு விழாவில் படித்தளிக்கப் பெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. குறிப்பறிதல்

அணியும் புகழ்வாணி தாசன் றனக்காம் அணிவரையில்
குணியும் விடமும் படைவா ளதுஞ்செய்
கொடுந்தொழில்கள்
தணியும் நிலையிலா தோங்கியென் உள்ளந் தகர்த்துறுத்தும்
பிணிதந் ததைத்தீர் மருந்துமாங் கண்களின்
பெற்றியென்னே.

5. இயற்கைப் புணர்ச்சி

பொழிலிடை நின்ற வெழின்மிகு மங்கையின்
மயலுறு தலைவன் எழினலம் உரைத்தல்.

மொழிகற்க வந்தன கிள்ளைகள்; கார்நிற மொய்யளிகள்
விழிகற்க வந்தன; வெள்ளனம் யாவும் விளங்குநடை
யெழில்கற்க வந்தன; இன்பாக் கவிஞர் எழில்வரையின்
பொழினிற்கு நின்னெழில் என்கொல்? புகல்வது
பொற்கொடியே.

6. சுவைநலங் கூறல்

கொண்டல் நிகர்த்த கவிவாணி தாசன் குலவரையில்
முண்டகங் குங்குமக் கேழ்மணந் தண்மையும் முக்கனியும்
பண்டுறு நற்றமி ழின்பமுஞ் செந்தேன் பருப்புநெய்யும்;
கண்டினை யுஞ்சேர்த் தாக்கினன் பெண்ணாய்க்
கமலனன்றே.

7. பகற்குறியிடையீடு பாங்கிதலைவன் முற்பகர்தல்

உன்னற் கொணாத வொளிபுகழ் தாசன் உயர்வரைக்கண்
கன்னன் மொழியாள் நின்புயந் தோயக் கருத்திருந்தும்
முன்னை யுயிர்பதி சாரவொட் டாமலம் முன்னுறல்போல்
அன்னை யிடையுற் றனளிதற் கென்செய்வ ளாயிழையே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. கையுறை கொணர்ந்த தலைவனின் பொய்யுரை கண்ட பாங்கி யுரைத்தல்

தீந்தமிழ்ப் பாமறை பெய்வாணி தாசன் செழுமலையின்
சேந்தனைப் போன்றுளீர்! திண்புயஞ் சார்ந்த சிலையுமின்றி
ஏந்திய வேலா யுதமின்றி கான்விலங் கெய்யவென்றுப்
பூந்தழை கொண்டனை நின்மதி யென்கொல் புகலுவதே.

9. தலைவன் பாங்கியொடு கிளத்தல்

குளங்கொண்ட ஆசையி லாழ்த்திக் குழைந்தே குலவியென்றன்
உளங்கொண்டு வந்தா டனக்கொரு கையுறை யொண்டொடியீர்!
அளங்கொண்ட திண்முகை யாட்களித் தியான்வந்த வாறுரைப்பீர்
வளங்கொண்ட நற்கவி செய்வாணி தாசன் வரையிடத்தே.

10. தலைவன் பாங்கிமுன் மடல்திறங் கூறல்

அடலேற னாவும் கவிவாணி தாசன் அணிவரையின்
விடலேற னாமென் உளத்திருப் பாள்தன் விளைந்தவாசைக்
கடலேற லின்றிக் கலங்கித் தவித்தேன் கருவிழியீர்
மடலேற லின்றி வழியிலை என்விதி மாற்றரிதே.

11. தலைவன் முன் பாங்கி யுரைத்தல்

ஒள்ளிய மீபுகழ் நல்வாணி தாசன் உயர்வரையீர்!
கள்ளிய கூந்த லுருமுதல் தீட்டினுங் காரிகையின்
தெள்ளிய கண்டெனுந் தேமொழி, சுற்றுந் திருநெடுங்கண்,
உள்ளிய வஞ்சியை தீட்டுத லெவ்வா றுரைத்தருளே.

12. மடல் விலக்கல் தலைவன் முன் பாங்கி கிளத்தல்

இனிக்கின்ற நற்கவி தாசன் தனக்காம் எழில்வரையின்
சினக்கின்ற வேழம் எதிர்க்கின்ற திண்ணார் திறள்புயத்தீர்
தனக்குன்றந் தாங்கி யொசியும் இடையின் தளிருடலாள்
உனக்கன்றி யார்க்கே உரியவ ளாவள் உணரினியே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13. குறியிடத் துய்த்தல் தலைவி முன் பாங்கி யுரைத்தல்

கனத்துறு கொண்டல் நிகர்த்த கவிஞரின் கார்வரைக்கண்
மனத்துறும் அண்ணல் துணையுடன் சென்றிரு மற்றினிநான்
சினத்துறு வேள்தன் சிலைச்சர மின்றித் திகைத்துநிற்ப
வனத்துறு மாமலர் யாவுங் கொணர்வேன் மதிக்கொடியே.

14. தலைவன் இன்பம் பேறுக்குரைத்தல்

நயமுறு செந்தமிழ்க் கவிஞர் வரைக்கண், நறுங்குவளை
அயில்விழி யாளுடன் ஒன்றுபட் டேய்ந்தே யருமருந்தாம்
எயிலுறு வாயமு துண்டுப் புயந்தழீஇ இன்பமதிற்
பயிறொரு மின்பமிக் கோங்கிப் படர்ந்துப் பரவுவதே.

15. இரவுக்குறி இடையீடு. தலைவி பாங்கியொடு கிளத்தல்

என்னை மறந்திடு நெஞ்சத் தவர்கொலோ? என்னுணின்றே
மன்னுந் தமிழ்ப்புகழ் மல்கும் கவிஞர் மலையிடத்துக்
கன்னல் மொழியாற் கலந்து சுகந்தரு காதலர்தாம்
சின்னஞ் சிறுபிள்ளை யல்லகாண் என்றனின் றீவினையே.

16. வெறி விலக்கல்

கூர்வேல னாஇறைக் காட்டினை வெட்டிக் கொலைபுரியின்
தீர்வாருங் கொல்லோ? திகழ்வாணி தாசன் திரண்மலையின்
ஏர்காவிற் பன்னா ளிணைந்தே மகிழ்ந்த வெழிலுருவத்
தோர்காளை வந்தனன் என்றே யவள்செவிக் கோதுமினே.

17. பாங்கி தலைவற்கு ஓம்படை சாற்றல்

விஞ்சிய நற்புகழ் மேவுங் கவிஞர் வியன்வரையில்
பஞ்சினு மெல்லிய சீறடிப் பாவை பனிமலராள்
அஞ்சுக மென்று மனந்தள ராம லடைக்கலமாய்
நெஞ்சகப் பஞ்சரம் வைத்தருள் செய்வாய் நிலைபெறவே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

18. வரைவு வேண்டல் தலைவன் முன் பாங்கி குறிப்புற வுணர்த்தல்

காமரஞ் செய்யளி யார்ந்த கவிஞரின் காவரையில்
தூமண மேவிய வேங்கை மலர்ந்தே துலங்குமிந்நாள்
காமனை வென்றிடு பேரெழிற் காளையன் கன்னியளை
மாமணஞ் செய்தல் முறைமையா மெங்கள் மரபினர்க்கே.

19. வரையிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல் ஆற்றாத் தலைவி பாங்கியொடு கிளத்தல்

என்றனைப் பித்தளை என்றெணி யன்றோ விருநிலத்தில்
பொன்றனைப் பெற்றிடப் போயினர் ஆயினும்
போர்மதனின்
வென்றியா லென்னுயிர் நீங்கிடின் தாசன் வியன்வரையில்
சென்றவர் வந்துபின் யாருடன் வாழ்வாராம் செப்புகவே.

20. ஏங்கிய தலைவி முன் பாங்கி யுரைத்தல்

மின்னை நிகர்த்து மிளிர்பூங் கொடியே! விளம்புதல்கேள்
என்னை? வருந்துதல் இன்சுவைக் கவிஞர் எழில்வரையில்
பொன்னைக் கொணர்ந்து புகழுறு மங்கலம் பூட்டியென்றும்
உன்னைக் கொளும்பொருட் டன்றோ பிரிந்தனர்
ஒண்டொடியே

21. தலைவன் நெஞ்சொடு புலம்பல்

வேளைப் பொருதுசெஞ் சொல்லார் கவிஞர் வியன்வரையில்
நாளைச் சினந்தெணி நான்வரு வேனென்று நாள்பலவும்
வாளைச் சுழல்விழி வீதியி னோக்கி வரவுபார்க்கும்
யாளைச் சிரிப்பின்நற் பாவையை யென்றுகொல்?
யார்ப்பதுவே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

22. பிரிந்த நாள் தலைவியை நினைத்தனையோவெனும் பாங்கியின் முன்னே தலைவன் பகர்தல்

அறந்திகழ்ந் தோங்கும் அருந்தமிழ் தாசன் அணிவரையில்
உறைந்திருந் தேயென் உளத்திருப் பாளை யொருசிறிதும்.
மறந்திருந் தேனெனி லன்றோ? நினைவேன் மணிக்கதிரின்
நிறந்திகழ் சாயல் மயிலே மடவன நேரிழையே

23. நற்றாயிரங்கல்

பூவிற் பொலியுங் கலைவாணி தாசன் புகழ்வரையில்
தாவித் திரிமா னினங்களே தத்தைகாள்! தையனல்லாள்
காவிற் குடையுஞ் சுனையே! ஏ கண்ணெள்க் காத்திடுமிப்
பாவிக் குரையென என்சொலிச் சென்றாள் பகரெனக்கே,

24. சுரத்திடை வந்தோர் செவிலிக்குரைத்தல்

காயுஞ் சுடர்படா வாறு பிணைக்கே கலையுதவும்
ஆயுந் தமிழ்வாணி தாசன் செழித்த அணிவரைக்குள்
வீயுங் கொடிய சுரந்தனில் விண்ணொளிர் மின்னனைய
தேயுந் துடியிடை யாளுடன் ஓர்துணை சென்றனனே

25. இணைந்த தலைவி மணந்து வாழ்தலை உற்றா ரனைவரும் நற்றாய்க் குரைத்தல்

விண்ணார் புகழ்வாணி தாசன் றனக்காம் வியன்வரையில்
கண்ணா கியமனை யோம்பிப் பிறனில் கருதுறாநல்
திண்ணா ருளத்தனாம் திண்தரு வேய்ந்த செழுங்கொடியாள்
தண்ணா ரறமேவு மில்லற வாழ்விற் றழைத்தனளே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

26. ஓதற் பிரிவை காதலிக்குரைத்தல்

சொல்லார் தமிழிற் றுலங்குங் கவிஞரின் தூவரையில்
எல்லா மிருந்தும் இலக்கண மேவும் இலங்குகல்வி
கல்லார் சிறப்பில ராகக் கழிவரிக் காசினியில்
வில்லார் நறுநுத லாய்கற்று மீள்வேன் விரைவினிலே.

27. கார்காலங்கண்டு சோர்வுறுந் தலைவிக்குப் பாங்கி யுரைத்தல்

வருந்துத லென்கொலோ? வாணியின் தாசன் வரையிடத்தே
திருந்திய நூலைந் திலக்கண மின்னிசைத் தீங்கலையார்
இருந்தமிழ்க் கல்விக் கடனீர் முகந்தே யிருநிலத்திற்
பொருந்திய நற்கவி பெய்தே வருவர்காண் டொற்றொடியே.

28. தலைவன் வருகையை பாங்கி தலைவிக் குரைத்தல்

மாதவஞ் சேர்ந்தன! வாணியின் தாசன் மலையிடத்தே
காதள வோடிய கண்ணினல் லாய்நின் கழித்தழியேல்
காதலர் வந்தார் கடுகிய தேர்மிசைக் காணெனவே
ஊதிய சங்கொலி கேட்டேன் உளமகிழ் ஒண்டொடியே.

29. ஊடல்தீரக்கவிகோடிசெய்வேனென தலைவியின்முன்னே தலைவன் கூறல்

செல்வத் தினிற்செல்வ மாந்தமிழ் தாசன் செழுமலையின்
கல்வித் திறங்காண ஊடினை கொல்லோ? கடிதுகொலும்
வில்லிற் கணையென நோக்கல் தவிர்தி! மிகவிரைந்தே
சொல்லிற் கவிகோடி நின்னூடல் தீர்கெனச் சூட்டுவனே.

30. தலைவியைக் கூடிய தலைவன் மழை வேண்டல்

கண்ணார் தமிழ்நில மீதிற் கருத்துங் கலந்துநின்ற
பண்ணார் மொழியனைச் சேர்ந்தன னெங்கும் பரவியகார்
தண்ணார் மழைமுகி லேவாணி தாசன் தகுகவிபோல்
மண்ணார் உயிர்கள் மகிழ்வுறப் பெய்கவிம் மாநிலத்தே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. கண்ணுறங்கும் கல்லறை



சேலிய மேட்டில் செழுந்தமிழ்த் தேன் சிந்திப்
பாலொழுகப் பாடிவந்த பாவலனைக்—காலமே!
பாவேந்தன் பாசறையில் பாய்ந்தெழுந்த கூர்வேலைச்
சாவேந்த விட்டதேன் சாற்று?
மாணிக்கப் பாட்டெழுதி மாத்தமிழ்த் தாயடிக்கே
காணிக்கை யாய்த்தந்த கவியரசே!—வாணிதாச!
சாகாக் கவிவடித்த சான்றோனே! நீ மாண்டச்
சோகத் தீ! நெஞ்சேந்தும் சூடு!
சங்கப் புலவனுக்குச் சான்றாக வாழ்ந்தவனே!
பொங்கு தமிழ்காத்த போர்வாளே!—மங்கா
இயற்கையெழில் ஏந்தி இனியுன்போல் பாட
இயலுமோ எம்மால் இயம்பு?

—கவிஞர் பல்லவன், திருக்கழுக் குன்றம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9. கண்ணீர் அஞ்சலி*

செய்தியா? செய்'தீ' அன்றே
சிந்தையை எரித்துத் தீய்க்கும்
பொய்யெனப் போயிருந்தால்
புலமையே மகிழ்ச்சி கொள்ளும்!
அய்யகோ! வாணி தாச
அருந்தமிழ்க் குயிலும் எங்கோ
ஒய்யெனப் பறந்த தம்மா!
உயிர்ப்புறா துடிக்கு தம்மா!

பாட்டுக்கு வேந்தன் எங்கள்
பாவேந்தர் முதல்மா ணாக்கர்
வேட்டுக்கு மருந்தாய் என்றும்
விளங்கிய வாணி தாசர்
கேட்டுத்தான் செல்ல வேண்டும்
கேளாமற் போக லாமோ?
வாட்டிடும் துயரம் போக
வருவாரோ கவிதைக் கோமான்?

எண்ணிலா இரங்கற் பாடல்
இயற்றிய கவிஞ னுக்கா
கண்ணிலாக் கால மே! நீ
கவிதையால் இரங்கல் சொல்லப்
பண்ணினாய்! சீச்சி!! இந்தப்
பழியினைத் துடைப்பா ரில்லை!
கண்ணிய மாகச் சொல்வேன்
கவிஞனை அழைத்து வா! வா!!

—புலவர் அரிமதி தென்னகன், புதுவை.

* "காஞ்சி" மலர் 1; இதழ்; 18-8-74 ப. 394.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்

முதன்மை நூல்கள்

1. இனிக்கும் பாட்டு, வில்லி வெளியீட்டகம்: சென்னை-1 முதற் பதிப்பு, 1965.

2. இன்ப இலக்கியம் புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றம், புதுச்சேரி—1, இரண்டாம் பதிப்பு, 1979.

3. இரவு வரவில்லை, ஐயை பதிப்பகம், சேலியமேடு, புதுவை மாநிலம், முதற் பதிப்பு, 1963.

4. எழிலோவியம், புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றம், புதுச்சேரி, மூன்றாம் பதிப்பு, 1977.

5. எழில் விருத்தம், வில்லி வெளியீட்டகம், சென்னை—1 முதற்பதிப்பு, 1970.

6. குழந்தை இலக்கியம், வள்ளுவர் பண்ணை, சென்னை—1. முதற் பதிப்பு, 1959.

7. கொடி முல்லை, மலர் நிலையம், சென்னை—1 இரண்டாம் பதிப்பு, 1958.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. சிரித்த நுணா, ஐயை பதிப்பகம், சேலியமேடு, புதுவை மாநிலம், முதற் பதிப்பு, 1963.

9. தமிழச்சி, மலர் நிலையம், சென்னை—1, இரண்டாம் பதிப்பு, 1956.

10. தீர்த்த யாத்திரை, வள்ளுவர் பண்ணை, சென்னை—1, முதற் பதிப்பு, 1959.

11. தொடுவானம், திராவிடன் பதிப்பகம், வேலூர், முதற் பதிப்பு, 1952.

12. பாட்டரங்கப் பாடல்கள், பாரி நிலையம், சென்னை—1, முதற் பதிப்பு, 1972.

13. பாட்டுப் பறக்குமடா, ஐயை பதிப்பகம், சேலியமேடு, புதுவை மாநிலம், முதற் பதிப்பு, 1963.

14. பொங்கற் பரிசு, அன்பக வெளியீடு, உறையூர், திருச்சி—3, முதற் பதிப்பு, 1958.

15. வாணிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, மலர் நிலையம், சென்னை—1, முதற் பதிப்பு, 1956.

16. வாணிதாசன் கவிதைகள், இரண்டாம் தொகுதி, வாணிதாசன் பதிப்பகம், சேலியமேடு, புதுவை மாநிலம், முதற் பதிப்பு, 1981.

17. வாணிதாசன் கவிதைகள், மூன்றாம் தொகுதி, வாணிதாசன் பதிப்பகம், சேலியமேடு புதுவை மாநிலம், முதற் பதிப்பு, 1984.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணை நூல்கள்

1. குழந்தை, புலவர், 'யாப்பதிகாரம்' சென்னை, 1959.

2. கைலாசபதி, டாக்டர் க, மற்றும் முருகையன், இ. 'கவிதைநயம்' பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1976.

3. குருசாமி, ம. ரா. போ. மற்றும் பலர் (மொழி பெயர்ப்பாளர்) 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' பாரி நிலையம், சென்னை-1 முதற் பதிப்பு 1964.

4. சீனிவாசன், டாக்டர் ரா., 'சங்க இலக்கியத்தில் உவமைகள்' அணியகம், சென்னை. 30, முதற் பதிப்பு, 1973.

5. சுப்பிரமணியன், டாக்டர் ச. வே., 'கம்பன் இலக்கிய உத்திகள்' மெய்யம்மை பதிப்பகம், காரைக்குடி, 1982.

6. தண்டியலங்காரம்; சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; சென்னை, 1956.

7. தேசிகன், ரா. ஸ்ரீ 'கவிதைக்கலை' பாரதி தமிழ்ச் சங்க வெளியீடு, கல்கத்தா, 1967.

8. தொல்காப்பியம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1956.

9. பரமசிவானந்தம், அ. மு. 'சமுதாயமும் பண்பாடும், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை, 1962.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10 பரமசிவானந்தம், அ.மு, 'கவிதையும் வாழ்க்கையும், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை, 1981.

11. பாலசந்திரன், டாக்டர் சு. 'இலக்கியத்திறனாய்வு, அணியகம், சென்னை, 1679.

12. இராமலிங்கம், டாக்டர் மா. 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' தமிழ்ப் புத்த காலயம், சென்னை, 1977.

13. வரதராசனார், டாக்டர் மு., 'இலக்கியத்திறன்' தாயக வெளியீடு, சென்னை, 1959.

14. வள்ளியப்பா, அழ. 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' பாரி நிலையம், சென்னை, 1981.

மலர்கள்: இதழ்கள் 7723

15. கவிஞரேறு வாணி தாசன் நினைவு மலர், புதுவைத் 'தமிழ்க்' கவிஞர் மன்றம் புதுவை, 1979.

16. தமிழ் மலர் (மலேசிய இதழ்), 10-3-1968.

17. தென்றல் (இதழ்) 6-6-89.

ஆங்கில நூல்கள்

18. Chakravorty, B. C. 'William wordsworth, Kitab Mahal' Allahabad, First Edition, 1972.

19. Mathew Arnold 'Discussions of William wordsworth' Boston, 1965.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Accession
Class
Cat
Tag
Checked

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



முனைவர் மு. பி. பா.

உன்னொரு புன்னகையில்
ஒருகோடி ரோஜாப்பூ
மண்சிந்தி விழும்அழகில்
மயங்கிய பேர்களுண்டு...

அன்பில் நனைத்தெடுத்த
அழகான வார்த்தைகளால்
உன்னிடத்தில் கட்டுண்டு
உள்ளவர்கள் சிலருமுண்டு...

சிலநேரம் வகுப்பறையில்
சின்னஇடம் கிடைத்தாலும்
பெரியாரை அண்ணாவை
பேசும்உன் உதட்டாலே
படம்வரைந்து மாட்டுகின்ற
பணிதெரிந்த ஓவியன்நீ !
பாவேந்தர் வழிவந்த
பாட்டுப் பறவையும்நீ !!

— **கவிஞர் சுரேசன்**
எம்,ஏ.,(எம்ஃபில்)

Wrapper Printed at
Eskay Art Printers, Madras-5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar